www.padippakam.com


# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

ாத இதழ் 486 — 1998 மார்ச் — ரூபா 8.00


உள்ளே


- யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்: பின்னணியும் பெறுபேறுகளும் ..... 2
- விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களின் விடுதலையும் ......................... 6
- தலதா மாளிகை மீதான விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத் தாக்குதலும் சிங்கள இனவாத தீவைப்புக்களும் ................ 7
- இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ..... 8-9
- தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்த விதம் ................................ 10-11
- ஆளும் வர்க்கத்தின் மோசமான நெருக்கடியை அம்பலமாக்குகின்றது ......... 12
- தோழர் கீர்த்தி பாலசூரிய 10வது நினைவு தினம்: ...................................... 13


**சுதந்திரக் கொண்டாட்டம்? 50வருடகால பிற்போக்கு மோசடி!**
3–5, 15–17 பக்கம்

# தாட்டத் தொழிலாளர் பாராட்டப் படிப்பினைகளை பற்று முன்நோக்கிச் செல்வோம்!

சம்பளப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து, பெப்பிரவரி 14ம் திகதியில் இருந்து, தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தை முடித்துக் கொள்ள தோட்டக் கம்பனிகளுடனும் அரசாங்கத்துடனும் உடன்படிக்கை செய்து கொண்ட சகல தொழிற்சங்க அதிகாரத்துவங்களுக்கும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் இலட்சக் கணக்கான தொழிலாளர் மேலும் மூன்று நாட்கள் வேலைநிறுத்தத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர். தமது உரிமைகளின் பேரில் போராட தொழிலாளர் காட்டிய திடசங்கற்பத்தை பெரிதும் மதிக்கும் சோசலிச சமத்துவக் கட்சி தோட்டப் போராட்டத்தின் ப்டினையை கற்றுக் கொண்டு காலத்துக்கு தயார் செய்வோம் தோட்டத் தொழிலாளர்களை டுமன்றி அனைத்து ழிலாளர்களையும் வேண்டு றது.

முதலாளிகளுக்கும் தொழிற் சங்கங்களுக்கும் இடையேயான உடன்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெப்பிரவரி 14ம் திகதி வேலைக்குச் செல்லாத தொழிலாளர் எண்ணிக்கை ஐந்து இலட்சம். அறிக்கைகளின்படி பெப்பிரவரி 16 திங்கட்கிழமையும் 2 இலட்சம் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்தனர். தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்ததன் பேரிலான தமது ஆத்திரத்தைக் காட்டிக் கொள்ளும் விதத்தில் சகல தோட்டத் தொழிற்சங்கங்களதும் முக்கியஸ்தராகச் செயற்பட்ட தொண்டமானின் கொடும்பாவியை தொழிலாளர்கள் எரித்தனர். அனேக தோட்டங்களில் தொழிலாளர்கள் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் இருந்து விலகுவதாகத் தெரிவித்ததோடு சில தோட்டங்களில் அங்ஙனம் விலகும் இராஜினாமா பெட்டிசங்களில் கையொப்பம் இட்டு வருவதாகவும் செய்திகள வந்துள்ளன. எனினும் தொழிலாளர்கள் பெப்பிரவரி 17ம் திகதி திரும்பவும் வேலைக்கு செல்ல நேரிட்டது. தொழிலாளர்கள் என்னதான் உயர்ந்த மட்டத்திலான போர்க் குணத்தைக் காட்டிக் கொண்டாலும் இன்று அவர்களின் உரிமைகளை வெற்றி கொள்ள மாற்று முன்நோக்கும் தலைமையும் அவசியமாகி உள்ளது தெளிவாகியுள்ளது.

தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் பேரிலான தொழிலாளர்களின் கோபம் கொதித்துக் கொண்டிருந்த ஒரு நிலையில் தோட்ட கம்பனிகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைத் தாமும் எதிர்ப்பதாகவும் தொழிலாளர்களுக்கு ரூபா.105 சம்பளம் கிடைக்க வேண்டும் எனவும் கூறிக் கொண்டு மலையக மக்கள் முன்னணியின் பீ.சந்திரசேகரனும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் காங்கிரசின் எம்.எஸ். செல்லச்சாமியும் தொழிலாளர்களிடையே பாய்ந்தனர். இந்த இரண்டு மோசடிப் பேர்வழிகளது தொழிற்சங்கங்களும் பெப்பிரவரி 13ம் திகதி முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த அலரி மாளிகைக்குள் நுழைந்து, காட்டிக் கொடுக்கும் உடன்படிக்கைக்கு இணங்கியவையாகும். தொழிலாளர்களை குழப்பியடிக்கப் பாய்ந்த இந்த இருவரும் பெப்பிரவரி 16ம் திகதி நாளையில் இருந்து வேலைக்குத் திரும்புமாறு

19ம் பக்கம் பார்க்க




**உலக சோசலிஸ்ட் வெப் நிலையம்**

*உலக சோசலிஸ்ட் வெப் நிலையம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இன்டர்நெட் நிலையம் கடந்த பெப்பிரவரி 14 ம் திகதி அமைக்கப்பட்டுள்ள செய்தியை வாசகர்களுக்கும் தொழிலாளர். ஒடுக்கப்படும் மக்கள் இளைஞர்களுக்கும் அறிவிப்பதில் சோசலிச சமத்துவக் கட்சி பெருமகிழ்ச்சி அடைகின்றது. இது பற்றிய மேலதிக விபரங்கள் எமது அடுத்த தொழிலாளர் பாதையில் வெளிவரும்.*

# சாஸ்திரிய மார்க்சிசத்தின் மறுமலர்ச்சியில் ஒரு புதிய மைற்கல்

1998 ஜனவரி முற்பகுதியில் அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியினால் சிட்னியில் நடாத்தப்பட்ட அனைத்துலக கோடைப் பாடசாலை அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தினுள் சாஸ்திரிய மார்க்சிசத்திற்கு புனர்வாழ்வு அளிக்கும் 'போராட்டத்தில் ஒரு மைற்கல்லை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

இந்தப் பாடசாலை சிட்னியில் ஜனவரி 3 10 வரை 'மார்க்சிசமும் இருபதாம் நூற்றாண்டின் அடிப்படைப் பிரச்சினைகளும்' என்ற தலைப்பில் நடைபெற்றது. அத்தகைய ஒரு அனைத்துலக கருத்தரங்கம் முதற்தடவையாக ஒழுங்கு செய்யப்பட்டது இதுவே முதற் தடவையாகும். இதனை உலக ட்ரொட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு ஒழுங்கு செய்திருந்தது.

பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியுடன் 1985 86ல் ஏற்பட்ட பிளவினைத் தொடர்ந்து அனைத்துலக குழு மேற்கொண்ட ஆழமான கோட்பாட்டு, புத்திஜீவி, அரசியல் அபிவிருத்திகளுக்கான ஆழ்மான சாட்சியங்களை இது வழங்கியது.

எட்டு நாட்களாக உலகக் கட்சியின் முன்னணி அங்கத்தவர்களாலும் அத்தோடு ருஷ்ய மார்க்சிச வரலாற்றாசிரியர் பேராசிரியர் வடிம் றொகோவினாலும் நிகழ்த்தப்பட்ட விரிவுரைகள் நீண்ட கால கோட்பாட்டு ஆய்வுகளின் தெளிவான விளைவுகளாக விளங்கியதோடு மட்டுமல்லாது அவை அதிர்ச்சி தருபவையும் ஒளிபாய்ச்சுவனவும் அசலானவையும் சிந்தனையைத் தூண்டுபவையாயும் விளங்கின.

மொத்தத்தில் இந்த விரிவுரைகள் 20பதாம் நூற்றாண்டுக்கால மாபெரும் மூலோபாய படிப்பினைகளை ஆய்வு செய்வதிலும் உள்ளீர்ப்பதிலும் ஒரு தீர்க்கமான பங்களிப்பை செய்தன. அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு சோசலிச கலாச்சாரத்தின் மறுபிறப்புக்கு அந்தப் பணி இன்றியமையாததாக விளங்குகின்றது.

இன்றைய கொதிக்கும் பிரச்சினைகளுக்கு சமூக சமத்துவமின்மையின் வளர்ச்சி, ஆழம் கண்டுவரும் பொருளாதார நெருக்கடி, சமூகத்தின் கலாச்சார மட்டத்தின் பின்னடைவு, தொழிலாளர் இயக்கத்தில் இருந்துவரும் அரசியல் பாரிசவாதம் பதிலளிக்க ஒரு முன்நோக்கினை விருத்தி செய்வதற்கு மார்க்சிசத்தின் இந்த மறுமலர்ச்சி அடிப்படையானது என்பதே இந்தப் பாடசாலையினை வழிநடாத்தும் மைய எடுகோளாக விளங்கியது.

விரிவுரை ஒவ்வொன்றும் ஸ்டாலினிசத்தினதும் சமூக ஜனநாயகத்தினதும் தேசியவாத இயக்கங்களதும் மாபெரும் காட்டிக் கொடுப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு பதிலீடு இருந்து கொண்டுள்ளதை சுட்டிக்காட்டின: லியோன் ட்ரொஸ்ட்கியினாலும் நான்காம் அகிலத்தினாலும் முன்னெடுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தினுள் சோசலிச நனவினை

18ம் பக்கம் பார்க்க

# மெரிக்கா ஈராக்கின் மக்கள் டுகொலைக்கு ஆயத்தமாகின்றது

மெரிக்க ஏகாதிபத்திய ள் ஈராக்குக்கு எதிராக இனத்தின் வரலாறு ராத மக்கள் படுகொலை த்துக்கு ஆயத்தமாகி றனர். குருஷ் ஏவுகணை கொண்ட 300க்கும் ான விமானங்களுடனான ம் தாங்கிக் கப்பல்கள் ட சமுத்திரத்தில் ப்பட்டுள்ளன. அத்தோடு னுள் ஆக்கிரமிப்பு யுத்த க்கைகளில் ஈடுபடுத்து கன 6000படைப் பிரிவுகளும் ானிய எம்.எம்.எஸ். யைச் சேர்ந்த அதிரடித் தல விமானங்களைக் கொண்ட யுத்தக் கப்பல்கள் பலவும் குவைட்டை நெருங்கிக் கொண்டுள்ளன. ஒரு சில மணித்தியால அறிவித்தலுடன் ஈராக்கின் ஜனநெருக்கடி மிகுந்த பகுதிகளில் குண்டு மழை பொழிவதற்கு அமெரிக்க விமானப் படைகள் உஜார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க தேசிய வானொலியில் பேசிய அண்டரூ மிசெல், இந்த யுத்தத்தில் அமெரிக்கர்கள் இலட்சக் கணக்கான ஈராக்கிய யுத்த காயமடைந்தவர்களை எதிர்பார்க்க முடியும் எனக் கூறியுள்ளார். நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையாளரான விலியம் சகாயரின் எழுதுகையில் "அமெரிக்கத் தாக்குதல்களுக்கு எதிராக ஈராக் நடாத்தும் எதிர்த் தாக்குதல் அணுஆயுத பாவனைக்கு விடுக்கும் அழைப்பாக அமையும்" என்றுள்ளார்.

ஈராக்கினுள் அழிவுநிறைந்த அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் பாவிக்கப்படுவதாகவும் கூச்சலிடும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் அதனால் ஈராக்கினுள் யுத்தத் தலையீட்டுக்குத் தமக்கு உரிமை இருந்து கொண்டுள்ளதாகக் கூறிக்

(17ம் பக்கம் பார்க்க)

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

படிப்பகம்

www.padippakam.com


தொழிலாளர் பாதை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

# யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்: பின்னணியும் பெறுபேறுகளும்

ஜனவரி 29ம் திகதி வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெற்ற சூழ்நிலையும் தேர்தலின் பெறுபேறுகளும் இனவாத யுத்தத்தின் மூலம் ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கொடிய பேரழிவுகளையும் தமிழ் தேசிய இனத்தினரிடையே பொதுஜன முன்னணி அரசாங்கம் பற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பந்தமாகவும் இருந்து வரும் கடும் எதிர்ப்பையும் காட்டிக் கொண்டுள்ளது.

இந்த உள்ளூராட்சி தேர்தல், யாழ்ப்பாணக் குடா நாடு உட்பட கிளிநொச்சி வரையும் இராணுவ காவல் நிலையங்களின் பிடிக்குள் இருந்து வரும் இராணுவ நிர்வாகத்தின் கீழ் இடம் பெற்றுள்ளது. ஒரு பத்திரிகையாளர் "இராணுவமும் பொலிசும் வாக்குப் பெட்டிகளை நிரப்ப வாக்குச் சீட்டுக்களைப் போடாமல்" மக்களை ஊக்குவித்ததை" காணக் கூடியதாக இருந்ததாக "குறிப்பிட்டுள்ளார்.இந்த "ஊக்குவிப்பு" பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அவசியங்களுக்கு பொதுமக்களைக் கீழ்ப்படுத்தும் தலையீடு அல்லாது வேறு என்ன?

1981ல் யாழ்ப்பாண ஜனத்தொகை 831100. 1998ன் பொதுவான நிலைமைகளின் கீழ் இந்த ஜனத்தொகை 1200000 ஆக இருந்திருக்க வேண்டும். யூ.என்.பி. பொது ஜன முன்னணி அரசாங்கங்களின் கொடிய இனவாத யுத்தத்தின் கொலைகள், மக்களின் புலம் பெயர்வு, வேறு பிராந்தியங்களுக்கான இடம்பெயர்வு காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று இருப்பது ஐந்து இலட்சம் ஜனத்தொகை மட்டுமே. பொதுஜன முன்னணி அரசாங்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டை கைப்பற்றிக் கொள்ளத் தொடுத்த கொடிய யுத்தத்தில் 5 இலட்சம் மக்கள் வன்னிப் பிராந்தியத்தை நோக்கி இடம் பெயர்ந்தனர் விடுதலைப் புலிகளின் ஒடுக்குமுறை நிர்வாகத்தின் கீழ் எதுவும் செய்து கொள்ள முடியாத நிலையில் இம்மக்களில் ஒரு பகுதியினர் திரும்பவும் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் முழுமனே விடுதலை செய்யப்பட்டதாக கூறிக் கொள்ளப்படும் யாழ்ப்பாண நகரமும் அயல் பகுதிகளும் ஒரு திறந்த சிறை முகாம் ஆகியுள்ளது. இந்தப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளால் நாசமாக்கப்பட்ட வீடுகளின் அழிபாடுகளையும் கீழ்ப்படுத்தி அமைக்கப்பட்ட பண்ட் நீளத்திற்கு இதனால் பொதுமக்கள் நுழைவதோ அல்லது வெளியேறுவதோ இந்த இராணுவ காவல் நிலையங்கள் அமைக்கப்பட்ட இடங்கள் ஊடாக மட்டுமே சாத்தியமாகியுள்ளது.

1985ல் யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 571486. ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில் அதன் அரைவாசிக்கும் குறைவான வர்க்காளர் 250000 மட்டுமே இருப்பதாக ஊகிப்பதாக தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். இதில் வாக்களித்துள்ளோர் தொகை 106464 . யாழ்ப்பாணம் திரும்பியுள்ள வாக்காளர்கள் அரைவாசிக்கும் குறைவு. 43வீதத்தினரே திரும்பியுள்ளனர். இதில் 14868 வாக்குக்கள் பழுதடைந்திருந்தன. இது நூற்றுககு 7 வீதமாகும். தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகளிடம் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி இதில் பெரும்பான்மையானவை வேண்டும் என்றே பழுதடையச் செய்யப்பட்ட வாக்குக்களாகும்.

யாழ்ப்பாணம் வந்துள்ள வாக்காளர்களில் அரைவாசிக்கும் கூடுதலானோர் வாக்களிக்காததற்கு காரணம், விடுதலைப் புலிகளின் பயமுறுத்தலே எனக் கூறுவது உண்மையை மூடி மறைப்பதாகும். வாக்களிப்பை பகிஷ்கரிக்கும்படி கோரி விடுதலைப் புலிகள் பொதுமக்களுக்கு எதிரான கண்டிப்பான தலையீடுகளில் ஈடுபடவில்லை. அல்லது அத்தகைய தலையீட்டை நடாத்த முடியாத சங்கடமான நிலைமையில் இருந்தது. ஐந்து தமிழ் முதலாளித்துவக் கட்சிகளது பிரச்சாரங்களும் இராணுவத்தின் "ஊக்குவிப்புக்களும்" இருந்த நிலையிலும் யாழ்ப்பாணம் திரும்பி இருந்த வாக்காளர்களில் பெரும்பான்மையான பகுதியினர் வாக்களிக்காது இருந்து கொண்டமைமை ஒரு வகையிலான மௌன தேர்தல் பகிஷ்கரிப்பு எனக் குறிப்பிடலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பீ.ஆர்.எல்.எப்., ஈ.பீ.டி.பி., டெலோ, புளொட் போன்ற தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் இனவாத யுத்தத்தின் மத்தியில் தமக்கு வாய்ப்பான ஒரு சமரசத்தை எதிர்பார்த்துக் கொண்டு இந்தத் தேர்தலை அணைத்துக் கொண்டன. ஆரம்பத்தில் இந்தக் கட்சிகள் "தேர்தலுக்கு உகந்த சூழ்நிலை இல்லாததால்" தேர்தலை கட்டி ஒத்திவைக்குமாறு கோரியிருந்தன. வெளியான தகவல்களின் படி ஜனாதிபதி இக்கட்சிகளின் தலைவர்களை நெருக்கியதோடு தமிழ் முதலாளித்துவக் கட்சிகள் போட்டியிடாது போனால் பொதுஜன முன்னணி போட்டியிடும் எனவும் அதன் வேட்பாளர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுவார்கள் என்ற தயாரிப்புக்களும் தமிழ் முதலாளித்துவக் கட்சித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஒரு குழப்ப நிலையை சிருஷ்டித்தது. இறுதியில் இந்த முதலாளித்துவக் கட்சிகள் "இராணுவ நிர்வாகத்தை சிவில் நிர்வாகம் "ஆக்கும். நப்பாசையை பரப்பும் வகையில் தேர்தலில் போட்டியிட நேரிட்டது.

## யுத்தத்தினால் மக்கள் சூன்யப் பிரதேசம்

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் அறிக்கை வெளியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம்.சிவசிதம்பரம், யாழ்ப்பாண மேயராகவுள்ள சரோஜினி யோகேஸ்வரன் "பழைய சுபீட்சத்தை நோக்கி யாழ்ப்பாணத்தை மீண்டும் இட்டுச் செல்வார்"எனவும் யாழ்ப்பாணம் நவீன நகரமாகும் எனவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கூறியுள்ளார். இராணுவத்தினதும் அரசாங்கத்தினதும் முண்டுகோலில் நின்று கொண்டுள்ள ஏனைய தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் யாழ்ப்பாணத்தில் "ஜனநாயகத்தை சிருஷ்டிப்பது" பற்றி வாயடித்துள்ளன. வாழ்க்கைத் தரம் நாசமாக்கப்பட்டு, வறுமையின் பிடிக்குள் தள்ளப்பட்டு . ஜனநாயக உரிமைகள் அடியோடு துவம்சம் செய்யப்பட்டுள்ள தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் மண்போட இந்த முதலாளித்துவக் கட்சிகள் முயல்கின்றன. இதன் மூலம் சிங்கள முதலாளித்துவ அரசாங்கத்தினதும் சிறப்பாக ஏகாதிபத்தியவாதிகளதும் உதவியோடு சுரண்டலுக்கான நிலைமைகளை இப்பகுதிகளில் மீண்டும் சிருஷ்டிப்பது இந்த தமிழ் முதலாளித்துவ கட்சிகளின் இலக்கு.

வலிகாமம் தெற்கில் 1985ன் புள்ளிவிபரங்களின் படி வாக்காளர் எண்ணிக்கை 41448. ஆனால் இதில் வாக்களித்தோர் நூற்றுக்கு 20வீதம் மட்டுமே. வலிகாமம் மேற்கில் வாக்காளர் எண்ணிக்கை 41856 ஆக இருந்த போதிலும் வாக்களித்தோர் 7956 பேர் மட்டுமே. அதாவது 17 வீதத்தினர் மட்டுமே. வல்வெட்டித்துறையின் 11128 வாக்காளர்களில் இத்தடவை வாக்களித்தவர்கள் நூற்றுக்கு 11வீதத்தினர் மட்டுமே. இவை வாக்களிப்பின் வீழ்ச்சியை மட்டும் காட்டவில்லை. இனவாத யுத்தத்தினால் இப்பகுதிகள் மக்கள் சூன்யப் பிரதேசங்களாக மாறி உள்ளதையும் காட்டுகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தின் எதிரில் பிரிவினை யுத்தத்தில் இறங்கிக் கொண்டு, ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டை விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கின்றனர். மறுபுறத்தில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக பிரச்சினைகளை தீர்க்கவோ அல்லது சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கவோ அல்லது அதற்கான தலைமையை வழங்கவோ இக்கட்சிகள் இலாயக்கற்றவை என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவை எதிர்பார்ப்பது எல்லாம், ஏகாதிபத்திய சுரண்டலை ஊர்ஜிதம் செய்யும் ஏஜன்சிகளாக மாறுவதன் மூலம் தமது முதலாளித்துவ சலுகைகளை கட்டிக் காக்கவே. இந்த முதலாளித்துவக் கட்சிகளது காட்டிக் கொடுப்பினாலும் பிற்போக்கு வேலைத்திட்டத்தினாலும் தமிழ் மக்கள் பேரழிவுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பியும் அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபட்டிருப்பது தமிழ்த் தேசிய இனத்தினரதோ அல்லது ஏனைய மக்கள் பகுதியினரதோ ஜனநாயக உரிமைகளை கையளிப்பதற்கு அல்ல. வடக்கிலும் தெற்கிலும் தமிழ், சிங்கள தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளவும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு விற்றுத்தள்ளவும் முதலாளித்துவ ஆட்சியின் ஒடுக்குமுறை நிலைமைகளை மேலும் அபிவிருத்தி செய்வதே அவர்கள் திட்டம். இந்த இலக்கில் அனைத்து பிற்போக்கு சக்திகளையும் ஒரு அணியில் திரட்டுவதில் பொதுஜன முன்னணி அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

சோசலிச சமத்துவக் கட்சி வடக்கில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும்படி கோரியது. இராணுவ ஆட்சியின் கீழ் வெஜனங்களை பிராந்தியங்களில் இருந்து ஓட்டிக் கலைத்துவிட்டு நடாத்திய இந்தத் தேர்தலைத் தூக்கிப் பிடித்த சகலரும் பொதுஜன முன்னணியின் பொய்ப் பிரச்சாரத்தின் எதிரில் பொதுமக்களைக் குழப்பியடிக்க செயற்பட்டனர். தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் இளைஞர்கள் இனவாத யுத்தத்துக்கும் பிரிவினைவாதத்துக்கும் எதிராக ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்ய ஓரணியில் திரட்டப்பட வேண்டும். சிங்கள தமிழ் முதலாளித்துவக் கட்சிகளில் இருந்தும் அவற்றுக்கு ஆதரவாக ஒப்பாரி வைக்கும் பல்வேறு சந்தர்ப்பவாதிகளில் இருந்தும் அரசியல் ரீதியில் பிரிந்து ஒன்றுபடுவது அவசியம். அதற்கான ஒரே வேலைத்திட்டம், சிங்களம் தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கம் அனைத்துலகவாத ஐக்கியத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டு ஏனைய ஒடுக்கப்படும் மக்களின் தலைவனாக கிளர்ந்து எழுவதன் மூலம் சிறிலங்கா ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை ஆட்சிக்குக் கொண்டு வர போராடுவதேயாகும்.

## அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

* அமெரிக்கா: http://www.socialequality.com
* அவுஸ்திரேலியா: http:www.workersnews.flex.com.au
* பிரித்தானியா: http:/www.socialequality.org.uk
* கனடா: http://www.egalitesociale.com
* ஜேர்மன்: http://gleichheit.de

படிப்பகம்

www.padippakam.com



# சுதந்திரக் கொண்டாட்டம்? 50வருடகால பிற்போக்கு மோசடி !

## சோசலிச சமத்து வக் கட்சியின் அரசியல் குழுவின் அறிக்கை-1998 ஜனவரி 23

இலங்கை சுதந்திரத்தின் 50வது ஆண்டு உதயமாகி உள்ளதாகக் கதை அளந்து கொண்டு, பொதுஜன முன்னணி அரசாங்கம் 80கோடி ரூபா அரச நிதியை வீணடித்து 1998 பெப்பிரவரி 4ல் கண்டியில் ஒரு பெரும் கார்ணிவேலை நடாத்த ஆயத்தமாகி வருகின்றது. 150 வருடகாலம் இலங்கையை அடிமைப்படுத்திக் கொண்டிருந்த பிரித்தானிய இளவரசர் சார்ள்சும் இன்னும் பல வெளிநாட்டு விருந்தினர் கும்பல்களும் இலங்கை முதலாளிகளுடன் சுதந்திரமாக மகிழ்ச்சியைக் கொண்டாடி குதூகலிக்க இலங்கையில் காலடி வைக்க உள்ளனர். இந்த ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் கையாட்களும் இந்நாட்டு இனவாத யுத்தத்தினதும் ஒடுக்குமுறையினதும் தீப்பிளம்பிலும் பொதுமக்களையும் வளங்களையும் சுரண்டுவதன் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியினாலும் உடம்பைச் சூடேற்றிக் கொண்டு, சுதந்திரமாக வெற்றிப் பானத்தை பருகுவார்கள். இதற்கிடையே சுதந்திரத்தைக் கொண்டாடுவதற்கான நிஜ உரிமை தமக்கே உள்ளதாகக் கூறி யூ.என்.பி.முதலாளிகள் பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கு ------ ஆனால் இலங்கையின் முதலாளி வர்க்கத்தின் பிற்போக்கு ஒருமைப்பாட்டை எடுத்துக் காட்டும் வகையில் யூ.என்.பி.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பெப்ரவரி 4ம் திகதி கண்டியில் இடம்பெறும் களியாட்டில் காலடி வைக்க உள்ளார்.

முதலாளிகளின் உணர்வுகள் என்னவாக இருந்த போதிலும் இந்நாட்டு ஒடுக்கப்படும் மக்களுக்கோ இந்த 'சுதந்திரதின பொன் விழா'வையிட்டு எந்த விதமான அக்கறையுமே கிடையாது. அவர்களிடையே அரசியல் சுதந்திரம் வழங்குவது பொருளாதார சுதந்திரத்தை வென்றெடுப்பது ஆதியன பற்றி எல்லாம் வம்பளக்கும் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தையிட்டு நியாயமான ஆத்திரமும் வெறுப்பும் இருந்து கொண்டுள்ளது.

கடந்த 50 வருடங்களாக இடம்பெற்றிருப்பது சுதந்திரத்தை வெற்றி கொண்ட மக்களுக்கு உரித்தாக வேண்டிய வகையில் இந்நாட்டு மக்களை நீதியினதும் சமத்துவத்தினதும் படிக்கட்டு வழியாக உச்சிக்கு இட்டுச் சென்றதா? ஒருபோதும் இல்லை. கடந்த 50 ஆண்டுகளாக இடம்பெற்றிருப்பது பொதுமக்கள் காலனித்துவத்திடம், இருந்தும் ஏகாதிபத்தியத்திடம் இருந்தும் சுதந்திரத்தை பெற்றுத் தர முடியாத போது இலங்கை முதலாளி வர்க்கம் அம்மக்களை அநீதியினதும் அசமத்துவத்தினதும் ஆதாள பாதாளத்தில் தள்ளி வீழ்த்தியதே. அன்று செய்ததும் இன்று தொடர்ந்து செய்வதும் எதிர்கால சுதந்திரத்தினை பூர்த்தி செய்யும் பேரில் வெற்று வாக்குறுதி நோட்டுக்களைத் திரும்பத் திரும்ப வழங்கியதேயாகும். 1998 ஜனவரி 1ம் திகதி முதலாளி வர்க்கத்தின் நாற்றம் கண்ட இசைத்தட்டுச் சங்கீதத்தை இசைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க "வறுமை, வேலையின்மை, அடிப்படை வசதிகளின்மையை ஒழித்துக் கட்டி நிஜ பொருளாதார சுதந்திரத்தை உருவாக்க" அரசாங்கம் போராடி வருவதாகக் குறிப்பிட்டார்.


### சுதந்திரத்தின் அரங்கு

முதலாளி வர்க்கம் நினைவு கூரப் போகும் சுதந்திரத்தின் அரங்கு இன்றைய தருணத்தில் இந்நாட்டில் வேட்டையாடப்பட்டுவரும் மகளிரும் ஆடவரும் அவர்களின் பிள்ளைகளும முகம் கொடுக்கும் நிஜ நிலைமையை அம்பலப்படுத்துகின்றது.

இலங்கையின் முதலாளி வர்க்கத்தின் அடிப்படைக் கொள்கை இலாபமான உழைப்பைச் சுரண்டுவதற்கு வர்த்தகப் பண்டங்களாக மக்களையும் வளங்களையும் ஏகாதிபத்திய ஏகபோகங்களுக்கு விற்றுத் தள்ளுவதாக உள்ளது. பொதுமக்களை இந்த மரணக் குழிக்கு இட்டுச் செல்வதற்கான பதில் உபகாரமாக அதில் கலந்து கொண்டு கிடைக்கும் எலும்புத் துண்டை நக்கிக் கொள்வதன் மூலம் உயிரைப் பிடித்துவைத்துக் கொள்வதே முதலாளி வர்க்கத்தின் கொள்கையாக உள்ளது. இந்நாட்டின் அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் ஏகாதிபத்திய அரசாங்கங்களதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களாலுமே தீர்மானம் செய்யப்படுகின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கென தனியாக முதலீட்டு வலயங்களை அமைத்துக் கொடுத்ததோடு மட்டும் அல்லாது முழுத் தீவுமே ஒரு சுதந்திர வர்த்தக வலயமாக உள்ளது.

1977ல் நாட்டில் முழு முடிவுப் பொருள் ஏற்றுமதியில் வெளிநாட்டுக் கம்பனிகள் நூற்றுக்கு 7 வீதத்தினைக் கொண்டிருந்தன. 1996ல் முதலீட்டு சபையின் சுதந்திர வர்த்தக வலய சலுகைகள் பெற்ற வெளிநாட்டுக் கம்பனிகள் செய்த ஏற்றுமதி மட்டும் முழு ஏற்றுமதியில் நூற்றுக்கு 58 வீதமாக உயர்ந்தது. இது வெளிநாட்டு மூலதனத்தின் ஆதிக்கத்தை எடுத்துக் காட்டியது. அரசாங்கத் துறையில் இன்னமும் தனியார்மயமாகாது எஞ்சியிருப்பது இரண்டொரு திணைக்களங்களும் ஒரு சில கூட்டுத்தாபனங்களும் வங்கிகளுமே. 28 கிராமங்களின் 12000 குடும்பங்களையும் 2600 வீடுகளையும் துடைத்தெறிந்து கட்டி எப்பாவெல பொஸ்பேட் வைப்பையும் பொதுஜன எதிர்ப்பை நசுக்கித் தள்ளி, 42 கோடி டாலர்களுக்கு அமெரிக்கக் கம்பனிக்கு விற்றுத் தள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் போரிட்டு வருகின்றது. இது இலங்கையின் முதலாளி வர்க்கம் சுதந்திரம் எனப்படுவதன் சகல போர்வைகளையும் களைந்து எறிந்து விட்டு ஏகாதிபத்திய மூலதனத்தின் கொம்பிரதோர் ஏஜன்சியாக மாற்றமடைந்துள்ள விதத்தைக் காட்டிக் கொண்டுள்ளது.

ஏகாதிபத்திய அமைப்பினதும் இலங்கை முதலாளி வர்க்க ஆட்சி முறையின் கீழும் உலகப் பொருளாதாரத்தின் பூகோளமயமாக்கத்துடன் இலங்கை ஒன்றிணைக்கப்பட்டு வருகின்றது. இது பொதுமக்களின் வாழ்க்கைத் தரங்களும் ஜனநாயக உரிமைகளும் துடைத்துக்கட்டப்பட்ட வண்ணமே இடம் பெறுகின்றது. 1992-1996 வரையில் மட்டும் தனியார்மயத்தினாலும் கதவடைப்பினாலும் அரை-அரசாங்கத் துறையைச் சேர்ந்த நிறுவனங்களின் தொழில்களில் நூற்றுக்கு 42 வீதம் யூ.என்.பி. பொதுஜன முன்னணி அரசாங்கங்களால் ஒழித்துக்கட்டப் பட்டுள்ளது. அரசாங்க, தனியார் துறைகளில் "நிரந்தர தொழில் "நிலைமைகள் ஒழித்துக் கட்டப்பட்டு ஒப்பந்த, அமைய தொழில் முறைகள் இன்று புகுத்தப்பட்டுள்ளது. வேலைத் துரிதப்படுத்தல், சேவை நிலைமைகள் வெட்டு, ஜனநாயக உரிமைகள் ஒழிப்புக்களும் வேலைத்தலங்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.



எஸ். டப்ளியூ. ஆர்.டி. பண்டாரநாயக்க-டி.எஸ்.சேனநாயக்க

விவசாயிகளுக்கு எதிரான தாக்குதல்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் 1998 வரவு செலவுத் திட்டத்தில் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்த வரவு செலவுத் திட்டப் பிரேரணைகளின் கீழ் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் அவற்றின் ஏஜன்சியான உள்நாட்டு கம்பனிகளும் நிலங்களை நூற்றுக்கு நூறுவீதம் வரிச் சலுகைகளுடன் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு பெறும் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் முழு விவசாயிகளும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் கூலி அடிமைகளாக மாற்றப்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இலவசக் கல்வியும் இலவச சுகாதார சேவையும் பொதுஜன நலன்புரி சேவைகளும் அடியோடு ஒழித்துக் கட்டப்படுவதோடு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த வரிகள் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களின் இலாப மூட்டைகளை வீங்க வைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. 1960பதுகளில் கல்விக்கான அரசாங்கத்தின் செலவு மொத்த தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 4.08 வீதமாக விளங்கியது. 1996ல் இது நூற்றுக்கு 2.6வீதம் வரை வெட்டிச் சரிக்கப்பட்டுள்ளது. 1960பதுகளில் சுகாதார செலவுக்கான அரசாங்கச் செலவு மொத்த தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 2.3 வீதமாக விளங்கியது. 1996ல் இது 1.6வீதம் வரை வெட்டிச் சரிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித அபிவிருத்தி நிலையத்தின் 1996 அறிக்கையின்படி இலங்கை வறுமையில் வாடும் 78 நாடுகளில் 22ம் இடத்தில் இருந்து கொண்டுள்ளது. இலங்கை ஜனத்தொகையில் நூற்றுக்கு 43 வீதத்தினருக்கு பாதுகாப்பான நீர் கிடையாது. 5வயதுக்கு குறைந்த பிள்ளைகளில் நூற்றுக்கு 38 வீதத்தினர் போஷாக்கின்மையால் வாடுகின்றனர். பின்தங்கிய நாடுகளில் ஒரு மனிதனுக்கு அவசியமான குறைந்தபட்ச கலோரி அளவு 2253 ஆகும். அதன் அர்த்தம் இந்த நாடுகளில் வறிய மக்கள் படுமோசமான போஷாக்கின்மையால் வாடுகின்றனர் என்பதாகும். சிறிது காலத்துக்கு முன்னர் நசுக்கியதாக எனப் புகழ்பெற்ற மலேரியாவும் காச நோயும் உயிர் கொல்லி காய்ச்சல்களும் தொடர்ச்சியான கொலராவும் புதிய நோயான எயிட்சும்(Aids) பரந்த அளவில் பரவத் தொடங்கி உள்ளது.

உலகளாவிய ரீதியில் முதலாளித்துவ அமைப்பின் நாற்ற மெடுப்பின் ஒரு வெளிப்பாடான போதைப் பொருள் இயக்கம் 1987ல் இலங்கையில் 35000 மக்களை பலிகடாக்களாக்கி உள்ளது. 1993ல் இது 50000 ஆக உயர்ந்துள்ளது. 1996ல் இந்த எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டி செல்ல இடமுண்டு என பொலிஸ் போதைப் பொருள் தடைப் பிரிவு அறிக்கை செய்துள்ளது.

இலங்கையில் விலைமாதர் தொழிலில் இறங்கத் தள்ளப்பட்டுள்ள 6-14 வயதுக்கு இடைப்பட்ட பெண் பிள்ளைகள் 28000 பேர் இருப்பதாக "ஏஷியா வீக்" சஞ்சிகை உத்தியோகபூர்வமான அறிக்கைகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. கொழும்பு நகரில் மட்டும் 25000 இளம் பெண்கள் விலைமாதர் தொழிலில் இறங்கத் தள்ளப்பட்டுள்ளனர். இதில் நூற்றுக்கு 70வீதமானோர் தொழில் தேடி நகரங்களுக்கு வந்த கிராமப்புற யுவதிகள் என ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன.

தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை தரத்தை தவிடுபொடியாக்கும் வேகத்தைச் சுட்டிக்காட்டும் விதத்தில் 1988ல் 744.1ஆக இருந்த வாழ்க்கைச் செலவுச் சுட்டெண், 1994 ஏப்பிரலில் 1574க்கு உயர்ந்து 1997 டிசம்பரில் 2252.7க்கு பாய்ந்து கொண்டுள்ளது.

நாட்டினுள் சமூகத் துருவப்படுத்தல் உக்கிரம் கண்டுள்ளது. 1973ல் சமுதாயத்தில் உயர்ந்த வருமானம் பெறும் நூற்றுக்கு 10 சதவீதமானோர் தேசிய வருமானத்தின் நூற்றுக்கு 30வீதத்தை விழுங்கிக் கொண்டனர். 1985-86ல் இது தேசிய வருமானத்தின் அரைப்பங்கு வரை 49.3 வரை அதிகரித்தது. குறைந்த வருமானம் பெறும் நூற்றுக்கு 40வீதத்தினருக்கு 1973 தேசிய வருமானத்தில் கிடைத்தது நூற்றுக்கு 15.1 வீதமே. 1985-86 அளவில் அது நூற்றுக்கு 7.1 ஆக வீழ்ச்சி கண்டது. 1997ல் ரூபா.500, ரூபா.1000 பிச்சைக் காசு வழங்கும் "சமுர்த்தி" கொடுப்பனவு பெறும் 14 இலட்சம் குடும்பங்கள் இலங்கையில் இருந்தன. வறுமையில் வாடும் இன்னும் பல இலட்சக் கணக்கானோருக்கு இந்தக் கொடுப்பனவு வழங்குவது வெட்டப்பட்டுள்ளது. ஆனால் 1996ல் நூற்றுக்கு 11.6வீதம் இலாப வீதம் கொண்டிருந்த பெரும் பக்டரி முதலாளிகள் 1997ல் நூற்றுக்கு 14.9வீதமாக அதிகரித்துக் கொண்டனர்.

இந்த இலாப கொள்ளைக்கு பலியாகியுள்ள குடும்பங்களின் குழந்தைகளில் நூற்றுக்கு 45வீதமானோர் வறுமையில் வாழ்கின்றனர். 5-14 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளில் நூற்றுக்கு 14வீதமானோர் பாடசாலை செல்ல முடியாத நிலையில் இருந்து கொண்டுள்ளனர். வேலையற்றோர் எண்ணிக்கை இப்போது 10 இலட்சம் என அரசாங்கம் கூறிக் கொள்கின்றது. ஆனால் சரியான எண்ணிக்கையோ இதைவிட இரண்டு மடங்கு என்பதே பொதுவான அபிப்பராயம். இந்நாட்டில் வறுமை உட்பட்ட சமூகப் பிரச்சினைகளினால் நாளாந்தம் 47 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். இது உலகின் தற்கொலை வீதத்தில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.

சமூக ஆதாளபாதாளத்தில் பொது மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். சமூகக் குமுறல்களை நசுக்கித் தள்ள வடக்கு-கிழக்கு ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினரை இரத்தக் களரியில் தள்ள இனவாத யுத்தம் இடம்பெறுகின்றது. தென் மாகாணங்களில் இடம்பெறும் படுகொடூரமான ஒடுக்குமுறை இயக்கம் என்ற பாலம் மீதாக. இது இடம்பெறுகின்றது. 1997ம் ஆண்டின் இறுதியில் வெளியான புள்ளி விபரங்கள் இனவாத யுத்தத்தின் மூலம் 47000 பொதுமக்களும் இராணுவமும் விடுதலைப் புலிகளும் இறந்ததாகத் தெரிவித்துள்ளது. உண்மையில் கொலையுண்டவர்களின் எண்ணிக்கை இதைக்காட்டிலும் இரண்டு மடங்காகும். இன்னும் பல்லாயிரக் கணக்கானோர் யுத்தத்தினால் காயமடைந்தும் அங்கவீனர்களாகியும் உளளனர். அகதிகளாகியோர் எண்ணிக்கை 10 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. அந்த வகையில் நாட்டின் ஜனத்தொகையில் ஒவ்வொரு 18 பேருக்கும் ஒருவர் அகதியாகி உள்ளனர். அரசாங்கப் படைகளாலும் விடுதலைப் புலிகளாலும் வன்னிக் காடுகளுக்குள் கலைக்கப்பட்டு, தொற்றுநோய்களுக்கும் பட்டினிக்கும் பலியாகிக் கொண்டுள்ளோர் எண்ணிக்கை 4 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தென் மாகாணங்களில் வேலையற்ற இளைஞர்கள் இனவாத யுத்த படையாட்களாகச் சேர்க்கப்பட்டு தினமும் கொலைகளில் ஈடுபடவும் கொலையுண்டு போகவும் தள்ளப்பட்டுள்ளனர்.

இனவாத யுத்தத்தின் பேரில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ பொலிஸ்

4ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திரக் கொண்டாட்டம்?...

3ம் பக்கத் தொடர்ச்சி


மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை

குண்டர் படைகள் தென் மாகாணங்களில் பொதுமக்களை ஒழித்துக் கட்ட எந்த விதத்தில் ஈடுபட்டன என்பதை 1988 90 கிராமப்புற படுகொலைகளில் இலட்சக் கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டமை எடுத்துக் காட்டியது. தொழிலாளர்களதும் கிராமப்புற விவசாயிகளதும் மீனவர்களதும் இளைஞர்களதும் மாணவர்களதும் போராட்டங்களை நசுக்கித் தள்ள இனவாத யுத்தத்தின் பயங்கர கரம் நீண்டு வருவதைக் கண்டோம். யூ.என்.பி.அரசாங்கத்தின் பின்னர் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கம் தத்தமது உரிமைகளின் பேரில் விடுதலைப் போராட்டங்களிற்குக் கிளர்ந்து வரும் மக்களை இரும்புச் சப்பாத்துக்களால் நசுக்கித் தள்ள இனவாதத்தை தூண்டி வருகின்றது. இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத்துக்கு தயாராகி வருகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் இலங்கையின் முதலாளி வர்க்கமும் சுதந்திரம் எனப்படுவதன் பொன் விழாவை கொண்டாடுவது சுதந்திரம் பெற்றதாக அவர்கள் கூறிக் கொள்ளும் 1948 பெப்பிரவரி 04 ம் திகதி தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் தோன்றியுள்ள வரலாற்றுப் பிரச்சினைகள் இந்த வகையில் திட்டவட்டமான விதத்திலும் உக்கிரமான மட்டத்திலும் மீண்டும் ஒரு தடவை தலைநீட்டிக் கொண்டுள்ள ஒரு தருணத்திலாகும்.

## போலி சுதந்திரம்

முதலாளி வர்க்கம் 1948 பெப்பிரவரி 4ம் திகதி இலங்கைக்கு இரத்தம் சிந்தாது தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்தது என்ற ஒரு பெரும் நப்பாசை பரப்பப்பட்டுள்ளது. வருடா வருடம் முதலாளி வர்க்கத்தின் நிர்வாணக் கோலமும் மலட்டுத் தன்மையும் அம்பலமாகி வரும் நிலையில் "அன்று அரசியல் சுதந்திரம் கிடைத்தாலும் பொருள்ாதார சுதந்திரம் கிடைக்கவில்லை." எனவும் அன்று அரசியல் சுதந்திரத்தில் அரைப்பங்கைப் பெற்று, பின்னர் அது பூர்த்தி செய்யப்பட்டது எனவும் முதலாளிகள் எத்தனை தடவை ஒப்பாரியிட்டுள்ளனர்! பொருளாதார , சமூக தரித்திர நிலைமையில் இருந்து இன்றோ நாளையோ விடுதலை பெறுகின்றோம் எனக் கூச்சலிடாது கழிந்த ஆண்டுகளும் உண்டா!

1948ல் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இலங்கை முதலாளிகளின் கைகளில் அரசியல் அதிகாரத்தை கையளித்தது போலி சுதந்திரம் என ஈடாட்டம் இல்லாமல் அன்று கூறியிருந்தோர் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சித் தலைமையாக விளங்கிய இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியேயாகும். இந்த போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி என்பது மார்க்சிச ட்றொட்ஸ்கிசக் கட்சியாக சமசமாஜக் கட்சியை பரிணாமம் செய்து கொண்டு இந்தியாவின் ட்ரொட்ஸ்கிஸ்டுகளுடன் சேர்ந்து அமைக்கப்பட்ட ஒரு கட்சியாகும். அது இலங்கை உட்பட்ட இந்தியத் துணைக்கண்ட பிராந்தியத்தில் நான்காம் அகிலத்தின் பகுதியாக விளங்கியது. அந்த போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி 1948 பெப்பிரவரி 4ம் திகதி வெளியிட்ட அறிக்கையில் இலங்கையின் உழைக்கும் மக்களைப் பின்வருமாறு வேண்டிக் கொண்டது:

## "உண்மை சுதந்திரமா?அல்லது போலி சுதந்திரமா?"


"பெப்பிரவரி 4ம் திகதியை மங்கள ஒலி முழங்க அறிமுகம் செய்து வைக்கிறார்கள். அதைத் தொடர்ந்து வரும் விளையாட்டுக்களும் கூத்துக்களும் வாணவேடிக்கையுடன் நிறைவுபெறும். அக்காலப் பகுதியில் தேசாதிபதி மகாதேசாதிபதியாகி , இளவரசர் ஒருவர் வந்து போய், எமது நிதியில் இருந்து இலட்சக் கணக்கில் செலவழித்து இலங்கைக்கு "பிரித்தானிய பொதுநலவாய நாடுகள் ஒன்றியத்தினுள் முழுப் பொறுப்புள்ள அந்தஸ்து "கிடைத்துள்ளது. இதை எல்லாம் இந்நாட்டு மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கும் நிலைமை உள்ளதா?

"மேற்கண்ட கேள்விக்கு இந்திய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியின் பதில் தெளிவானதும் ஈடாட்டங்களுக்கு இடம் அற்றதுமான "இல்லை" என்பதேயாகும். எமக்கு சேனநாயக்க மன்க் மேசன் மூர் கூட்டினால் கொணரப்பட்டுள்ள புதிய அந்தஸ்தையிட்டு மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதற்கு எதுவும் கிடையாது. அவர்கள் ஆணைப் பேரிகை ஒலிக்க பிரகடனம் செய்யும் "சுதந்திரத்தில்" மக்கள் "மகிழ்ச்சி" அடைய எதுவும் கிடையாது. ஏன்? அவர்கள் பெற்றுக் கொண்டுள்ள புதிய நிலைமையானது சுதந்திரம் அல்லாதது மட்டுமன்றி பிரித்தானிய ஏகாதிபத்திய அமைப்பு , இலங்கையின் அடிமைத்தனத்தைப் பொருத்தும் இரும்புச் சங்கிலியின் "மோஸ்தரை" மாற்றுவது மட்டுமேயாகும்.அது இலங்கையின் உள்ளும் இலங்கையைப் பற்றியும் பிரித்தானிய ஏகாதிபத்திய அமைப்பு அந்த ஆட்சி முறையை கையாளப் பயன்படுத்தும் முறையை மாற்றி அமைப்பதுடன் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகும்."

அன்று முன்னேற்றம் கண்டிருந்த தொழிலாளர்களிடையேயும் ஒடுக்கப்பட்ட அனைத்து பொதுமக்களிடையேயும் பரந்து இருந்ததும் நிஜமானதாக இருந்ததுமான நிலைப்பாடு இதுவேயாகும்.1945ல் இ.போ.லெ.க.யில் இருந்து பிரிந்து மீண்டும் சமசமாஜக் கட்சி என்ற பெயரில் ஒரு அமைப்பை அமைத்துக் கொண்ட கலாநிதி .என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்தனா வேலியில் உராய்ந்து கொண்டிருக்கையில் இ.போ.லெ.க. முதலாளித்துவத்தின் மோசடி பிரச்சாரத்துக்கும் புதிதாகத் திணித்த ஏகாதிபத்திய சார்பு அரசுக்கும் எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட போராடியது. இ.போ.லெ.க. தலைவரான எஸ்.பி.திசாநாயக்க 1948 ஜூலை மாத 'போர்த் இன்டர்நஷனல்' (நான்காம் அகிலம்) சஞ்சிகைக்கு அனுப்பி வைத்த அறிக்கையில் அந்த அணிதிரள்வின் கட்டத்தை பின்வருமாறு அறிக்கை செய்கின்றார்:

"லங்கா சமசமாஜக் கட்சியும் அதன் கோட்பாட்டாளர்களும் சுதந்திரம் சம்பந்தமாக புதிய தெய்வீக கோட்பாட்டை கொண்டுள்ளார்கள். அவர்களின்படி இலங்கை "வெளிவாரி "அல்லாத "உள்வாரி" சுதந்திரத்தை (அது எதைத் தான் கருதினாலும்) பெற்றுக் கொண்டுள்ளது. அல்லது பொருளாதார (சுதந்திரம்) அல்லாத அரசியல் சுதந்திரத்தை பெற்றுக் கொண்டுள்ளது. அதன்படி பிரித்தானிய அரசாங்கத்தின் சுதந்திரத்தை வேண்டும், சுதந்திரத்தின் திசையில் நாம் முன்னெடுப்பதாகத் தோன்றுவதோடு ஊகிக்கக் கூடிய வகையில் ( மசோதாவுக்கு முன்னர் வந்ததும் அதற்கு முன்நிபந்தனை யானதுமான) பாதுகாப்பு, மற்றும் உடன்படிக்கைகளின் ஊடாக எம்மைப் பின்நோக்கி இழுத்துச் செல்லும்!

"மசோதாவை நிறைவேற்றுவதற்கு உடன்படிக்கையைச் செய்து கொள்வது முன் நிபந்தனையாகியது என்பது அவர்களைப் பொறுத்த மட்டில் தொடர்பற்றதாக இருக்கலாம். இந்த புதிய மார்க்சிஸ்டுகளின்படி வர்க்க உறவுகளை முழுமையாக எடுத்து ஆய்வு செய்வது அவசியம் அற்றது. காலனித்துவ நிலையில் இருந்து சுதந்திரத்தை நோக்கி "இயக்கவியல்" பாய்ச்சல் பற்றிய மார்க்சிச கருத்துப்பாட்டுடன் செயற்படுவதற்குப் பதிலாக விரிவாக்க முறையில் முன்நோக்கிச் செல்வது பற்றிய கடைகெட்ட கோட்பாட்டின் அடிப்படையில் செயல்பட இவர்கள் விரும்புகின்றார்கள்...."போர்த் இன்டர்நஷனல் 1948 ஜூலை, பக்கம் 159)


இந்து-முஸ்லீம் முதலாளித்துவ பிரிவினை கோசத்தினால் அகதிகளாக வெளியேறும் மக்கள்

சுதந்திரம் எனப்படுவதன் மோசடித் தன்மையை அம்பலப்படுத்த போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி 1948 பெப்பிரவரி 11ம் திகதி கொழும்பு காலி முகத் திடலில் ஏற்பாடு செய்த பொதுக் கூட்டத்தை பற்றி அக்கட்டுரையில் பின்வருமாறு அறிக்கை செய்யப்பட்டு இருந்தது:

"கூட்டம் மாலை 4 30க்கு இடம்பெற இருந்தது. அவ்வாறே இன்னமும் வேலைத்தலங்கள் மூடப்படாத நிலையிலும் கூடப் பல்லாயிரக்கணக்கானோர் காலிமுகத் திடலில் கூடி இருந்தார்கள். கூட்டம் தொடர்ந்து பெருக்கெடுத்தபடி இருந்தது. முதலாளித்துவ டைம்ஸ் ஒப் சிலோன் (Times of Ceylon) பத்திரிகை கூட கூட்டத்தில் 35000க்கு அதிகமானோர் வருகை தந்திருந்தனர் எனக் குறிப்பிடத் தள்ளப்பட்டது. சிங்களத்தில் பிரசுரிக்கப்படும் லங்காதீப பத்திரிகை கூட்டத்திற்கு 50000 க்கு அதிகமானோர் வருகை தந்ததாக, மதிப்பிட்டிருந்தது. பொதுமக்களை உறங்க வைக்கவும் அவர்களின் எதிர்ப்பை மொட்டையாக்கவும் ஏற்பாடு செய்யப்பட்ட விழாக்களுக்கு மத்தியிலும் கொழும்பு பொதுமக்கள் போலிச் சுதந்திரத்திற்கு எதிராகவும் நிஜ சுதந்திரத்திற்கு ஆதரவாகவும் காட்டிய பிரமாண்டமான காட்சி அத்தகையதாக விளங்கியது."

1947ல் இந்தியாவுக்கும் 1948ல் இலங்கைக்கும் சுதந்திரத்தை வழங்கும் பேரில் இடம்பெற்றது என்ன? காலனித்துவ ஆட்சியாளர்களின் கைகளில் இருந்து ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளின் கைகளுக்கு அரசியல் அதிகாரத்தை மாற்றியதேயாகும். அது இந்நாடுகளின் பொதுமக்களுக்கு எதிராக இடம்பெற்ற ஒரு சதியாகும்.

## உலக அமைப்பின் ஒரு பாகம்

இரண்டாம் உலக யுத்த காலத்திலும் அதன் பின்னரும் பிரித்தானிய ஆட்சியாளர்கள் காலனிகளைக் கைவிட்டுச் செல்லாது போனால் அங்கெல்லாம் அவர்கள் மக்கள் கிளர்ச்சிகள் மூலம் உதைத்து வீசப்படுவதற்குச் சமமான ஒரு நிலைமை வளர்ச்சி கண்டு வந்தது. 1942ல் அகில இந்தியாவிலும் வளர்ச்சி கண்ட "வெள்ளையனே வெளியேறு" இயக்கமும் 1946ல் இடம்பெற்ற கடற்படையாட்களின் கிளர்ச்சியும் 1946ல் இலங்கையில் இடம்பெற்ற பொது வேலைநிறுத்த இயக்கமும் இதற்கு சாட்சிதரப் போதுமானவை. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஐரோப்பிய, ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் வெளியே வந்தது தத்தமது நாடுகளில் மக்கள் கிளர்ச்சிகள் உத்வேகம் அடைகின்றதும் பொருளாதாரம் பேரழிவுக்கு உள்ளாகின்றதுமான ஒரு நிலைமையிலாகும். சார்பு ரீதியில் பார்க்குமிடத்து பலம் வாய்ந்த நிலைமையில் இருந்தது பின்னர் முதலாளித்துவத்தின் கிளர்ச்சிக்குள் இறங்கும்

www.padippakam.com




வாய்ப்பும் பிரமாண்டமான தேசிய சந்தையும் கொண்டு ஏனைய நாடுகளில் சந்தைகளை ஊடுருவிக் கொண்டும், யுத்தத்தினால் கணிசமான அளவு பாதிப்புக்கு உள்ளாகாததுமான அமெரிக்க ஏகாதிபத்தியம் மட்டுமே. உலக முதலாளித்துவ அமைப்பைக் காக்கும் விதத்தில் சோவியத் ஸ்டாலினிஸ எதிர்ப் புரட்சியாளர்களைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு , அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் புதிய உலக அமைப்பை ஸ்தாபிதம் செய்வதில் முன்னணியில் நின்றனர். இந்நிலைமையில் இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இலங்கைக்கும் இன்னும் பல நாடுகளுக்கும் முதலாளிகளின் கரங்களுக்கு .அரசியல் அதிகாரத்தை மாற்றும் அல்லது காலனிமயமாக்கலை மக்கள் கிளர்ச்சிகளில் இருந்து காப்பாற்றி, இந்தப் புதிய் உலக அமைப்பின் கீழ் ஏகாதிபத்திய உறவுகளை வைத்துக் கொண்டிருப்பதற்கான .நடவடிக்கை யாகியது.

## முதலாளித்துவப் பிற்போக்கு

இலங்கை தொடர்பாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின்படி தோட்டத்துறை, வெளிநாட்டு வர்த்தகம் தொடக்கும் பொருளாதாரத்தின் அடிப்படை மையங்கள் பிரித்தானிய கம்பனிகளின்(இவை பலவும் ஸ்டேர்லிங் பவுண் கம்பனிகள் என அழைக்கப்பட்டன) கைகளில் இருந்து வந்ததோடு கட்டுநாயக்க விமானத் தளம், திருகோணமலை துறைமுகம் ஆகியன பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் நிர்வாகத்தின் கீழ் தொடர்ந்தும் இருக்கும் விதத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. மகாதேசாதிபதியை நியமனம் செய்கின்றதும் பதவி நீக்கம் செய்கின்றதுமான அதிகாரம் பிரித்தானிய மகாராணியிடம் கையளிக்கப்பட்டது. இறுதி நீதி அதிகாரம் பிரித்தானிய பிரிவி கவுன்சிலிடம் ஒப்படைக்கப்பட்டது. இதை சுதந்திரம் என்ற பெயரில் கொண்டாடுவது பெறுமதி வாய்ந்ததா? இந்தக் கேள்வி பொதுமக்களுக்கு உரியது. அப்படி இல்லாது தமது பிள்ளை குட்டிகள் தொடர்ந்தும் கல்வி பெறவும் ஓய்வு எடுக்கவும் கூட பிரித்தானியா இல்லாமல் சரிப்பட்டு வராது போன சந்திரிகா பண்டாரநாயக்க வம்சத்துக்கு இந்தக் கேள்வி உரியதல்ல எனப் புதிதாகக் கூற வேண்டியதில்லை. அவ்வாறே அவளை ஜனாதிபதியாக்கச் செயற்பட்ட ஜே.வீ.பி., விடுதலைப் புலிகள் அமைப்பு, நவசமசமாஜக் கட்சி உட்பட்ட வேறு தீவிரவாதிகளுக்கும் இந்தக் கேள்வி உரியதாகாது. இவர்கள் சகலரும் பொதுமக்களுக்கு எதிரானவர்கள்.

இலங்கையில் திணிக்கப்பட்ட அரசின் தன்மை அதன் அரசியல் அதிகார சபைகள், நிர்வாக சபைகள் முதலிய அனைத்தும் சோல்பரி பிரபுவால் சிபார்சு செய்யப்பட்டதற்கு இணங்கவே நிர்ணயம் செய்யப்பட்டன. இதனை பிரித்தானிய ஏகாதிபத்திய அரசாங்கமே தீர்மானம் செய்தது. "தேசத்தின் தந்தை "என முதலாளிகளால் தூக்கிப் பிடிக்கப்படும் அன்றைய பிரதமர் டீ.எஸ்.சேன்நாயக்க செய்தது எல்லாம் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி, முதலாளி வர்க்கத்தின் கைக்கு அரசியல் சுக்கானை கைமாற்றிய உறுதியில் கையொப்பம் இட்டதேயாகும். இலங்கையில் முதலாளித்துவக் கட்சிகளும் சந்தர்ப்ப வாதிகளும் ஜே.வீ.பி.யும் இனவாதக் கும்பல்களும் "இலங்கையின் ஐக்கிய அரசு" "2500 வருட காலம் நீடித்து இருந்த அரசு" என்றெல்லாம் தோளில் வைத்துக் கொண்டாடுவது பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளால் திணிக்கப்பட்டு, வழங்கப்பட்ட இந்த அரசினையேயாகும்.

இந்தியாவுக்கு சுதந்திரம் எனப்படுவதை வழங்கும் பேரில் முதலாளிகளின் கைகளுக்கு அரசியல் அதிகாரம் கைமாற்றப்பட்டது. இந்திய தேசிய காங்கிரசினதும் முஸ்லீம் லீக்கினதும் தலைவர்களுடன் சேர்ந்து சதி செய்து, இந்தியத் துணைக் கண்டத்தில் இந்தியா, பாகிஸ்தான் என்று இரண்டு அரசுகளை பிரித்தனர். அதன் மூலம் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து நின்ற மக்களை மதவாதத்தின் அடிப்படையில் பிரிந்து நின்று மோதிக் கொள்வதற்கான நிலைமைகளை சிருஷ்டித்து இரத்தக் களரியில் மூழ்கடித்தது.



குளோஸ்டர் கோமகன் சிம்மாசன உரை

தமது கைக்கு அரசியல் அதிகாரத்தை மாற்றிக் கொண்ட இலங்கை முதலாளி வர்க்கம் சேனநாயக்காக்கள், பண்டாரநாயக்காக்கள், ஜயவர்தனாக்கள் உட்பட்ட அதன் பிரதிநிதிகள் என்றுமே ஏகாதிபத்தியத்திடம் இருந்து சுதந்திரம் கேட்காத பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழேயே ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொண்டு, அதற்கு சேவகம் செய்வதன் மூலம் வயிற்றை வளர்த்துக் கொள்வதற்கு வழிவகுத்துக் கொண்ட பலவீனமான பிற்போக்காளர் கும்பலாகும். முன்னர் இலங்கை தேசிய காங்கிரஸ் என்ற பெயரில் அணிதிரண்டு கொண்டிருந்த இந்த முதலாளிகள் மற்றொரு முதலாளிகள் கும்பலுடன் சேர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி என்ற பெயரில் களத்தில் இறங்கியது 1947 பொதுத் தேர்தல் சமயத்திலேயேயாகும். அன்று முதலாளித்துவ தேசிய காங்கிரசின் நோக்கங்கள் பின்வரும் வகையில் வரையப்பட்டு இருந்தன:

இலங்கை தேசிய காங்கிரசின் நோக்கம் (அ) வெஸ்ட்மினிஸ்டர் நிர்வாக அரசியல் அமைப்பின் வடிவினுள் இலங்கைப் பொது மக்கள் டொமினியன் அந்தஸ்தை பெற்றுக் கொள்வது. (ஆ) காங்கிரசினால் வரைந்து கொள்ளப்பட்டுள்ள கொள்கை, வேலைத்திட்டத்திற்கு இணங்க நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்தியை உருவாக்குவதுமேயாகும்.(Documents of the Ceylon National Congress மைக்கேல் றொபேட்ஸ் பக்கம் 1486 )

முதலில் சமசமாஜக் கட்சியினதும் பின்னர் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியினதும் தலைமையில் சுதந்திரத்துக்கான போராட்டம் வளர்ச்சி காணும் போது , 1942ல் தேசிய காங்கிரசின் கூட்டத்தில் பொதுமக்களை தவறான திசையில் திருப்பும் தந்திரத்துடன் "டொமினியன்" என்ற வார்த்தைக்கு பதிலாக "சுதந்திரம் "என்ற வார்த்தையை கையாள்வோம் என ஜே.ஆர். ஜயவர்தன பிரேரித்தார். டீ.எஸ்.சேனநாயக்க இதனை எதிர்த்த சமயத்தில் ஜயவர்தன சுதந்திரம் என்ற வார்த்தையின் மூலம் நாம் கருதுவது டொமினியன் அந்தஸ்தை யேயானால் அதை எதிர்ப்பது ஏன் என அவரிடம் கேட்டார். காங்கிரசில் புதிய தீவிரவாதிகள் என ஸ்டாலினிஸ்டுகளாலும் முதலாளித்துவ "புத்திஜீவிகளாலும்" புகழப்பட்ட ஜயவர்தன உட்பட்ட கும்பலுக்கும் சேனநாயக்க தலைமையிலான பழைய கொன்சர்வேடிவ் (பழைமைவாதிகள் ) கும்பலுக்கும் இடையேயான பரஸ்பர புரிந்துணர்வு அத்தகையதாக விளங்கியது. இருந்த போதிலும் பிரேரணை நிறைவேறுவதை சேனநாயக்க உட்பட்ட நால்வர் எதிர்த்தனர். அடுத்ததாக இந்த முதலாளிகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் "சுதந்திரம்" வழங்குமாறு கோரும் டட்லி சேனநாயக்கவின் பிரேரணைக்கு வாக்களித்தனர். (அதே பக்கம் 1488) இது ஊர்ஜிதம் செய்வது எதை? சுதந்திரம் என்ற பேரில் இந்த முதலாளிகள் குறித்து நின்றது உலக மகா யுத்தத்தில் பிரித்தானிய ஏகாதிப்த்தியவாதிகளிடம் குறையிரங்கு வதற்குப் பதிலாகத் தமக்குக் கிடைக்கும் பிச்சை சோற்றையேயாகும்.

இதற்கு முன்னதாக டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வருகை தந்த வேளையில் அதனிடம் இந்த முதலாளிகள் "பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை "வழங்கும்படி முறைப்பட்டனர்.அதன் மூலம் அவர்கள் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியினுள் ஏகாதிபத்தியவாதிகளின் எலும்புத் துண்டு இரத்தத்தினை நக்குவதற்கான அதிக வாய்ப்புக்களையும் பொதுமக்களை அடக்கி ஒடுக்குவதற்கான பெரும் அதிகாரங்களைக் கொண்ட அமைச்சரவை ஆட்சி முறையையுமே கேட்டு நின்றனர்.

அத்துடன் நின்றுவிடாத இந்தப் பிற்போக்காளர்கள் "சர்வஜன வாக்குரிமை" வழங்கும் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு தேசிய காங்கிரசின் தலைவர் ஈ.டபிள்யூ. பெரேராவின் தலைமையில் ஒரு பிரதிநிதிகள் தூதுக் குழுவை 1929ல் டொனமூர் ஆணைக்குழுவிடம் அனுப்பினர். இலங்கையின் ஏழைப் "பெண்கள் பொறுப்புடன் வாக்குரிமையை வழங்கத் தெரியாத மூடர்கள்" என அவமதித்து, அவர்களின் உரிமைகளை நசுக்கித் தள்ள சிங்கள, தமிழ் முதலாளித்துவ பிற்போக்காளர்கள் ஒன்றாக கைகோர்த்துக் கொண்டனர்.( இலங்கையின் தொழிலாளர் இயக்கத்தின் எழுச்சி குமாரி ஜயவர்தன பக்கம் 251 256)

இலங்கையின் முதலாளிகள் ஏகாதிபத்தியவாதிகளை எதிர்ப்பதன் பேரில் முதலில் அரசியல் ரீதியில் வெளியரங்குக்கு வந்தது, 1915ல் முஸ்லீம் மதத்தவர்களுக்கு எதிரான மதக் கிளர்ச்சியின் மூலமாகும்.1930பதுகளில் தொழிலாளர் போராட்டம் எழுச்சி கண்டதுதான் தாமதம் இந்த முதலாளிகள் கொழும்புத் துறைமுகம் போன்ற இடங்களில் தொடங்கி, தொழிலாளர்களைப் பிளவுபடுத்த மலையாளிகள், தமிழ் தொழிலாளர் எதிர்ப்பு ஆத்திரமூட்டல்களை கிளறிவிட்டனர்.

இலங்கையின் தேசிய ஐக்கியத்துக்கு அடியோடு எதிரானவர்களும் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கித் தள்ளுவதில் தம்மை அர்ப்பணம் செய்தவர்களுமான இலங்கையின் தேசிய முதலாளி வர்க்கம் எனப்படுவதின் ஏகாதிபத்தியச் சார்பு பிற்போக்குத் தன்மை அத்தகையதாக விளங்கியது. போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி தொழிலாளர் வர்க்கத்துக்கு முன்வைத்த தமது முன்நோக்கினுள் முதலாளி வர்க்கத்தின் பிற்போக்குத் தன்மையின் அடி ஆளங்களை பின்வருமாறு வடித்துக் கொடுத்திருந்தது:

"இலங்கையினுள் வெள்ளைக்கார முதலாளித்துவத்துக்கு சமாந்தரமாக மட்டும் அல்ல .பெரிதும் பளிச்சிடும் வகையில் தொழிலாளர் வர்க்கத்துக்கு சமாந்தரமாக இலங்கைத் தேசிய முதலாளித்துவம் கட்டையாகும்.

ஓரளவுக்கு அவர்கள் ஒரு வர்க்கமாக வளர்ச்சி கண்டது இன்றைய நூற்றாண்டினுள் இரத்தினக் கல் ஏற்றுமதியிலும் இறப்பர், தெங்கு தோட்டங்கள் தொடங்குவதுடனும் சேர்ந்து கொண்டதன் பின்னரேயாகும். பிரித்தானியர்களுக்கு மட்டும் அல்ல இந்தியர் பகுதியினருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது வர்த்தகத் துறையில் அவர்களுக்கு இருந்தது முக்கியத்துவம் இல்லாத இடமாகும். கைத்தொழில் துறையில் அவர்கள் நுழைந்து கொண்டிருக்கவில்லை. கைத்தொழில் அல்லாத முதலாளித்துவமாக (இலங்கையில்) முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்துக்கு இட்டுநிரப்பும் துணைப் பொருளாதாரப் பாத்திரம் அரசியலிலும் அவர்களின் வறுமையைத் தீர்மானிக்கின்றது. நாட்டின் நிர்வாகத்தில் நிலமானித்துவ மிச்சசொச்சங்களை அவர்கள் அகற்றி உள்ளதோடு அரசியலில் ஏகாதிபத்திய அமைப்பினுள் தம்மை நன்கு புகுத்துவதற்கு மட்டுமே முயற்சிக்கிறார்கள்."(போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியின் இலங்கைக்கான வேலைத்திட்டம் போர்த் இன்டர்நஷனல் 1946 அக்டோபர் பக்கம் 317)

## நிரந்தரப் புரட்சி

பின்தங்கிய, காலனித்துவ நாடுகளின் முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியத்துடனும் அந்நாடுகளின் நிலமானித்துவ மிச்சசொச் சங்களுடனும் இணைந்து கொண்டு தொழிலாளர்களையும் ஏனைய ஒடுக்கப்படும் மக்களையும் ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செய்யும் விடுதலைப் போராட்டத்துக்கு அழைப்பதில் வெற்றி காணாத பலவீனம் கண்ட எதிரி, பிற்போக்கு நிலைமைக்கு பரிணாமம் கண்டு இருந்தது. இதனை இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் லியொன் ட்ரொட்ஸ்கி தொழிலாளர் வர்க்கத்தின் நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டத்தை அபிவிருத்தி செய்ததன் மூலம் சுட்டிக் காட்டினார். இலங்கை முதலாளி வர்க்கத்தின் பிற்போக்கு நடவடிக்கைகள் மூலம் இந்நாட்டுத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் கண்களின் எதிரில் .நிரூபிக்கப்பட்டது இது அல்லவா ?

ட்ரொட்ஸ்கி நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டத்தினுள் இதனை மேலும் பின்வருமாறு சுட்டிக்காட்டினார்: "...ஏகாதிபத்திய பிடியில் இருந்து விடுபடுவது உட்பட்ட ஜனநாயக பணிகளை இட்டு நிரப்பும் வல்லமையும் பொறுப்பும் பின்தங்கிய நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் தோள்களிலேயே சுமத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கம், ஏழை விவசாயிகள், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் உட்பட்ட மக்களின் தலைவனாக கிளர்ந்து எழுந்து, ஏகாதிபத்தியப் பிடியினையும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தையும் தூக்கி வீசுவதன் மூலம் தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் இந்தப் பணியை இட்டுநிரப்பப் போராட வேண்டும். இந்தப் போராட்டம் உலக சோசலிசப் புரட்சிக்காக நடாத்தும் போராட்டத்தின் ஒரு பாகமாகும்."

இரண்டாம் உலக யுத்தத்தின் மத்தியில் ட்ரொட்ஸ்கி இந்த வேலைத்திட்டத்தினை

15ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

## ஆசிரியருக்குக் கடிதமும் பதிலும்:

# விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களின் விடுதலையும்

1998 ஜனவரி 22
ஆசிரியர்,
தொழிலாளர் பாதை,
90.1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு.10

கனம் ஆசிரியர் அவர்களுக்கு ,

ஜனவரி மாத தொழிலாளர் பாதையில் வடக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பகிஷ்கரிப்போம் என்ற தலையங்கத்தை படித்தேன். தேர்தல் புறக்கணிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளீர்கள். நன்றி.

ஆனால் இறுதிப் பந்தியில் வடக்கு கிழக்கில் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் அடக்குமுறையும் பயங்கரவாதமும் நிலவுவதாக எழுதி உள்ளீர்கள்.

சுதந்திரத்துக்கான போராட்டத்தில் மக்களை நெறிப்படுத்துவதற்கு ஒரு சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியது அவசியமாகின்றது. சுதந்திரத்தை பெறும் போராட்டத்தில் மக்கள் சிலவற்றை இழக்கத்தான் வேண்டும். இழக்காமல் எதனையும் பெற முடியாது. உலக சோசலிசப் புரட்சிகள் அத்தனையிலும் இதற்கு உதாரணங்கள் உண்டு.

இதனால் புலிகளும் தமது நிர்வாக பகுதிகளில் சில கட்டுப்பாடுகளை விதிப்பதும் உண்மைதான். ஆனால் அவை அடக்குமுறை எனக் கூறுவது சரியானதல்ல. சுதந்திரத்தை விரும்புபவர்கள் அதை அடக்குமுறை எனக் கருதாமல் கட்டுப்பாடுகள் என்றே நினைப்பார்கள் என எண்ணுகின்றேன்.

தங்கள் கட்சியின் அங்கத்தவராக சேர எண்ணி உள்ளேன். இந்தப் பிரச்சினை பற்றித் தங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன? புலிகள் பற்றி தங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன? என்ற விபரங்களை அறிய ஆவலாக உள்ளேன். பதில் அனுப்புவீர்களா?

தோழர்,

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை பகிஷ்கரிக்கும்படி சோசலிச சமத்துவக் கட்சி 1998 ஜனவரி தொழிலாளர் பாதையில் வெளியிட்ட அறிக்கைக்கு ஆதரவு தெரிவித்து நீங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது. உங்களின் அக்கறையைப் பெரிதும் மதிக்கும் நாம் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டிருந்த சில விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக உங்கள் கடிதத்தையும் உங்களுக்கு எமது பதிலையும் எமது பத்திரிகையில் பிரசுரிக்க தீர்மானித்தோம்.

உங்கள்து கடிதத்தின் அடுத்த பந்தியில் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாக நாம் குறிப்பிட்டிருந்ததுடன் நீங்கள் உடன்படவில்லை. "சுந்திரத்துக்கான போராட்டத்தில் ......சிலவற்றை இழக்கத்தான் வேண்டும். இழக்காமல் எதையும் பெறமுடியாது" எனக் கூறும் நீங்கள், புலிகள் அமைப்பினால் விதிக்கப்படும் "கட்டுப்பாடுகளை" அடக்குமுறைகளாக கணிக்கக் கூடாது எனக் குறிப்பிட்டுள்ளீர்கள்.நீங்கள் எழுப்பியுள்ள இந்த விடயம் தொடர்பான எமது கருத்தை தெளிவுபடுத்தவது அவசியமாகின்றது.

சோசலிச சமத்துவக் கட்சி இலங்கை முதலாளி வர்க்கம் வடக்கு கிழக்கு தமிழ் மக்களை தேசிய ஒடுக்குமுறை மூலம் அடக்குவதையும் அதை உக்கிரமாக்கும் விதத்தில் இடம்பெற்றுவரும் படுகொலை இனவாத யுத்தத்தையும் எதிர்த்து தொழிலாளர் வர்க்க நிலைப்பாட்டின் அடிப்படையில் போராடும் ஒரே அமைப்பாகும்.

சிங்கள முதலாளித்துவ ஆட்சி முறையின் கீழ் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தவர்கள் எதிர்கொண்டுள்ள துயரங்களை நாம் அறிவோம்.அவர்களை அதில் இருந்து காப்பாற்றவும் விடுவிக்கவும் சிங்களம் பேசும் தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்டுவதும் அவ்வாறே அணிதிரட்டும் தவிர்க்கமுடியாத அவசியத்தை சுட்டிக்காட்டி சோசலிச சமத்துவக் கட்சி போராடி வருகின்றது. தமிழ் ஒடுக்கப்படும் தேசிய இனத்தைக் காக்கவும் அவர்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை உறுதி செய்யவும் தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்ட நடாத்திய நீண்ட போராட்டத்தின் வரலாறு சோசலிச சமத்துவக் கட்சிக்கும் அதன் முன்னோடி யான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் உண்டு.

## அனைத்து லகவாதம்

இந்தத் தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத நிலைப்பாட்டின் அடிப்படையில் நின்று தமிழ் ஈழம் விடுதலைப் புலிகள் அமைப்பின் பிற்போக்கு முதலாளித்துவ அரசியலை நாம் எதிர்க்கின்றோம்.விடுதலைப் புலிகள் இனவாத யுத்தத்தில் இருந்தும் அடக்குமுறையில் இருந்தும் தமிழ் தேசிய இனத்தை விடுதலை செய்யப் போராடும் ஒரு இயக்கம் என சில தமிழ் தேசிய இனத்தினர் இடையே நிலவிவரும் குழப்பம் உங்களின் கடிதத்திலும் வெளிப்பாடாகி உள்ளது. சிங்கள இராணுவத்தை கொண்டு வடக்கு கிழக்கில் நடாத்திவரும் கொடிய அடக்குமுறையினுள் தமிழ் மக்களுக்கு வேறு மாற்றுவழி தென்படாத ஒரு நிலைமையினுள் அத்தகைய ஒரு குழப்பம் இருந்து கொண்டுள்ளதாக எமக்குத் தெரிகின்றது.

நீங்கள் குறிப்பிடுவது போல் தமது விடுதலையை வெற்றி கொள்ளும் பொருட்டு மக்கள் தியாகம் செய்வதும் தியாகம் செய்ய தயாராக இருப்பதும் உண்மை.மக்களின் விடுதலைக்காக அவர்களை ஜனநாயக ரீதியில் அணிதிரட்டும் போது அம்மக்கள் சுயவிருப்பின் பேரிலேயே தியாகம் செய்வது நிச்சயம். அத்தகைய முற்போக்கு நோக்குடன் செயற்படும் அமைப்புக்கள் தொடர்பாக மக்கள் தியாக உணர்வுடன் நடப்பதும் நிச்சயம்.

எனினும் விடுதலைப் புலிகள் செய்வது என்ன? அது தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் மட்டும் அல்ல ஏனைய பகுதிகளிலும் தமிழ் மக்களை பலாத்காரமாகத் தனது பிற்போக்கு நோக்கங்களுக்குக் கீழ்ப்படுத்தச் செயற்படும் ஒரு அமைப்பாக மாறியுள்ளது. விடுதலைப் புலிகள் தமது அரசியல் எதிர்ப்பாளர்களை கொன்றுள்ளது. தமிழ் மக்களிடம் இருந்து பலாத்காரமாக பணம் உட்பட்டவற்றை சுரண்டிக் கொள்கின்றது. பலாத்காரமாக இளைஞர்களை மட்டும் அல்ல சிறுவர்களையும் யுத்தத்தில் ஈடுபடுத்துகின்றது. வறுமைக்குள்ளும் பட்டினிக்குள்ளும் தள்ளப்பட்டு அகதிகளாக உள்ள மக்களுக்கு வரும் பொருட்களையும் மருந்துகளையும் அமைப்புத் தேவைகளுக்காக கொள்ளையிடுகின்றது. யாழ்ப்பாணப் பகுதியில் அவர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருந்த வேலைத் தலங்களில் தொழிலாளரைக் குறைந்த கூலிக்கு கடும் விதிகளின் கீழ் சுரண்டியதை நீங்கள் நேரில் கண்டிராது போனாலும் கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா? அனைவரும் அவர்களின் ஆணைக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இது மக்களை ஜனநாயக ரீதியில் அணிதிரட்டும் ஒரு அமைப்பின் நடைமுறை அல்ல. மக்களை அடக்கி, கைது செய்து செயல்படும் அமைப்பின் நடவடிக்கையே.சிங்கள முதலாளி வர்ககம் தொடுத்துள்ள இனவாத யுத்தத்தில் இவர்களுக்கு தோல்வி கிட்டும் வேளையில் தமிழ் மக்கள் மீதான இவர்களின் பாய்ச்சலும் கூடவே இடம்பெறும்.

சிங்கள கிராமப்புறங்களில் வறுமையில் வாழும் வறியோரை தாக்கும் விடுதலைப் புலிகளைப் பாருங்கள். அதே போல் தொழிலாளர் தொழில் புரியும் பொதுமக்கள் நடமாடும் இடங்களில் நூற்றுக் கணக்கில் மக்களை கொலை செய்ய விடுதலைப் புலிகள் நடாத்தும் குண்டுத் தாக்குதல்களைப் பாருங்கள். தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் கிராமங்களில் சிங்கள இராணுவமும் பொலிசாரும் அல்லது இனவாதிகளும் நடாத்தும் தாக்குதல்களுக்கு பதிலடியாகவே தனது தாக்குதல்கள் இடம்பெறுவதாக விடுதலைப் புலிகள் நியாயம் கற்பிக்க முயல்வதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். எனினும் அது பொதுமக்கள் சார்பில் இருந்து வரும் எந்த ஒரு அமைப்பினாலும் அங்கீகரிக்கக் கூடிய செயல் அல்ல. அது ஒரு மோசடியான ஒரு நியாயப்படுத்தல் ஆகும். நாம் ஒரு தக்க உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். இலங்கை மத்திய வங்கி ஊழியர்களில் பெரும்பான்மையினர் பல காலமாக சோசலிச சமத்துவக் கட்சியினதும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் வழிகாட்டலின் கீழ் இனவாத யுத்தத்துக்கு எதிராகவும் தமிழ் மக்களது ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செய்வதற்காகவும் நின்று வந்துள்ளனர். இதனை நன்றாக விடுதலைப் புலிகள் அறிந்திருந்தும் மத்திய வங்கியை தனது தாக்குலுக்கு இலக்காக்கிக் கொண்டதோடு நூற்றுக் கணக்கானவர்களை கொன்றது. ஆயிரக் கணக்கானோரை காயமடையச் செய்தது.

இவற்றின் மூலம் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தை நடாத்தும் சிங்கள ஆளும் வர்க்கத்துக்கு எதிராக சிங்கள மொழிபேசும் தொழிலாளர் மற்றும் வறிய மக்களை அணிதிரட்டுவதில் விடுதலைப் புலிகளுக்கு எந்தவிதமான அக்கறையும் கிடையாது என்பது மட்டும் அல்ல. சிங்கள மக்களைத் தமிழ் மக்களுடன் மோதிக்கொள்ள வைக்கச் செயற்படும் விடுதலைப் புலிகள் மறுபுறத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் யூ.என்.பி.க்கும் இனவாத குண்டர்களுக்கும் சிங்கள மக்களிடையே சிங்கள இனவாதத்தை தூண்டிவிட வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. சமீபத்தில் தலதா மாளிகை மீது நடாத்திய தாக்குதலை பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பி.யும் இனவாதத் கூண்டர்களும் கையாண்ட விதம் இதற்கு நல்ல உதாரணம்.

விடுதலைப் புலிகள் திரும்பி இருப்பது தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் பக்கமோ அல்லது சிங்கள ஒடுக்கப்படும் மக்கள் பக்கமோ அல்ல. அது இன்று அமெரிக்க, பிரித்தானிய ,பிரான்சிய, ஜேர்மனிய, அவுஸ்திரேலிய, நோர்வே ஏகாதிபத்தியவாதிகள் பக்கம் திரும்பியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் பக்கம் திருமபியுள்ளது. விடுதலைப் புலிகள் இந்த ஆளும் வர்க்கத்தினரிடம் கேட்பது, ஒன்றில் தனிநாடு அமைக்க அல்லது கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட ஒரு பிராந்தியத்தை உருவாக்க கொழும்பில் ஆட்சி செய்யும் முதலாளிகளுக்கு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் தமக்கு உதவுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகள் பேரம் பேசுவது தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் சுரண்டுவதற்கு தமக்கு வசதி வாய்ப்புக்கள் கொண்ட ஏகாதிபத்தியச் சார்பு தனி ஈழம் அரசை அல்லது அதிகார குட்டி பிராந்தியத்தை உருவாக்கு வதற்காகவேயாகும். 'அத்தகைய அரசு ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலுக்கு பொதுமக்களை விற்றுத் தள்ளும் மற்றொரு அரசாக மட்டுமே விளங்கும். தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எந்த ஒரு விடுதலையும் கிடைக்கப்போகாதது மட்டுமன்றி, அவர்கள் மீது ஏகாதிபத்திய வாதிகளின் காலனித்துவ சுரண்டலே திணிக்கப்படவும் போகின்றது.

இன்று சகல தேசியவாத இயக்கங்களும் நாற்றமடைந்து வங்குரோத்தடைந்து பிற்போக்காளர்களின் கைக்குள் சென்றுள்ளது. பீ.எல்.ஓ., சண்டினிஸ்டா, தென்ஆபிரிக்க நெல்சன் மண்டேலாவின் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அனைத்தும் இன்று ஏகாதிபத்தியவாதிகளின் கைத்தேங்காயாக செயற்படும் விதத்தைப் பாருங்கள். விடுதலைப் புலிகளதும் ஜே.வீ.பி.யினதும் பிற்போக்கு நடவடிக்கைகள் மூலமும் தேசியவாத அமைப்புக்களின் இந்தச் சீரழிவுகள் வெளிப்பாடாகின்றது. உற்பத்தி பூகோளமயமாகி உள்ள ஒரு நிலைமையின் கீழ் சகல தேசியவாத வேலைத்திட்டங்களும் வங்குரோத்தடைந்துள்ளன. முதலாளி வர்க்கம் சுரண்டலுக்காக அனைத்துலக மூலதனத்துடன் நேரடிப் பிணைப்புக்குச் செல்ல நேரிட்டுள்ளது.

## விடுதலைப் புலிகளின் தோற்றம்

விடுதலைப் புலிகள் போன்ற குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் ஆரம்பத்தில் 1964ல் லங்கா சமசமாஜக் கட்சியின் மாபெரும் காட்டிக்கொடுப்பின் பெறுபேறாகவே தோன்றின. இதற்கு முன்னர் சிங்கள முதலாளி வர்க்கத்தின் அடக்குமுறைகளில் இருந்து தம்மை தொழிலாளர் வர்க்கம் காக்கும் என்ற நம்பிக்கை தமிழ் ஒடுக்கப்படும் மக்களிடையே இருந்து வந்தது. தொழிலாளர் வர்க்கத்தை முதலாளி வர்க்கத்துடன் பிணைத்துப் போட சமசமாஜக் கட்சி 1964ல் முதலாளித்துவ அரசாங்கத்தினுள் நுழைந்ததன் பின்னர் அந்த நம்பிக்கைகள் தகர்ந்து போயின. தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக சுதந்திரமாக இனவாதத் தாக்குதலை தொடுக்கவும். தென் இலங்கை மக்களை இனவாதத்தின் மூலம் தவறான வழியில் திருப்பவும், வர்க்கப் பிரச்சினைகளை மூடிமறைத்து, ஆட்சியைக் கட்டிக் காக்க முதலாளிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

விடுதலைப் புலிகள் உட்பட்ட குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் தமிழ் மக்களிடையே தோன்றின, இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே. அவை தமிழ் மககளின் பிரச்சினைகளுக்கு தனிச்சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த தேசியவாதத் தீர்வுகளை எதிர்பார்த்தன. அவர்கள். ஆரம்பத்தில் தமது உதவிக்கு இந்தப் பிராந்தியத்தில் அரசியல் உபாயங்களில் ஈடுபட்ட இந்திய முதலாளி வர்க்கம் பக்கம் திரும்பின. தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் துயரங்களின் காரணமாக இந்த அமைப்புக்கள் தலையெடுத்தாலும் அவை நாளாவட்டத்தில் முதலாளித்துவ வசதிவாய்ப்புக்களுக்காக ஏகாதிபத்தியத்துடன் கொடுக்கல் வாங்கல்களுக்குச் செல்லத் தயாரான அமைப்புக்களாக பரிணாமம் கண்டன. விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கில் இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக செயற்படும் முக்கிய முதலாளித்துவ அமைப்பாகியுள்ளது. ஈ.பீ.ஆர்.எல்.எப்., டெலோ, புளொட், ஈ.பீ.டி.பி. அமைப்புக்கள் அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும் கூலிப் படைகளாகும்.

சோசலிச சமத்துவக் கட்சி பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்தும் இனவாத யுத்தத்துக்கு எதிராகவும் யுத்தத்தின் ஊடாக இராணுவ சர்வாதிகாரத்துக்கான நிலைமைகளை சிருஷ்டிக்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்கு எதிராகவும் அவ்வாறே விடுதலைப் புலிகளின் பிற்போக்கு வேலைத்திட்டத்துக்கு எதிராகவும் சிங்கள தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் அனைத்து ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளது. முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கி வீசி, சிறீலங்கா ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை அமைப்பது தமிழ் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்வதற்கு உள்ள ஒரே வேலைத்திட்டமாகும். இது அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் ஐக்கியத்தையும் அதன் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்ட தொழிலாளர் வர்க்கத்துடன் ஐக்கியத்தையும் வெற்றி கொள்வதற்கான ஒரே வழியாகும்.

எமது இந்த வேலைத்திட்டத்தைக் கவனத்தில் கொண்டு எமது கட்சியில் சேர்ந்து அதைப் புரட்சிக் கட்சியாகக் கட்டியெழுப்ப நீங்கள் முன்வருவீர்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறே இந்தக் கடிதம் நீங்கள் எழுப்பிய பிரச்சினைகளைக் கொண்டுள்ள தமிழ் பேசும் இளைஞர்களின் கவனத்தையும் ஈர்க்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் எமது பத்திரிகையில் பிரசுரிக்கின்றோம்.

ஆசிரியர்,
தொழிலாளர் பாதை.

படிப்பகம்

www.padippakam.com



# தலதா மாளிகை மீதான விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத் தாக்குதலும் சிங்கள இனவாத தீவைப்புக்களும்



விடுதலைப் புலிகளின் பயங்கரவாத தாக்குதலால் சிதறுண்ட தலதா மாளிகை



சிங்கள இனவாத குண்டர்களினால் தாக்கப்பட்ட கண்டி -கட்டுக்கலை செல்வ விநாயகர் ஆலயம்

ஜனவரி 25ம் திகதி கண்டி தலதா மாளிகை மீது விடுதலைப் புலிகள் நடாத்திய பயங்கரவாத குண்டுத் தாக்குதலை சாட்டாகக் கொண்டு, சிங்கள இனவாத ஆத்திரமூட்டல் இயக்கத்தை தூண்டிவிடும் வேலையில் பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பி.யும் இனவாத வெறியர்களும், முதலாளித்துவ தொடர்புச் சாதனங்களும் கூட்டாக இறங்கியுள்ளன.விடுதலை புலிகள் அமைப்பின் குண்டுவெடிப்புத் தாக்குதல், இத்தகைய ஒரு பெரும் சிங்கள இனவாத ஆத்திரமூட்டலை தூண்டிவிடுவதையே தனது பிற்போக்கு இலக்காகக் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ஈடுபட்டிருப்பது ஒரு விடுதலைப் போராட்டத்தில் அல்ல.ஆதலால் எந்த ஒரு மக்கள் குழுக்களையும் ஜனநாயக ரீதியில் அணிதிரட்டிக் கொள்வதோ அல்லது அவர்களின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதோ விடுதலைப் புலிகளுக்கு அவசியம் இல்லை. தலதா மாளிகை போன்ற மத நிலையங்களுக்கு தாக்குதல் நடாத்துவதை தென்இலங்கையில் உள்ள பிற்போக்குச் சக்திகள் இனவாத தீமூட்டல்களுக்கு நன்கு பயன்படுத்துக் கொள்ளும் என்பது விடுதலைப் புலிகளுக்கு நன்றாகத் தெரியும். ஆதலால் இதை சிருஷ்டிப்பதையே இலக்காகக் கொண்டு செயற்பட்டுள்ளது. தென் மாகாணங்களில் சிங்கள முதலாளிகளைப் போன்றே வடக்கின் விடுதலைப் புலிகள் அமைப்பினதும் அவசியம், சிங்களம், தமிழ் பேசும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை சதா காலமும் இரத்த கங்கையின் மூலம் கூறுபோட்டு வைப்பதுவே. இதன்மூலம் ஒடுக்குமுறை ஆளுமையை தமிழ் மக்களின் மீது திணிக்க விடுதலைப் புலிகள் தருணம் பார்த்துக் கொண்டுள்ளது. அடக்குமுறை ஆட்சியை சர்வாதிகார ஆட்சிக்கு வளர்த்தெடுக்க இனவாத இரத்தக் களரியை நிர்மாணிக்கும் அவசியம் தென் இலங்கை முதலாளிகளுக்கு இருந்து கொண்டுள்ளது.

வடக்கில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் கடந்த மூன்றாண்டுகளாக நடாத்திவரும் கொடூர யுத்தத்தினால் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் பின்னடைவுகளுக்கு உள்ளாகி உள்ளனர். இராணுவ ரீதியிலான பின்னடைவுகள் எந்தளவுக்கு உக்கிரம் அடைகின்றதோ அந்தளவுக்கு ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் மீதான விடுதலைப் புலிகளின் அடக்குமுறைத் தலையீடும் உக்கிரம் கண்டுள்ளது. கடந்த 10ஆண்டுகளுக்கு மேலாக விடுதலைப் புலிகள் அமைப்பானது பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளை எந்த விதத்திலும் கணக்கில் எடுக்காத , இந்திய, இலங்கை , ஏகாதிபத்திய நாடுகளின் ஆட்சியாளர்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்துகொள்ள தயாரான ஒரு தமிழ் முதலாளித்துவக் கும்பலின் அமைப்பாக தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் இனங்கண்டுள்ளனர். பொதுமக்களிடையே அதையிட்டு பலத்த எதிர்ப்பும் விரக்தியும் வளர்ச்சி கண்டுகொண்டுள்ளது. இத்தகைய ஒரு நிலைமையினுள் இலங்கை முதலாளிகளுக்குத் தமது இராணுவ பலத்தைக் காட்டிக் கொள்ளவும் தாம் ஒரு சக்தியாக இருந்து கொண்டுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களுக்கு புரிய வைக்கவும் விடுதலைப் புலிகள் தலதா மாளிகை தாக்குதல்கள் போன்ற கையாலாகாத்தனமான பிற்போக்கு முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டுள்ளது.

## அரசாங்கத்திற்கும் இனவாதிகளுக்கும் ஆண்டவன் அருள்

பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் யூ.என்.பி.க்கும் இனவாதக் கும்பல்களுக்கும் இந்தத் தலதா மாளிகைத் தாக்குதலானது ஒரு வகையிலான ஆண்டவன் அருளாக விளங்கிக் கொண்டது.பொதுஜன முன்னணி அரசாங்கம் இனவாதக் கும்பல்களின் தோள்களில் ஏறிக் குந்திக் கொண்டுள்ளதோடு மட்டுமன்றி அவர்களின் கோரிக்கைப் பிரகாரம் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ததன் மூலம் அவர்களை ஊக்குவித்தது. இதே சமயம் யூ.என்.பி.பிரதி பாதுகாப்பு அமைச்சர் இராஜினாமாச் செய்ய வேண்டும் எனக் கேட்டு இனவாத நிலைப்பாட்டுடன் கொடும்பாவி எரிப்புக்களையும் ஊர்வலங்களையும் நடாத்துகின்றது. மதவெறிப் பிக்குமார்கள் புலிகள் மீதான தடையுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. இனப்படுகொலை கோரும் சத்தியாக்கிரக ஊர்வலங்களிலும் இறங்கியுள்ளனர். திவயின, தினமின உட்பட்ட முதலாளித்துவப் பத்திரிகைக் கும்பல்கள் பொய் கதையளப்புக்கள் மூலமும் செய்தித் திரிப்புக்கள் மூலமும் எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்து வருகின்றன. தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு உட்பட்ட விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத் தாக்குதல்கள் இலங்கை முதலாளிகளின் இனவாத யுத்தத்தின் பெறுபேறுகளே..அந்தத் தாக்குதல்கள் இனவாத தீப்பிளம்பை சதாகாலமும் கொண்டிருக்க முதலாளிகளால் பயன்படுத்தப்படும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடைக்கு தொழிலாளர் வர்க்கம் ஆதரவு வழங்கக் கூடாது. இந்தத் தடையை முதலாளித்துவ அரசாங்கம் மறுபுறத்தில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக அடக்குமுறைத் தலையீடுகளைப் பலப்படுத்த கையாளும். அவ்வாறே பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் இனவாதக் கும்பல்களும் தூண்டிவிடும் மதவாதத்தினாலும் இனவாதத்தினாலும் உழைக்கும் மக்கள் எந்த விதத்திலும் வழிதடுமாறிவிடக் கூடாது. தலதா மாளிகையைப் பற்றி கூப்பாடு போடும் பிக்குமார் வடக்கில் மத வழிபாட்டு நிலையங்கள் இனவாத யுத்தத்தினால் தரைமட்டமாக்கப்படும் போது மகிழ்ச்சியில் துள்ளியவர்கள் அல்லது வாயை மூடிக்கொண்டு அவற்றுக்கு அங்கீகாரம் வழங்கிவந்தவர்கள். அவர்களுக்கு அவசியமாக இருப்பது எல்லாம் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் முதலாளிகளுக்கும் வேண்டிய விதத்தில் முண்டு கொடுத்து தமது வயிற்றை நிரப்பிக் கொள்வதே.

ஆறு இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்ததன் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் எதிரான புதிய வெடிப்பு ஒன்று உருவாகி உள்ளது தெரிகின்றது. இதனை அடக்கி ஒடுக்க ஆளும் வர்க்கத்திற்கு தொழிற்சங்க துரோக அதிகாரத்துவத்தின் காட்டிக் கொடுப்பு மட்டும் போதுமானது அல்ல. நாடு பூராவும் இனவாத பீதியைப் பரப்புவதும் இராணுவ பொலிஸ் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதும் முதலாளி வர்க்கத்துக்கு அவசியம். விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதல் இந்த நிலைமையினுள்ளேயே பொதுமக்களை இனவாதத்தினுள் தலைமூழ்கச் செய்வதற்கு முதலாளி வர்க்கத்துக்குக் கிடைத்த ஒரு ஆண்டவன் கடாட்சம் ஆகியுள்ளது.

## பாசிச கும்பல்களின் அணிதிரள்வு

அத்தோடு அரசாங்கம் இனவாதப் பாசிசக் கும்பல்களை தம்மைச் சூழ அணிதிரட்டிக் கொள்வதில் ஈடுபட்டுள்ளது. அனுருத்த ரத்வத்தவின் "இராஜினாமாவை" அரங்கேற்றியதன் மூலம் அவரை மீண்டும் யுத்தத்தை முன்னெடுப்பதற்கான பதவியைப் பொறுப்பேற்குமாறு கேட்டு நடாத்திய பிரச்சாரம் அதன் ஒரு பாகமாகும். அரசாங்கத்தின் எதிர்தரப்பினர் எனக் கூறிக்கொள்ளும் "சிந்தன" குழுவின் தலைவரான நளின் டி சில்வா விடுதலைப் புலிகளின் தடை உத்தரவில் நீந்திச் சென்று படுகொலையில் இறங்குவோம் என யோசனை தெரிவித்துள்ளார். மக்கள் ஐக்கிய முன்னணியின் இனவாதத் தலைவர்கள் யுத்தத்துக்கு உரிய ஆள் அனுருத்த ரத்வத்த. ஆதலால் அவர் இராஜினாமாச் செய்யக் கூடாது எனக் கூறிக் கொண்டுள்ளது. இராணுவத் தளபதிகளும் ரத்வத்தையைச் சந்தித்து அந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். பொதுஜன முன்னணி அரசாங்கமும் பாசிச, இராணுவ சக்திகளுக்கு குடை பிடித்தபடி இனவாத யுத்தத்தின் ஊடாக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் சர்வாதிகாரத்துக்கு பாதை போடும் அரசாங்கமாகும். யூ.என்.பி.போட்டிக்கு இனவாதத்தை தூண்டிவிட்டுக் கொண்டு , அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு ஊக்கம் அளிக்கின்றது. இதற்கிடையே பொதுஜன முன்னணிகு முடியாது போனால் தாமே அந்தப் பணியை இட்டுநிரப்ப யூ.என்.பி. தயாராகி வருகின்றது. பொதுஜன முன்னணியினதும் யூ.என்.பி.யினதும் இனவாதிகளதும் தலதா மாளிகை பற்றிய அக்கறையின் நிஜ அர்த்தம் இதுதான்.

இந்த நிலைமையினுள் ஜே.வீ.பி. பிற்போக்காளர்கள் தலதா மாளிகை மீதான தாக்குதல் பற்றிய தமது மனக்கவலையை வெளிக்காட்டிக் கொள்ள பாய்ந்து விழுந்து வந்தது தற்செயலானது அல்ல. 1998பெப்பிரவரி மாதத்துக்கான அவர்களின் 'நியமுவா' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ள அரசியல் குழு அறிக்கையில் யுத்தம் சம்பந்தமான அதன் புகழ் பெற்ற நிலைப்பாடு வெளியாகி உள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு கப்பம் கொடுக்க யுத்தம் நடாத்தி வருவதால் விடுதலைப் புலிகள் தலதா மாளிகையைத் தாக்கி உள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர். இந்தப் பிற்போக்காளர்கள் கூறுவது என்ன? வடக்கிலும் தெற்கிலும் சகல இடங்களிலும் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதற்காக தமிழ் ஒடுக்கப்படும் மக்களை ஒழித்துக் கட்டும் இராணுவ ஆட்சியை பலப்படுத்த வேண்டும் என்பதே. இது இராணுவ சர்வாதிகாரம் பக்கம் ஜே.வீ.பி.காட்டும் உந்துதலாகும்.

வடக்கில் விடுதலைப் புலிகளுக்கும் மற்றும் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுக்கும் தெற்கில் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் ஜே.வீ.பி.க்கும் முண்டு கொடுத்துக் கொண்டுள்ள நவசமசமாஜக் கட்சி தலதா மாளிகை தாக்குதல் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை முதலாளித்துவ முகாமுக்குள் நுழைந்து கொண்டுள்ள சந்தர்ப்பவாதிகளது கடைகெட்ட பிற்போக்கு முன்நோக்கிற்கு நல்ல உதாரணமாகும்.

ஆளும் வர்க்கங்கள் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்துக்கு தனது தலைவிதியை தீர்த்துக் கொள்ள உள்ள உரிமையை அங்கீகரிக்க முடியாது உள்ளதால் பழைய இரண்டு கலாச்சாரங்கள் ஒன்றை ஒன்று அழித்துக் கொள்வதற்கு இது நல்ல உதாரணமாகும் என ந.ச.ச.க. பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன ஜனவரி 26ல் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார். இங்கு சிங்கள பொதுமக்களும் தமிழ் பொது மக்களும் ஆளையாள் அழித்துக் கொள்வது போல் கூறப்பட்டுள்ளது. இந்த விதத்தில் இவர்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தினதும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாத தாக்குதல்களதும் பொறுப்புக்களை பொது மக்களின் தலையில் கட்டி அடிக்கிறார்கள். இறுதியில் ந.ச.ச.க. தலைவர்கள் இரு பக்க முதலாளிகளையும் தீர்வைக் கண்டு கொள்ளும்படி வேண்டுகின்றார்கள்.

தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் செய்ய வேண்டியது காட்டு மிராண்டிகளாக இரண்டு கலாச்சாரங்களை ஒழித்துக் கொண்டும் முதலாளி வர்க்கத்தை ஆட்சியில் வைத்திருக்க நவசமசமாஜக் கட்சியைப் 'போல் துடிப்பது அல்ல. அத்தகைய காட்டுமிராண்டி முதலாளி வர்க்க ஆட்சியை தூக்கி வீசி, சிங்கள தமிழ் தேசிய இனங்கள் இரணடினதும் பொதுமக்கள் பரஸ்பர நம்பிக்கையுடனும் அச்சம் பயம் இல்லாமலும் சமத்துவத்துடன் வாழ்க்கையை நடாத்துவதற்கான நிலைமைகளை நிர்மாணிப்பதே.இனவாத யுத்தத்தினைப் போலவே பிரிவினைவாதமும் ஏகாதிபத்திய மூலதனத்தின் ஆளுமையினை மக்கள் மீது திணிப்பதற்கான ஆயுதமாகும். இந்த முழு நிலைமையையும் மாற்ற வேண்டும்.

தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் பிற்போக்காளர்களின் இனவாத பிரச்சாரத்தினால் ஆத்திரமூட்டப்படுவது உண்மையே. ஆனால் இந்தப் பிற்போக்காளர்களின் கடைகெட்ட இயக்கத்தின் எதிரில் மௌனம் சாதிக்க முடியாது. இந்தப் பிற்போக்காளர்கள் பொதுமக்களின் கழுத்தை நெரிக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

படிப்பகம்



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

## விஜே டயஸ்

### பாகம்-9

யூ.என்.பி.அரசாங்க ஜனாதிபதியின் அரசியலமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பமானதும் "முதலாளித்துவ அமைப்பின் கீழ் அரசியலமைப்புத் திருத்தத்தினுள் மிகவும் சிறந்த ஜனநாயகத்தினை புத்திசுவாதீன மற்றவர்களே எதிர்பார்க்க முடியும்." என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கை செய்து ஒரு சில மாதங்கள் மட்டுமே கழிந்திருக்கும்.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் 1978 செப்டம்பர் 7ம் திகதி பாராளுமன்றம் திறந்து வைக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி அதைப் பகிஷ்கரிக்க தீர்மானம் செய்தது. அரசியலமைப்பு மாற்றத்தின் நச்சுத்தன்மையை புரிந்து கொண்ட தமிழ் மக்கள் மத்தியில் அதற்கு எதிராகக் கிளர்ந்த பரந்த எதிர்ப்பின் தாக்கத்தின் கீழ் எடுத்த இம்முடிவு இரண்டு வாரங்களே உயிர் நீடித்தது. செப்டம்பர் 21ம் திகதி அக்கட்சியின் எம்.பீ.க்கள் அரசியலமைப்பு சட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சத்தியப் பிரமாணம் செய்து, பாராளுமன்ற ஆசனங்களில் அமர்ந்து கொண்டனர்.

இனவாதத்தைத் தூண்டி தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்தவும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை இரத்தக் களரியினுள் மூழ்கடிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் ஜே.ஆர்.ஜயவர்தன இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமானையும் அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளத் தீர்மானம் செய்தார். சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்களின் மக்கள் முன்னணிவாத அரசியலின் துணையுடன் தோட்டத் தொழிலாளர்களின் தோளில் ஏறிக் கொண்ட தொண்டமான், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பகாலத் தலைவராகவும் விளங்கியவர். ஆனால் சிங்கள இனவாத முதலாளி வர்க்கத்தினால் தமிழர் விரோத தாக்குதல்கள் உக்கிரமாக்கப்பட்ட நிலைமையில் தொண்டமான் த.வி.கூ.யில் இருந்து அகன்று கொண்டார்: அரசாங்கத்தின் பின்னால் அலைந்து வயிறு வளர்க்கும் விதிமுறையைக் கடைப்பிடித்தார். சிறப்பாக 1977ல் ஆட்சிக்கு வந்த யூ.என்.பி.அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாக தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக பொலிசாரையும் குண்டர்களையும் தூண்டிவிட்டது. இந்நிலையில் தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் சுயகோலத்தை காட்டும் வகையில் தொண்டமான் அரசாங்கத்தில் சேர்ந்து கொள்ள முடிவு செய்தார். 1978 செப்டம்பர் 6ம் திகதி அவர் ஒரு அமைச்சராக சத்தியப் பிரமாணம் செய்து, புதிய பாராளுமன்றத்தில் ஆசனம் பிடித்தார்.

உரிய விதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அடிபணிவின் மூலம் யூ.என்.பி.அரசாங்கத்திடம் இருந்து கிடைத்தது நிவாரணங்க்ள் அல்ல..அதற்கு எதிரான விதத்தில் சிறகுகள் வெட்டப்பட்டதாகும். மாவட்ட அமைச்சர்களை நியமனம் செய்யும் முறையின் கீழ் ஜனாதிபதி ஜயவர்தன முன்னர் ஐந்து அமைச்சர் பதவிகளை வழங்க வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் அக்டோபர் 5ம் திகதி இடம்பெற்ற நியமனங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மூன்று பதவிகள் மட்டுமே கிடைத்தது. த.வி.கூ.அதையும் நிராகரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

தமிழ் மக்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் எதிரான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை மேலும் உக்கிரமாக்கும் விதத்தில் ஜனாதிபதி ஜயவர்தன யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராக டீ.பீ.விஜேகோனை நியமனம் செய்தார். இந்த மாவட்ட அமைச்சரின் செயலாளராக த.வி.கூ.க்கு எதிராக இடைத் தேர்தலில் போட்டியிட்ட வைத்திலிங்கம் துரைசாமியை நியமனம் செய்தார்.

தம்மீது திணிக்கப்படும் அடக்கு முறைகளின் சூடு புரியப் புரிய தமிழ் மக்களிடையே பதட்டம் வளர்ச்சி கண்டுவந்தது. இதனை வடக்கின் நகர்ப்புறக் குட்டி முதலாளித்துவத் தட்டினர் பெரிதும் வெளிக்காட்டிக் கொண்டனர். அவர்களிடையே இளைஞர்களும் மாணவர்களும் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தனர். தமிழர் விடுதலை கூட்டணி ஊடாக தமது ஜனநாயக உரிமைகளை மட்டுமன்றி, தமது உயிர்களையும் கூட உத்தரவாதம் செய்து கொள்ள முடியாது என்ற கருத்து அவர்களிடையே பரந்து பட்டுவந்தது.

## இளைஞர் பேரவை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அமைப்பான தமிழ் இளைஞர் பேரவை அக்கட்சியில் இருந்து விலகிக் கொள்ள முடிவு செய்தது. அதில் பதவிகள் வகித்த சகலரும் இராஜினமாச் செய்ய எடுத்த தீர்மானத்துக்கு இணங்க 40 பேர் ஒரேயடியாக இராஜினாமாச் செய்தனர்.

ஆனால் தீர்க்கமான பிரச்சினை என்ன? இந்த இளைஞர் பகுதியினரும் நகர்ப்புறக் குட்டி முதலாளித்துவ பகுதியினரும் என்ன முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்டிருந்தனர்? இந்தக் கேள்விக்கான பதிலை மார்க்சிச இயக்கம் மட்டுமே வழங்கியது.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஐரோப்பாவில் தோன்றிய ஜனநாயக இயக்கத்தினுள் நகர்ப்புற குட்டி முதலாளித்துவ பகுதியினரதும் விவசாயி களதும் நடவடிக்கைகளை ட்ரொட்ஸ்கி மிகவும் புகழ்பூத்த முறையில் விளக்கினார்: அவர் அங்ஙனம் செய்தது அம்மக்கட் பகுதியினர் மீது வஞ்சம் தீர்ப்பதற்கு அல்ல. வளர்ச்சி கண்டுவந்த வரலாற்று நிலைமைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு வழிகாட்டி, புரட்சிகரச் சக்தியான தொழிலாளர் வர்க்கத்தின் துணைப் படைப்பிரிவுகளாக அணிதிரட்டும் அவசியத்தினை வலியுறுத்துவதற்கேயாகும். நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் விவசாயிகளையும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும் அணிதிரட்டி 1917ல் ரூஷ்ய தொழிலாளர் வர்க்கம் அரச அதிகாரத்தினைத் தனது கைக்குள் போட்டுக் கொள்வதும் முதலாளித்துவ வர்க்கத்தினால் தீர்க்க முடியாது போன முதலாளித்துவ ஜனநாயக பாத்திரத்தினை சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக தீர்க்க முடிந்ததும் அந்த அடிப்படையில் வழிகாட்டியதன் மூலமே.

நீண்ட காலத்துக்கு முன்பே 1906ல் ட்ரொட்ஸ்கி சிறப்பாக ஜேர்மன் படிப்பினைகளைப் புரிந்து கொண்டு சுட்டிக்காட்டிய உரையின் ஒரு பாகம் வருமாறு:

"1848ல் முதலாளி வர்க்கத்துடன் தொடர்புபடாததும் அதைக் கணக்கில் கொள்ளாது நிகழ்வுகள் பற்றி பொறுப்புச் சொல்லும் ஒரு வர்க்கம் அவசியமாகியது. தமது நெருக்குவாரத்தினால் முதலாளி வர்க்கத்தினை முன்னே தள்ளுவதற்கு மட்டும் அல்லாது தீர்க்கமான தருணத்தில் முதலாளி வர்க்கத்தின் அரசியல் பிணக்குவியல் பாதையில் இருந்து வெளியே போடவும் தயாரான ஒரு வர்க்கம் அவசியப்பட்டது. நகர்ப்புற குட்டி முதலாளித்துவ வர்க்கமோ அல்லது விவசாயிகளோ அதைச் செய்வதில் வெற்றி பெறவில்லை.

"நகர்ப்புறக் குட்டி முதலாளித்துவம் நேற்றைய தினத்தை மட்டும் அல்லது நாளைய தினத்தையும் வெறுத்தது. இன்னமும் மத்தியகால உறவுகளில் மூழ்கிப் போயுள்ள அதே வேளையில் "சுதந்திர" கைத்தொழிலுக்கு எதிராக நின்று கொள்ள முடியாது போயுள்ள நிலையிலும் நகரங்களில் தனது அடையாளத்தை இட்டுக் கொள்ள வெற்றி கண்டாலும் மத்திய, பெரும் முதலாளிகளின் முன்நிலையில் பின்னடைந்தது. பாரபட்சங்களில் தலைமூழ்கி, நிகழ்வுகளின் ஓசையில் செவிடாகி போயிற்று. சுரண்டப்படும், இன்னும் சுரண்டும் பேராசையினாலும் உதவியற்றுப் போன குட்டி முதலாளித்துவம் திக்கற்றுப் போயிற்று. அன்று தோன்றிய பாரிய நிகழ்வுகளை கட்டுப்படுத்துவதில் வெற்றி பெறவில்லை.

"விவசாயிகள் சுயாதீனமான அரசியல் ஆரம்பிப்பை அதைக் காட்டிலும் மோசமான முறையில் இழந்து இருந்தது. நூற்றாண்டுகளாக சிறைப்பட்டுக் கிடந்து, வறுமையில் தலைமூழ்கிப் போயும் கோபத்தில் வெந்தும் பழையதும் அவ்வாறே புதியதுமான சுரண்டலின் அனைத்து அடிகளையும் தம்பக்கம் ஈர்த்துக் கொண்ட விவசாயிகள் ஏதேனும் ஒரு கட்டத்தில் புரட்சிகர பலத்தின் பிரமாண்டமான மூலமாக விளங்கியது. ஆனால் அணிதிரளாததும் சிதறுண்டு போனதும் அரசியலினதும் கலாச்சாரத்தினதும் உயிர்மையமான நகரத்தில் இருந்து தினிமைப்பட்டுவிட்டதும் தத்தமது கிராமத்தின் தத்துவ அரங்குடன் அடைபட்டுப் போனதும் நகரம் சிந்திக்கும் அனைத்தையும் பற்றி, அக்கறையற்ற விவசாயிகளுக்கு தலைமைச் சக்தியாக வருவதற்கு எந்த ஒரு முக்கியத்துவமும் இருந்தது கிடையாது. நிலவுடமை சிறைகளின் சுமை தமது தோள்களில் இருந்து அகற்றப்பட்டதுதான் தாமதம் சாந்தமாகிவிடும் விவசாயிகள் தமது உரிமைகளின் பேரில் போராடிய நகரங்களுக்கு நஷ்டஈடு வழங்கியது ——

. . சுதந்திரம் பெற்ற விவசாயிகள் ஆட்சியாளர்களின் வெறிபிடித்த பாதுகாப்பாளர்களாக மாறினர்." (லியொன் ட்ரொட்ஸ்கி நிரந்தரப் புரட்சி பெறுபேறுகளும் முன்நோக்கும் 188 189)

அன்று போலவே இன்றும் ஜனநாயக உரிமைகளைப் பற்றி வாய்பிளக்கக் கூச்சலிடும் புத்திஜீவிகள் எனப்படுவோரின் இயலளவு பற்றியும் ட்ரொட்ஸ்கி சில வாக்கியங்கள் சேர்க்க மறக்கவில்லை. அவர்களைப் பற்றிக் கூறியது இதுதான்:

"புத்திஜீவி ஜனநாயகவாதிகளுக்கு வர்க்கப் பலம் இருக்கவில்லை. ஒரு தருணத்தில் இந்தக் குழு தமது மூத்த சகோதரியான லிபரல் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் வாலாக விளங்கியது. மற்றொரு சமயத்தில் தீர்க்கமான சமயத்தில் லிபரல் முதலாளித்துவ வர்க்கத்தைக் கைவிட்டு இவர்கள் தமது பலவீனங்களை வெளிக்காட்டிக் கொள்ள ஓட்டை வகுத்துக் கொண்டனர். தீர்க்கப்படாத முரண்பாடுகள் பற்றித் தாமே குழம்பிப் போய்க் கிடந்த இவர்கள் எல்லா இடங்களிலும் அந்தக் குழப்பங்களை பரப்பினர்."

ட்ரொட்ஸ்கி இங்ஙனம் விபரித்தது முதலாளித்துவ அமைப்பு இன்னமும் வளர்ச்சி கண்டு கொண்டு இருந்த நிலைமையின் கீழ் புரட்சிகர சமூக சக்தியாக தொழிலாளர் வர்க்கம் எண்ணிக்கை ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் இன்னமும் பலம் கண்டிராத ஒரு காலப்பகுதியில் இருந்த நிலைமையயாகும். இருபதாம் நூற்றாண்டினைப் பற்றி பேசும் போது நாம் எண்ணிக்கை ரீதியிலும் அமைப்பு ரீதியிலும் சக்தி வாய்ந்த தொழிலாளர் வர்க்கம் துரோகத் தலைவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குத் திரும்புகின்றோம். இங்கு எமது கவனம் திரும்பும் 1970பதுகளின் இறுதிப் பாகம் அந்தத் துரோகத்தின் உதவியோடு உலகளாவிய ரீதியில் பிற்போக்கு முதலாளி வர்க்கம் தமது கரங்களால் பலப்படுத்திக் கொள்ளும் காலப்பகுதிக்காகும்.

## தமிழ்க் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள்

தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு சிறப்பாக அதன் இளைஞர் பகுதியினருக்கு தமது ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்வதற்கு எடுக்க வேண்டி இருந்த தொழிலாளர் வர்க்க புரட்சிகர பாதைகள் சமசமாஜ, ஸ்டாலினிச தலைமைகளால் இழுத்து மூடப்பட்டு இருந்தது. அது சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டையும் சேர்ந்த இளைஞர் தலைமுறையினருக்கு இந்தக் கடைகெட்ட தலைமைகள் பெற்றுக் கொடுத்த பேரழிவாகும்.

தமது உரிமைகளை உத்தரவாதம் செய்வதற்கு இயலளவு கொண்ட சமூக சக்தியான தொழிலாளர் வர்க்கம் வர்க்க சமரச சங்கிலியால் பிணைத்துப் போடப்பட்டு இருக்கையில் வழியை தேடிக் கண்டுபிடிக்க முடியாது போன தமிழ் இளைஞர் குழுக்கள் தனிநபா் பயங்கரவாத வழிக்குத் திரும்பினர்.

இந்த வழியில் திரும்பிய பல தமிழ் இளைஞர் அமைப்புக்கள் ஒரே முன்நோக்குப் பாதையை தயார் செய்து கொள்ள குட்டி முதலாளித்துவ இளைஞர்கள் கொண்டிருந்த இயற்கையான இயலாமையை வெளிக்காட்டிக் கொண்டன. பல்வேறு குட்டி முதலாளித்துவ இளைஞர் குழுக்களிடையேயும் விடுதலைப் புலிகள் அமைப்பு தனது உறுதியான கட்டுப்பாடு, அஞ்சாத தியாகம் ஊடாக தனியார் பயங்கரவாத நடவடிக்கைகளில் முன்னணிக்கு வந்திருந்தது இக்கட்டத்திலேயேதான். ஆலால் யூ.எல்.பி. அரசாங்கம் ஏகாதிபத்திய சக்திகளின் பக்கபலத்துடன் தயாரித்து வந்த திட்டங்களை தோற்கடிக்க மட்டுமன்றி, அவற்றை ஸ்தம்பிக்கச் செய்வதில் தன்னும் அந்தத் தனியார் பயங்கரவாத நடவடிக்கைகள் வெற்றி பெறவில்லை.

தமது ஏகாதிபத்திய சார்பு திறந்த பொருளாதார வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடுவதற்கான நிலைமைகளைத் தயாரிக்கும் பொருட்டு தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்தவும் ஒடுக்கப்படும் மக்களை ஆளுக்காள் மோதிக் கொள்ள வைக்கவும் யூ.என்.பி. அரசாங்கம் தொடுத்த தமிழர் விரோத இனவாதத்தை பாய்ந்து வளர்ச்சி பெறச் செய்வது தமிழ்க் குட்டி முதலாளித்துவக் குழுக்களின் தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாக வேகமாக முன்னேற்றம் கண்டது.

1978 ஏப்பிரல் 7ம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பினர் வீதியில் மறைந்திருந்து பொலிஸ் நிலைய அதிபர் பஸ்தியான்பிள்ளை உட்பட்ட நால்வரைக் கொலை செய்ததைத் தொடர்ந்து யூ.என்.பி.அரசாங்கத்தில் சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணி பொத்துவில் எம்.பி.கனகரத்தினத்தை கொழும்பு கொள்ளுப்பிட்டியில் படுகொலை செய்ய அது முயற்சித்தது. யூ.என்.பி. அன்று மரணத்தில் இருந்து தப்பிய போதிலும்

www.padippakam.com

யூ.என்.பி..அரசாங்கம் அந்த முயற்சியை பாவித்து, தமிழ் மக்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் எதிரான ஒடுக்குமுறையை உக்கிரமாக்குவது தவிர்க்கப்பட்டு விடவில்லை.

இதற்கு அவசியமான நச்சுப் பிரச்சாரத்தினை ஆரம்பிக்கும் பொருட்டு யூ.என்.பி..அரசாங்கம் முக்கிய பேர்வழியாக சமரவீர வீரவன்னியைக் கையாண்டது. கனகரத்தினத்தை கொலை செய்யும் முயற்சி, அமிர்தலிங்கம் அவரை இனத்துரோகியெனக் குறிப்பிட்டதைத் தொடர்ந்தே இடம்பெற்றதாக அவன் பாராளுமன்றத்தில் மே 21ம் திகதி குறிப்பிட்டான். ஏகாதிபத்திய கைக்கூலியாக இலங்கையில் ஆட்சியை நடாத்தி வந்த யூ.என்.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் "தேசத் துரோகம்" பற்றி வாய்திறந்தது வன்மத்துக்கு அறிகுறியாகும். வீரவன்னியின் முயற்சி, தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு தொடர் வன்முறைகளை தூண்டிவிடுவதேயாகும்.

இந்த வீரவன்னிதான் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரதித் திட்டமிடல் அமைச்சர்.அவரை இடுப்பில் வைத்துக் கொண்டு ஆடும் பொதுஜன முன்னணி அரசாங்கம் தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளைக் காக்கப் போவதாகக் கூச்சலிட்டுக் கொண்டு, அதிகாரப் பரவலாக்கம் பற்றிக் கூப்பாடு போடுகின்றது. அதுவும் அலம்பலாகும். அதைக்காட்டிலும் கடைகெட்ட அலம்பலில் ஈடுபட்டிருப்பது ஜே.வீ.பி.யாகும். இனவாதத் தமிழர் எதிர்ப்பு யுத்தத்தினை புதிய மட்டத்திற்கு உயர்த்திய யூ.என்.பி.யின் சகாக்களுடன் ஒன்றாக உறங்கும் பொதுஜன முன்னணி அரசாங்கம் "ஈழம்" வழங்க ஆயத்தமாகி வருவதாக அவர்கள் கூறிக் கொள்கிறார்கள். அதன் முதல் நடவடிக்கையே அரசியல் தீர்வு "பொதி" என்கிறார்கள்.இனவாத யுத்தத்தினதும் பொதுமக்கள் ஒடுக்குமுறையினதும் சுக்கானை தனது கைக்குள் கொணரத் துடிக்கும் ஜே.வீ.பி. மக்களை குழப்பியடிக்கும் பொருட்டு முன்வைக்கும் குத்துக்கரணப் பேச்சுக்கள் அத்தகையதாக உள்ளது. அவற்றினால் ஏமாந்து போவது, அமைப்பு ரீதியில் சிறிதாக இல்லாது போயினும் அரசியல் அறிவு குறைந்தவர்களும் புத்தி சுவாதீனமற்றவர்களும் மட்டுமே.

தனிநபர் பயங்கரவாத விதிமுறையை அரவணைத்துக் கொண்ட தமிழ்க் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களின் தடுமாற்றங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் வங்குரோத்தினையும் பயன்படுத்திக் கொண்ட யூ.என்.பி.தமிழ் மக்களுக்கு எதிரான வெறிக்குத் தூபம் போட வீரவன்னியின் பின்னால் மாபெரும் இனவாதியும் காட்டுமிராண்டி சாதிவாதியுமான சிரில் மத்தியூவை முன்னணிக்குத் தள்ளியது.

சிரில் மத்தியூ தனது நடவடிக்கைகளை 1972ல் முதலாளித்துவ சி.ல.சு.க சமசமாஜ கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கத்தினால் தயார் செய்யப்பட்டு, 1983ல் யூ.என்.பி. அரசாங்கத்தினால் தொடுக்கப்பட்ட தமிழர் விரோத இனவாத யுத்தத்திற்கான வேட்டுவைத் தீர்த்து வைத்தான்.

சிரில் மத்தியூவின் இனவாதப் பிரச்சாரம் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் அமிர்தலிங்கம் ஜனாதிபதி ஜயவர்தனவுக்கு முறைப்பட்ட சந்தர்ப்பத்தையும் அதற்கு ஜயவர்தனவின் பிரதிபலிப்புக்களையும் பற்றி பத்திரிகையாளர் ரீ.சபாரத்தினம் வெளியிட்ட The Murder of a Moderate என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது வருமாறு :

"அரசாங்க அமைச்சர் ஒருவர் எம்மைத் தாக்கும் போது நாம் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது எப்படி" என அமிர்தலிங்கம் ஆட்சேபனைத் தொனியில் ஜயவர்தனவிடம் குறிப்பிட்டார்.

"ஜயவர்தன சிரித்தபடி இதற்கு பதில் அளித்தார்..அவரைப் பற்றி குழப்பம் அடைய வேண்டாம். உங்களது கட்சியுடன் நாம் கொண்டுள்ள நெருக்கமான தொடர்புகள் பற்றி சிங்களத் தீவிரவாதிகள் இடையே சில வெறுப்புக்கள் உள்ளன. மத்தியூவின் பணி அவர்களை மகிழ்விப்பதே."

இந்தச் சம்பவத்தை ரீ.சபாரத்தினத்திடம் குறிப்பிட்ட அமிர்தலிங்கம் "இந்த நரிகள் தொழிற்படும் விதத்தைப் பாருங்கள்" எனவும் குறிப்பிட்டதாகவும் இந்நூலாசிரியர் கூறுகின்றார்.

திட்டமிட்டு இனவாதத்தைக் கட்டவிழ்த்துவிட சபதம் செய்திருந்த ஜே.ஆர். ஜயவர்தன இச்சந்தர்ப்பத்தில் செயற்பட்டுவந்தது நரியைப் போல் அல்ல: இரத்த வெறி கொண்ட மிருகம் போலாகும்.இதற்கு முரண்பட்ட விதத்தில் ஒடுக்கப்படும் மக்களின் தோளின் மீது ஏறிக் கொண்டிருந்த முதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணி கோழை நரியின் பாத்திரத்தை வகித்துக் கொண்டிருந்தது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை விடைத் தாள்களைத் திருத்திய தமிழ் பரீட்சையாளர்கள் தமிழ் மாணவர்களுக்கு கூடிய புள்ளிகளை வழங்கியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து சிரில் மத்தியூ கிளர்ச்சியைத் தொடங்கினான். சிறப்பு பத்திரிகையாளர் மகாநாட்டைக் கூட்டிய சிரில் மத்தியூ உயிரியல் கேள்வித் தாள்கள் இரண்டெனக் காட்டி நுளம்பின் வாழ்க்கைச் சுற்றோட்டம் பற்றிய கேள்விக்கு இரண்டு புள்ளிகள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளதாக மிரட்டினார். நுளம்பின் வாழ்க்கையை விட மேலதிகப் பெறுமதி எதுவுமே கிடையாத இப்பிரச்சினை எழுப்பப்பட்டதற்குக் காரணம், மலேரியாக் காய்ச்சல் போன்று இனவாதத்தையும் பரப்புவதேயாகும்.

ஆனால் வங்குரோத்தடைந்த முதலாளித்துவ தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் சிவசிதம்பரத்தினால் 1978 டிசம்பர் 11 திகதி பாராளுமன்றத்தில் இந்த வெட்கக் கேடான அறிக்கைக்கு வழங்க முடிந்த பதில் "எமக்கு எதையும் சகித்துக் கொள்ள முடியும். ஆனால் குள்ளத்தனமான குற்றச்சாட்டுக்ளை சகிக்க முடியாது" என்பது மட்டுமே. சிங்கள இனவாதத்தை தூண்டி தமிழ் மக்களுக்கு எதிரான மக்கள் படுகொலைகளுக்கு தயாராகி வந்த யூ.என்.பி.அரசாங்கத்தை எதிர் கொள்கையில் தமக்கு இருந்து வந்த முதலாளித்துவ பலவீனத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லொழுக்க ஆடையால் இழுத்துப் போர்த்துக் கொள்ள முயன்றது.

இத்தகைய வங்குரோத்து வேண்டுகோள்களுக்கு பதிலளிக்கும் பொருட்டு முதலாளி வர்க்கம் பிரித்தானிய ஏகாதிபத்திய காலத்தில் இருந்தே தயார் நிலையில் வைத்திருந்தது பால் வார்த்து மீண்டும் மீண்டும் சாயம் தீட்டி வைத்திருந்தது பிக்குமார் பரம்பரையேயாகும்.

தாம் மூன்று மகா சங்கத்தினராக பிளவுபட்டுக் கிடப்பது ஏன் என்பதை பற்றி எந்த ஒரு நிஜமான விளக்கத்தையும் வளங்க இலாயக்கற்று உள்ள மூன்று மகா சங்கத்தினரும் முன்னணியில் பாய்ந்து நாட்டைப் பிளப்பதை எதிர்ப்பதாக கூச்சல் போட்டுக் கொள்கின்றார்கள்.சாதிவாதத்துக்கு இணங்க பிளவுண்டு போய் தத்தமது பிட்ஷா பாத்திரங்களை வெவ்வேறாக ஏந்திக் கொண்டுள்ள மகா சங்கத்தினரின் கூட்டைக் காட்டிக் கொண்ட ஐக்கிய பௌத்த சபையும் தமிழர் எதிர்ப்பு பிரச்சாரத்துக்கு காவி உடையைத் தூக்கிக் கொண்டு பாய்ந்து விழுந்தது. அந்தக் கூட்டத்தில் அஸ்கிரிய பௌத்த பீடத்தின் தலைமைப் பிக்குவான பலிபானே சந்தானந்தாவும் மல்வத்த பௌத்த பீடத்தின் தலைவர் றம்புக்வெல்ல சிறீ சோபித்தவும் கலந்து கொண்டனர்.மிருகங்கள் சம்பந்தமாக கொல்லாமையை போதிக்கும் தர்மம், பிற்போக்கு ஆளும் வர்க்கத்தின் அவசியங்களுக்கு இணங்க மனிதர்கள் சம்பந்தமாக

2. வன்முறையின் ஊற்றுவாயாக மாறும் விதத்தை இந்த அபிவிருத்திகள் காட்டின.

இந்த விஷப் பாம்பை பாவித்துக் கொண்டுள்ள இனவாத வாகனத்தின் சுக்கானைப் பிடித்துக் கொண்டிருந்த ஜே.ஆர் ஜயவர்தன 1979ன் முடிவுக்கு முன்னர் வடக்கு பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டுவதாக வாயடித்துக் கொண்டு பிரிகேடியர் வீரதுங்கவை வடக்கின் தளபதியாக நியமித்தார். பிரிகேடியர் வீரதுங்கவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதியின் கட்டளையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது:

தீவிலும் சிறப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலும் சகல வடிவங்களையும் கொண்ட பயங்கரவாத தொற்றுநோயை ஒழித்துக் கட்டுவது உங்களது கடமையாகும். நான் உங்கள் சேவைக்காக அரசின் அனைத்து வளங்களையும் வழங்குகின்றேன். சட்டங்களை மதிக்கும் அனைத்து பிரஜைகளையும் உங்களுக்கு அவர்களின் ஒத்துழைப்பை வழங்கும்படி நான் வேண்டுகின்றேன். இந்தப் பாத்திரத்தை இட்டு நிரப்பும் நீங்கள் அதை 1979 டிசம்பர் 31க்கு முன்பு நிறைவு செய்ய வேண்டும்.□

வார்த்தைகள் கணடிப்பானவை. கட்டளைக் கோலம் இறுக்கமானது. இலக்கோ நிச்சயமானது. ஆனர்ல அவை எல்லாம் புஷ் வாணமாகியது.

–தொடரும்.




# அன்சல்–லங்கா விசாரணைக் கமிட்டி முதல் கூட்டம் ஆரம்பம்

பியகமை சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த அன்சல் லங்கா கம்பனியினால் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களால் ஏற்படும் தாக்கங்களை அம்பலப்படுத்தும் பொருட்டு விசாரணை நடாத்தி வரும் சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டி தனது முதலாவது. விசாரணைக் கூட்டத்தை கடந்த ஜனவரி 25ம் திகதி தோம்பே நூல்நிலையத்தில் ஆரம்பித்தது. இந்த விசாரணைக் கமிட்டியிடம் இந்த இரசாயனப் பொருட்களினால் ஏற்படும் தீங்குகள் பற்றி எழுத்துமூலமான சாட்சிகளைச் சமர்ப்பித்த தர்ஷன மேதிஸ் அன்றைய தினம் நேரில் சாட்சியளித்தார். இலங்கை இரசாயன விஞ்ஞான நிறுவனத்தின் தொழில்நுட்ப அங்கத்தவரும் இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆய்வு நிறுவனத்தின்(CISIR) தொழில்நுட்ப உதவியாளருமான அவர் தாம் தனிப்பட்ட ரீதியில் நடாத்திய ஆய்வுகளின் முலம் பெற்ற சாட்சியங்களை முன்வைத்து அங்கு சாட்சியமளித்தார்.

இந்தக் கமிட்டியின் கூட்டம் சுயாதீனத் தொழிலாளர் விசாரணைக் கமிட்டியின் பானினி விஜேசிரிவர்தன தலைமையில் ஆரம்பமாகியது. சோசலிச சமத்துவக் கட்சியினால் நிறுவப்பட்ட சுதந்திர வர்த்தக வலயம் பற்றிய சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டி சு.வ.வ. தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாக விசாரணைகள் நடாத்துவதாக விஜேசிரிவர்தன குறிப்பிட்டார். அது அனைத்துலகக் குழுவின் கிளைகள் தாம் தொழிற்படும் நாடுகளில் நடாத்திவரும் சுயாதீன விசாரணைகளின் ஒரு பாகமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இலங்கையினுள் இடம்பெறும் இந்த விசாரணை,

விசாரணைக் கமிட்டி நடாத்தும் அத்தகைய முன்றாவது விசாரணையாகும் எனவும் அதன் மூலம் அன்சல் லங்கா பாவிக்கும் இரசாயனத் திரவியங்களின் ஆபத்தான தாக்கங்களை அம்பலப்படுத்தப் போராடுவதாகவும் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் பேசிய சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டித் தலைவி விலானி பீரிஸ் பின்வருமாறு குறிப்பிட்டார்: அன்சல் லங்கா தொழிலாளர்கள் பலர் இரசாயனத் திரவியங்களின் தாக்கம் காரணமாக நோயாளிகளாகி உள்ளனர். இரசாயனம் உடலில் பாய்வதால் நோயாளிகள் ஆகியுள்ளனர். எழும்ப இருக்க முடியாத நிலையில் படுத்த படுக்கையிலும் உள்ளனர். ஒரு வருட காலத்தினுள் மூன்று தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளனர். எந்த ஒரு அரசியல் கட்சியோ அல்லது அந்தக் கட்சிகளின் அதிகார பூர்வமான புதினப் பத்திரிகைகளோ அல்லது வேறு வெகுஜன தொடர்புச் சாதனங்களோ இவை தொடர்பாக எந்த ஒரு செய்தியையும் வெளியிட்டதில்லை. செய்திகளை விற்றுத்தள்ளும் பொருட்டு மரணங்களைப் பரப்பிவரும் தொடர்புச் சாதனங்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றி மௌனம் சாதிக்கின்றன. சோசலிச சமத்துவக் கட்சியினால் அமைக்கப்பட்ட சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டி அன்சல் லங்கா நச்சு இரசாயனங்களின் ஆபத்துக்களையிட்டு இத்தகைய ஒரு நிலையிலேயே சுயாதீன விசாரணைகளை ஆரம்பித்தது.

அன்சல் லங்கா தொழிலாளர்களிடம் இருந்து விசாரணைக் கமிட்டிக்கு பேராதரவு கிடைத்துள்ளதாகவும் அவர்களின் வேண்டுகோளின் பேரிலேயே விசாரணைகள் ஆரம்பமானதாகவும் அவர் குறிப்பிட்டார். இதற்கு ஆதாரமாக விலானி பீரிஸ், தொழிலாளர்களின் அறிக்கைகளையும் இறந்த தொழிலாளர்களின் உறவினர்களின் கடிதங்களையும் கூட்டத்தினருக்கு வாசித்துக் காட்டினார்.

தர்ஷன மேதிசின் சாட்சி அன்சல் லங்கா பாவிக்கும் நச்சு இரசாயனத் திரவியங்களின் உண்மை நிலைமையை அம்பலப்படுத்துவதாக உள்ளது. அவரின் சாட்சிகள் சம்பந்தமாக விளக்கங்கள் வேண்டுமானால் கேள்வி நேரத்தில் வேண்டிய கேள்விகளைக் கேட்கலாம் எனவும் விலானி பீரிஸ் குறிப்பிட்டார்.

கேள்வி நேரம் வந்ததும் கூட்டத்துக்கு வந்த பலர் தர்ஷன மேதிசிடம் பல கேள்விகளை கேட்க முன்வந்தனர்.

கேள்வி: உற்பத்தியில் பல்வேறு இரசாயனத் திரவியங்களைப் பாவிக்க நேரிடுகின்றது. பாவனையில் மனிதனுக்கும் சுற்றாடலுக்கும் நாசம் ஏற்படாத வகையில் அவற்றைப் பயன்படுத்த முடியுமா?

பதில்: இரசாயனத் திரவியங்கள் உணவுப் பொருட்களில் கூட அடங்குகின்றன. அளவுக்கு அதிகமாக பயன்படுத்தினால் விஷம் ஏறுகின்றது.பக்டரிகளிலும் இரசாயனத் திரவியங்களை பாவிக்க நேரிடுகின்றது. ஆனால் அவை உடம்பில் ஏறாதிருக்க கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் உள்ளன. உதாரணமாக அன்சல் லங்கா நிறுவனத்தின் கோன் ஸ்டாச் பாவிக்கின்றார்கள்.

கோன்ஸ்டாச் உணவு. ஆனால் சுவாசத்தில் புகுந்தால் நோயாளி ஆகின்றார். அந்த நிறுவனத்தில் கோன்ஸ்டாச் உட்பட்ட பவுடர் வகைகள் சுவாசத்தினுள் செல்வதால் தொழிலாளர்கள் நோயாளிகள் ஆகின்றனர்.

படிப்பகம்

# சோ.ச.க. தோட்டங்களி
# தொழிலாளர்கள் போராட்ட

பெப்பிரவரி 5ல் இருந்து 14ம் திகதி வரை நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் போராட்டத்தில் அட்டன், பதுளை, பண்டாரவளை, கண்டி, அம்பலாங்கொடை, காலி, மத்துகம முதலிய இடங்களில் சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் தோட்டத் தொழிலாளர்களிடையே பலம் வாய்ந்த தலையீடுகளை நடாத்தின. இத்துடன் அத்தலையீடுகளின் போது தொழிலாளர்கள் வெளியிட்ட கருத்துக்கள் பிரசுரமாகின்றன.

டபிள்யூ.ஏ. சுனில்,
ஆர். சிறீதரன், நந்தன,
ஜயரத்ன, அரவிந்தன்

## அட்டன் தோட்டங்களில் ஊர்வலம், கூட்டம், மறியல்

சோசலிச சமத்துவக் கட்சியின் பிரச்சாரத்தின் போது அட்டன் பிராந்தியத்தில் உள்ள பென்மூர், டிரேடன், ரொசிடா, பரடைஸ், சலங்கந்த தோட்டங்களில் மறியலும் கூட்டங்களும் நடைபெற்றன. பென்மூர், சலங்கந்த தோட்டங்களில் இரண்டு ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்துவதில் சோசலிச சமத்துவக் கட்சி வெற்றி கண்டது. பென்மூர் தோட்டத்தில் நடைபெற்ற ஊர்வலத்தில் 90 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். இதற்கு சலங்கந்தையில் இருந்து 30 தொழிலாளர்கள் வருகை தந்திருந்தனர்.

சோசலிச சமத்துவக் கட்சி நடாத்திய இந்தப் பிரச்சாரத்தில் தொழிலாளர்கள் தாம் முகம் கொடுத்துள்ள பிரச்சினை சம்பந்தமாக கட்சி தோழர்களுடன் கலந்துரையாடினர். அதில் அவர்கள் பெரிதும் அக்கறையும் ஆர்வமும் காட்டினர். டிரேடன் தோட்டத்தைச் சேர்ந்த ஏ.சுப்பிரமணியம் என்ற தொழிலாளி தாமும் தமது குடும்பத்தினரும் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளை பின்வருமாறு விளக்கினார்: "எமது குடும்பத்தில் ஆறு பேர் உள்ளனர். தோட்டத்தில் வேலை செய்வது மூவர். மூன்று பிள்ளைகள் பாடசாலை போகிறார்கள். வேலை செய்யும் மூவருக்கும் மாத வருமானமாக கிடைப்பது ரூபா.4000. படிப்பு செலவுக்கு ரூபா.3000 வேண்டி உள்ளது. குடும்பச் செலவு ரூபா.3500 . மிகவும் கஷ்டத்துடன் சரிக்கட்டிக் கொள்கின்றோம். எமது பிள்ளைகளுக்கு மீன் , இறைச்சி தின்னக் கொடுக்க முடியாது. அவற்றின் விலை பெரிதும் அதிகம். இப்போது கிடைக்கும் ரூபா.83ஐக் கொண்டோ அல்லது ரூபா.105ஐக் கொண்டோ வாழ்க்கையை ஓட்டமுடியாது. சோசலிசக் கட்சி முன்வைக்கும் ரூபா. 5000 மாதச் சம்பளத்துக்கு நாம் விருப்பம். தொழிற்சங்கத் தலைவர்கள் அப்படி ஒரு சம்பளக் கோரிக்கையைப் பற்றி மூச்சுக் காட்டுகிறார்கள் இல்லை."

## டிரேடன்

டிரேடன் தோட்டத் தொழிலாளர்களால் பின்வரும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருந்தன:

×சுரண்டப்படும் தொழிலாளர் வர்க்கத்துக்கு நீதியான சம்பளம் கொடு! ×பிரச்சினைக்கான இறுதித் தீர்வு மாதச் சம்பளம் !.× இலாபப் பங்குகள் வழங்குவதாக தொழிலாளர்களை ஏமாற்றாதே ! × சம்பளம் அதிகரிக்கப்படும் வரை போராட்டத்தை முன்னெடுப்போம் !× ஐக்கியத்தின் மூலம் அதைப் பெறுவோம்.! × வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு ஏற்ப சம்பளத்தை கூட்டு !

**தலைவர்கள் சம்பளம் கேட்பது கம்பனிக்கு விரும்பமான தொகையை பெற்றுக் கொள்வதற்கு**

பரடைஸ் தோட்டத்தைச் சேர்ந்த முத்துக்குமாரன் என்ற தொழிலாளி பின்வருமாறு குறிப்பிட்டார்:

எனது குடும்பத்தில் நால்வர் உள்ளனர். வேலை செய்வது நான் மட்டுமே. எனது பிள்ளைகள் படிக்க மாதம் ரூபா.1000 செலவழிக்க வேண்டும். அரிசி வாங்க மட்டும் ரூபா.1500 வேண்டும். ஆனால் எனது மாத வருமானம் ரூபா.700. ஒரு கிலோ அரிசி ரூபா. 25. ஒரு கிலோ மிளகாய் ரூபா. 100. கிடைத்து வந்த அற்ப வாழ்க்கைச் செலவு அலவன்சையும் வெட்டி விட்டார்கள். சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே எமது பிரச்சினைகளின் அடிப்படையில் மறியல் , ஊர்வலங்கள் ஏற்பாடு செய்து போராடுகின்றது. சோ.ச.க. வேலைத்திட்டம் வேலை நிறுத்தம் செய்துவரும் தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிக்கின்றது.

## டிக்கோயா

சோசலிச சமத்துவக் கட்சியினால் டிக்கோயா தோட்டத்தில் நடாத்திய ஊர்வலத்தில் 30 தொழிலாளர்கள் கலந்து கொண்டார்கள். ஊர்வலம் சென்ற தொழிலாளர்கள் ரூபா.5000 மாதச் சம்பளக் கோரிக்கை சுலோகத்தை கோஷிக்கும் போது இ.தொ.கா.தலைவர் ஒருவர் சிலேடையாகச் சிரித்து பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இது சாத்தியமானதா? கேட்கிற ரூபா.105 தர முடியாதாம். ரூபா.5000 கிடைப்பது எப்படி? இப்படி பக்டரிகளில போராடி வென்ற ரூஷ்யா, ரூமேனியா நாடுகளில் சோசலிசம் இன்று வீழ்ச்சி கண்டு விட்டது. இப்ப இது எல்லாம் பொய்."என்றார்.

நமது தலைவர்களின் இலட்சணங்கள் தெரிகிறது தானே .அவர்கள் சம்பளம் கேட்பது எமது தேவைக்கு அல்ல. கம்பனிகள் தர சம்மதமான தொகையை பெறுகின்றார்கள். அதற்கும் கம்பனி முடியாது என்றால் சலாம் போடுகின்றார்கள் என்று இ.தொ.கா.தலைவர் ஒருவரின் பேச்சைக் கேட்ட தொழிலாளி ஆத்திரத்துடன் சொன்னார்.

## கொட்டகலை

கொட்டகலை ரொசிடா தோட்டத்தில் இடம்பெற்ற பிரச்சாரத்தின் போது சந்தித்த தொழிலாளி ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

இந்த வேலைநிறுத்தம் சம்பந்தமான விடயங்களை தெளிவுபடுத்த எவரும் எம்மைச் சந்திக்க வரவில்லை.தலைவர்கள் எப்படியோ தலைமறைவாக இருந்து கொண்டுள்ளார்கள். ரூபா.105 சம்பளம் கேட்பதாகச் சொன்னாலும் அது உண்மையா என எம்மிடம் கேட்கவில்லை. விலைவாசி அதிகரிக்கும் விதத்தில் இந்த ரூபா.105 உடன் சீவிப்பது எப்படி? நாம் வேலைநிறுத்தத்தில் இறங்கியது எமது சம்பளம் குறைவாக இருந்ததாலேயே. விலைவாசிக்கு ஏற்ற சம்பளம் எமக்கு ஜீவியத்திலேயே கிடைத்தது கிடையாது.

இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை ஒட்டி சோசலிச சமத்துவக் கட்சியினால் வேலை நிறுத்தத்துக்கு முன்பாக விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தை வாசித்த மற்றொரு தொழிலாளி பின்வருமாறு குறிப்பிட்டார்: "உண்மைதான் . எமக்கு வேண்டியது மாதச் சம்பளம். தொழிற்சங்கக்காரர்கள் அப்படி ஒன்றைப் பற்றி ஒரு நாளும் கேட்டது கிடையாது."

கொட்டகலை வூட்டன் தோட்டத்தின் பீ டிவிசனை இழுத்து மூடிய 5 ஆண்டுகளுள் 75 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தனர். அந்நாட்களில் சோ.ச.க. இந்தத் தொழிலாளர்களின் தொழில்களைக் காக்கும் பொருட்டு நடவடிக்கைக் குழுக்களை அமைத்துக் கொண்டு போராட்டத்தை ஒழுங்கு செய்யத் தலையிட்ட வேளையில் இ.தொ.கா.தலைவர்கள் அதை கடுமையாக எதிர்த்தனர். சோ.ச.க.தோழர்கள் வூட்டன் தோட்டத்தில் நடாத்திய பிரச்சாரத்தின் போது இத்தோழர்களில் சிலரைச் சந்தித்தது.அச்சந்திப்பின் போது அவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களால் காட்டிக்கொடுக்கப்பட்ட விதத்தை எடுத்துக் கூறினார்கள்.

"இந்தத் தோட்டத்தின் சொந்தக்காரனான சிவராஜா தொண்டமானின் நண்பர். சகல தேர்தல்களுக்கும் பணம் கொடுக்கும் முதலாளி. நாம் மாதத்துக்கு 22 நாட்கள் வேலை கேட்டபோது தோட்டத்தை விட்டுவிட்டு போய்விட்டார். நாம் தொழில்தரும்படி கேட்டோம். ஊழியர் சேமலாப நிதியை தரும்படி கேட்டோம். இ.தொ.கா.எதையும் செய்யவில்லை. எமது கோரிக்கைகளை பெற்றுக் கொள்ள போராட வேண்டும் எனக் கூறினோம். ஆனால் எதையும் செய்யவில்லை. இரண்டு மாதம் அரிசி கொடுத்தார்கள். பின்னர் வழக்குப் போட்டோம். வழக்கை விலக்கிக் கொண்டார்கள். எமக்கு வீடடு உரிமையும் 10 பேர்ச் காணியும் தருகிறோம் என்றார்கள். தோட்ட நிர்வாகிகள் அலுவலகத்தில் அதைப் பற்றிக் கேட்ட போது அந்தக் கோரிக்கைகளுக்கு சங்கத்துடன் உடன்பட்டுள்ளதாக தெரிவித்தனர். ஆனால் இவை எவையும் கிடைக்கவில்லை. இருந்து வந்த லயின் அறைகளில் இருந்து தள்ளி பக்டரி கட்டப் போகின்றார்கள்..அப்படி நடந்தால் நாம் தீமூட்டிக் கொண்டு சாவோம்."

இ.தொ.கா.தொழிலாளர்களை எத்தகைய அவலநிலைக்குள் தள்ளி உள்ளது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு .

## பரடைஸ்

அட்டன் பரடைஸ் தோட்டத்தில் நாம் காணக் கிடைத்தது இதற்குச் சமானமான ஒரு நிலையாகும்.1997ஜூன் மாதத்தில் 72 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதற்கு எதிராக ஜூன் 16ம் திகதி தொடக்கம் ஜூலை 16ம் திகதி வரை தொழிலாளர்கள் ஒரு மாத காலம் வேலை நிறுத்தம் செய்தார்கள்.தொண்டமான், செல்லச்சாமி, சந்திரசேகரன் மூவரும் தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை எதிர்த்தனர். ஆனால் தொழிலாளர்கள் தொழிற்சங்கத் தலைவர்களின் எதிர்ப்பை கணக்கில் எடுக்காமல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். பொலிசாரைக் கொண்டு பயமுறுத்துவதன் மூலம் தொழிலாளர்களின் போராட்டத்தை உடைக்க முயன்றாலும் தொழிலாளர்கள் திடசங்கற்பத்துடன் போராடினர். தொழிற்சங்கத் தலைவர்களின் காட்டிக் கொடுப்புக்கு எதிராக சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் தொழிலாளர்களின் தொழில்களைக் காக்க போராடியது. வேலைநிறுத்தம் செய்துவந்த தொழிலாளர்களின் தொழில்களைக் காக்க ஏனைய தொழிலாளர்களை அணிதிரட்ட துண்டுப்பிரசுரம் விநியோகித்து பிரச்சாரத்தில்



பண்டாரவளை குருகுந்த தோட்ட மறியல் பிரச்சாரம்



போடைஸ் தோட்டத்தில் மறியல் பிரச்சாரம்

www.padippakam.com


# ல் பலம்வாய்ந்த பிரச்சாரம்

# த்தில் குதித்த விதம்

ஈடுபட்டதோடு சோ.ச.க.தொழிலாளர்களின் மறியல் போராட்டத்தையும் நடாத்தியது. தொழிற்சங்கத் தலைவர்கள் இந்தப் போராட்டத்தை அடியோடு எதிர்த்தனர். சோ.ச.க.வின் தலைமைட்டைத் தொடர்ந்து தொழிலாளர் போராட்டம் முன்நோக்கிச் செல்லும் ஒரு நிலையில் தொழிற்சங்கத் தலைவர்கள் இரண்டு மாதங்களுக்குள் திரும்பத் தருவதாக முதலாளிகள் வாக்குறுதி வழங்கியதாகக் கூறி போராட்டத்தை உடைத்தனர். இந்த இலட்சணத்தில் பொய் பரப்பி தம்மைக் காட்டிக் கொடுத்த தலைவர்களையிட்டு தொழிலாளர்கள் பெரும் ஆத்திரத்துடன் சோ.ச.க.உறுப்பினர்களுடன் பேசினர்.

"சகலரும் எம்மைக் காட்டிக் கொடுத்து வருகின்றார்கள். நீங்கள் மட்டுமே எமக்கு உண்மையைச் சொல்கின்றீர்கள். இதைத் தான் கட்சி என்பது. அச்சம் இல்லாமல் உண்மையை சொல்ல வேண்டும்.என்ன என்பதைத் தொழிலாளர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.பெரியவற்றை இவர்களால் இன்னமும் செய்ய முடியாது போனாலும் இப்போது செய்பவை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை.எம்மை உத்சாகப்படுத்துவது எவ்வளவு நல்லது ?

மற்றொரு தொழிலாளி பின்வருமாறு குறிப்பிட்டார்:

"எம்மைக் காட்டிக் கொடுத்த தொழிற்சங்கத் தலைவர்கள் மூச்சடைத்துப் போய் உள்ளார்கள். நாம் கூட்டத்தில் கலந்து கொணடோம் என உங்களின் பத்திரிகையில் படத்துடன் போடுங்கள்." என்றார்.

## மஸ்கேலிய

மஸ்கேலிய தோட்டக் கம்பனியின் டீ டிவிசனில் பிரச்சாரத்தில ஈடுபட்ட சோ.ச.க.அங்கத்தவர்கள் அங்கு தோட்டக் கூட்டமும் நடாத்தினர். இ.தொ.கா. தோட்டத் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களை பொலிசிடம் பிடித்துக் கொடுப்பதாக பயமுறுத்தி வந்தனர். இதற்கு எதிராகத் தலையிட்டதோடு "நாமும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்கின்றோம் உங்களையும் பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கிறீர்களா" எனக் கேட்டார்கள். இங்கு இடம்பெற்ற மறியல் போராட்டத்தில் சுமார் தொழிலாளர்களும் இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்டனர்.

மற்றொரு தொழிலாளி பேசுகையில் ரூபா.105 கேட்கும் இவர்கள் எமது பிரச்சினைகளைப் பற்றி அறியார்கள். நாம் வாழும் அவை வீடுகளா? எமக்கு இருக்கும் வசதிகள் என்ன? எமது குழந்தைகளின் இலட்சணம் தெரிகின்றதா நாம் தெருவில் இறங்கி நடக்க முடியுமா? அடையாள அட்டை உள்ளதா? இருந்தாலும் அச்சம் இல்லாமல் போக முடியுமா? எமது குழந்தைகளுக்கு தொழில் இருக்கின்றதா?"

தொழிலாளர் பத்திரிகையை விலைக்கு வாங்கிக் கொண்டும் சோ.ச.க. அங்கத்தவர்களுக்கு குளிர்பானம் வழங்கியும் அவர்கள் சோ.ச.க. பிரச்சாரத்துக்கு ஆதரவைத் தெரிவித்தனர்.

## தொழிற்சங்க காடைத்தனம்

மஸ்கேலியா: சோ.ச.க.அங்கத்தவர்களுக்கு எதிராக தொழிற்சங்கத் தலைவர்கள் காடைத்தனம்




சம்பளப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பண்டாரவளை-குருகுந்த தோட்ட தொழிலாளர்

பெப்பிரவரி 9ம் திகதி மஸ்கேலியாவில் நடைபெற்ற ஊர்வலத்தில் சோ.ச.க. அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். இரண்டாயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் இந்த ஊர்வலத்தில் பயணம் செய்தனர். ஊர்வலத்தில் சோசலிச சமத்துவக் கட்சி தோழர்களின் தலையீட்டிற்கு தொழிலாளர்களின் பெரும் வரவேற்புக் கிடைத்ததோடு அவர்கள் சோ.ச.க.துண்டுப் பிரசுரத்தில் இருந்த சுலோகங்களைக் கோஷித்ததோடு அவற்றை ஊர்வலப் பதாகைகளில் எழுதி எடுத்துச் செல்லவும் அவற்றை இடத்துக்கிடம் காட்சிக்குத் தொங்க விடவும் முன்வந்தனர்.

சோசலிச சமத்துவக் கட்சியின் தலையீட்டுக்கும் அது முன்வைத்த சோசலிச வேலைத்திட்டத்துக்கும் தொழிலாளர்களிடம் இருந்து கிடைத்த பேராதரவினால் தொழிற்சங்கத் தலைவர்கள் கோபமடைந்ததோடு குழம்பியும் போயினர்.

தொழிலாளர்களிடையே குழப்பத்தை உருவாக்கும் பொருட்டு எமது தோழர்களை விடுதலைப் புலிகளாகவும் ஜே.வீ.பி. காரர்களாகவும் சாயம் பூசிய இ.தொ.கா.மஸ்கேலிய பிரதிநிதியான வீரசாமி, ஸ்டாலினிச செங்கொடிச் சங்கத்தின் சிவசுந்தரம், இ.தொ.கா.சண்முகராஜா, கிளின்டன் தோட்ட இ.தொ.கா.தலைவர் இராஜேந்திரன், மஸ்கேலிய நகரசபை அங்கத்தவர் ராஜா ஆகியோர் எமது தோழர்களைத் தாக்கியதோடு அவர்களின் கைகளில் இருந்த துண்டுப்பிரசுரங்களையும் தொழிலாளர் பாதை பத்திரிகைகளையும் பறித்து தீமூட்டினர். அத்தோடு சோ.ச.க. அங்கத்தவர்களான ரீ.எம்.கருணாரத்ன, ஆர்.சிறீதரன் சுந்தரலிங்கம் ஆகியவர்களை பிடித்து மஸ்கேலிய பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.இந்தக் குண்டர் தாக்குதலுக்கு எதிராக தொழிலாளர்கள் எமது தோழர்களின் பாதுகாப்புக்காக முன்வந்தனர்.இருந்த போதிலும் பொலிசார் தொழிற்சங்க குண்டர்களைக் காத்ததோடு சோ.ச.க. தோழர்களை தடுத்துவைக்கும் உத்தரவின் கீழ் கொழும்பு சிறைச்சாலைக்கு அனுப்பவும் முயற்சித்தது.சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயசினதும் அட்டன் சோ.ச.க.அங்கத்தவர் சாந்தகுமாரினதும் தீர்க்கமான தலையீட்டினால் தோழர்களை பொலிசார் விடுதலை செய்ய நேரிட்டது.

## பண்டாரவளை

பண்டாரவளை பகுதியில் சோ.ச.க. அங்கத்தவர்கள் வெலிமடை, அலகொல்ல, குருகுந்தே, நாயபத்த, பதுளை சென்ட்.ஜேம்ஸ் போன்ற தோட்டங்களில் தலையிட்டதோடு பெப்பிரவரி 6ம் திகதி குருக்குந்தே தோட்டத்தில் மறியல் போராட்டமும் நடாத்தினர்.

## மத்துகமை

மத்துகமவில் அலதுவ, யட்டதொழவத்த, மலபட அம்பதன்ன முதலிய தோட்டங்களில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்ட சோ.ச.க.அங்கத்தவர்கள் எனைய இடங்களிலும் தொழிலாளர்களை ஊக்கமளிக்கவும் சரியான வேலைத்திட்டதுடன் தலையிட்டனர். மலபட தோட்டத்தைச் சேர்ந்த எம். ஜெகநாதன் என்ற தொழிலாளி சோ.ச.க.தலையீட்டைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்: "உங்களின் தோழர்கள் மட்டுமே நாம் வேலைநிறுத்தம் செய்யும் போது வந்தார்கள். நாம் இன்னமும் உங்களின் தொழிற்சங்கத்தில் சேரவில்லை. என்றாலும் நீங்கள் வந்து எம்மை ஊக்குவித்தீர்கள். தொழிற்சங்கத் தலைவர்கள் எமது காசை சேர்த்துக் கொண்டு போவதற்கு மட்டுமே வருகிறார்கள்.

## அலதுவ தோட்ட தலைவரின் ஆத்திரமூட்டல்

அலதுவ தோட்டத்தில் சோ.ச.க.தலையீட்டுக்கு எதிராக ஆத்திரமூட்டலை சிருஷ்டிக்க முயற்சித்த இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளரும் தோட்டக் கங்காணியுமான கருணாசிரி என்பவர் சோ.ச.க.அங்கத்தவரான சமித்தவையும் வில்லியத்தையும் தோட்ட சுப்பிரின்டனிடம் ஒப்படைத்து அவர் மூலம் பொலிசிடம் பிடித்துக் கொடுக்க முயன்றுள்ளார். யட்டதொழவத்த சோ.ச.க.அங்கத்தவர்களுடன் கலந்துரையாடிய பெண் தொழிலாளி தொழிற்சங்கத் தலைவர்களின் இந்த நடவடிக்கை பற்றி பின்வருமாறு கூறினார்:

"எம்மை தலைவர் 5ம் திகதியில் இருந்து வேலைநிறுத்தம் செய்யும்படி சொன்னார். நாம் வேலைநிறுத்தம் செய்தோம். என்றாலும் அதைத் தொடர்ந்து என்ன செய்வது என்பது பற்றி நாம் அறிந்திருக்க இல்லை. எமது தோட்டத்தில் ஒரு சிலருக்கு மட்டுமே மானியம் கிடைக்கின்றது. பெரும்பான்மையினருக்கு கிடைப்பதில்லை. தலைவர்கள் இதையிட்டு எதுவும் செய்வது கிடையாது."

இதே தோட்டத்தைச் சேர்ந்த மற்றொரு தொழிலாளி கூறியதாவது :

நீங்கள் சொல்வது உண்மை. தொழிலாளர்கள் என்ன வேலை செய்வது. நாம் இந்தத் தோட்டங்களில் வேலை செய்தாலும் எமக்கென்று கிடைப்பது எதுவும் இல்லை.

அம்பலாங்கொடை பகுதியில் உள்ள திவிதுர தோட்டம் சென்ட் லெனாட் போனற தோட்டங்களில் சோசலிச சமத்துவக் கட்சி தலையிட்டது. திவித்துர தோட்டத்தில் வெற்றிகரமான முறையில் தோட்டக் கூட்டம் நடாத்துவதில் சோ.ச.க.வெற்றி கண்டது. திவித்துபூர தோட்ட பிரச்சாரத்தின் போது சோ.ச.க.அங்கத்தவர்களைச் சந்தித்த ஒரு பெண் தொழிலாளி கூறியதாவது : சம்பளம் கூட்டினாலும் பயன் இல்லை.எமக்குக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வாங்கக் கூடிய விதத்தில் பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டும்.

சோ.ச.க.தலையீட்டைக் கண்டு குழப்பம் அடைந்த இந்த தோட்டத்தைப் பிடித்துக் கொண்டுள்ள யூ.என்.பி. சிறீலங்கா தொழிற்சங்கத் தலைவர்கள் சோ.ச.க. தோழர்களை மிரட்டி அவர்கள் தொழிலாளர்கள் இடையே தலையிடுவதை தடைசெய்ய எடுத்த முயற்சி தோல்வி கண்டது.

சாமிமலை ஸ்தம்பிரோ தோட்டத்தைச் சேர்ந்த இ.தொ.கா.இளைஞர் கமிட்டியின் அங்கத்தவரான லக்ஷ்மன் பின்வருமாறு கூறினார்: "தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூபா.105 சம்பள உயர்வு பெற்றுத் தருவதாக சகல தொழிற்சங்கத் தலைவர்களும் சொன்னார்கள்.ஆனால் தொழிற்சங்கங்கள் எம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டு கம்பனிகளுடன் ஒப்பந்தத்துக்கு போனார்கள்.இப்போது அவர்கள் ரூபா.95 சம்பளத்துக்கு வேலைக்குப் போகும் படி சொல்கின்றார்கள். ரூபா.6 தற்காலிக போணஸ் பற்றியும் சொல்லிக் கொள்கிறார்கள். இப்படிச் செய்யும் தொழிற்சங்கங்கள் எமக்கு எதற்கு . முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்தில் இந்த தடவை எல்லோரும் ஒன்று சேர்ந்து நாம் வேலைநிறுத்தம் செய்தோம். எமது குடும்பத்தில் ஐவர் இருக்கின்றோம். விலைவாசி ஆகாயத்துக்கு உயர்ந்து கொண்டுள்ளது. இதன் பின்னர் தொழிற் சங்கங்களுக்கு அங்கத்துவப் பணம் கொடுப்பது இல்லை என நாம் தீர்மானித்துள்ளோம்" என்றார்.

படிப்பகம்

www.padippakam.com

## இந்தோனேசிய பொருளாதார நெருக்கடி:

# உலக முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியின் பாகம்

சர்வதேச நாணய நிதியம் 33 பில்லியன் அமெரிக்க டாலர்களை கடனாக வழங்குவதை நிறுத்திவிடப்போவதாக அச்சுறுத்தியதை தொடர்ந்து இந்தோனேஷிய சுகார்ட்டோ அரசாங்கம் கடும் சிக்கன நடவடிக்கைகளில் இறங்க இணக்கம் தெரிவித்துள்ளது. இது இந்தோனேஷிய நாணயமான ரூபியாவையும் பங்கு சந்தை பங்குகளின் விலைகளையும் ஆதாளபாதாளத்தில் தள்ளியுள்ளது.

கடந்த ஜனவரி 15ம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் மைக்கேல் கம்டெஸ்ஸஸ் பார்த்து நிற்க ஜெனரால் சுகார்ட்டோ இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட நெருக்கப்பட்டார். இந்தோனேஷிய பொருளாதார நெருக்கடி நிலைமையில் இதைவிட வேறு மாற்றுவழி கிடையாது என அவர் குறிப்பிட்டார்.

ஒரு ஆண்டுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் வருடாந்த தலா வருமானம் 1200 அமெரிக்க டாலர்களில் இருந்து 300 டாலர்களாக வீழ்ச்சி கண்டது. பங்கு முதல் சந்தை பெறுமதி 118 பில்லியன் டாலர்களில் இருந்து 17 பில்லியன் டாலர்களுக்கு வீழ்ச்சி கண்டது. 286 இந்தோனேஷிய பொதுக் கம்பனிகளில் 22 கம்பனிகள் மட்டுமே கடன்களுக்கு நின்றுபிடிக்கத் தக்கவையாகக் கணிக்கப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ மதிப்பீடுகளின்படி 20 இலட்சம் மக்கள் ஏற்கனவே தொழில்களை இழந்து விட்டனர். இதில் 500000 இலட்சம் ஆடைத் தொழிலாளர்களும் அடங்குவர். அரசாங்கச் ஆதரவுத் தொழிற்சங்கங்கள் வேலையின்மை நாட்டின் 90மில்லியன் தொழிலாளர் படையில் 11வீதத்துக்கு மேலாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளன. இன்னும் பலர் குறை வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தோனேஷியாவின் இராணுவமும் பொலிசும் உஜார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து அதிக தூரத்தில் இல்லாத பாண்டுங், ஜாவா போன்ற இடங்களில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து கலகங்களும் வெடித்துள்ளன. கடைகளும் சுப்பர் மார்க்கட்டுகளும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. விலைவாசிகளின் உயர்வு காரணமாக பொருட்கள் பதுக்கப்பட்டுள்ளன. இதனால் விலைகள் உயர்ந்துள்ளதோடு பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் புதிய கடன் பொதியைத் தொடர்ந்து இந்த நிலைமை மேலும் மோசமடையும். எரிபொருட்கள், மின்சாரம் முதலானவற்றுக்கான உபமானியம் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த பொருளாதார நெருக்கடி 31 வருட கால இராணுவ ஆட்சியில் பெரும் வெடிப்பை ஏற்படுத்தி உள்ளது. எதிர்வரும் மார்ச் 10ம் திகதி கூட இருந்த மக்கள் ஆலோசனை சபையில் சுகார்ட்டோவின் பெயர் ஏழாவது தடவையாகவும் ஜனாதிபதி பதவிக்கு "ஸ்டாம்ப்" குத்தப்பட இருந்தது. எவ்வாறெனினும் அவர் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட உள்ளார் என்ற செய்தி மீண்டும் ரூபியாவை வீழ்ச்சி காணச் செய்தது.

பெப்பிரவரி தொடக்கத்தில் எதிர்க்கட்சி பேர்வழியான சுகார்ணோபுத்ரி மாஜி.ஜனாதிபதி சுகார்ணோவின் மகள் ஆயிரக்கணக்கான தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் "சமாதானமான. பதவிமாற்றம்" இடம்பெற வேண்டும் எனவும் ஜனாதிபதி பதவியை ஏற்கத் தாம் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். மாஜி.சுரங்க, எரிபொருள் அமைச்சர் மொஹமட் சாடியும் முஸ்லீம் தலைவர் அமீன்றெயிசும் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதியான பம்டாங் ரியான்யோவும் சுகார்ட்டோவை ஓய்வு பெறும்படி கேட்டுக் கொண்டுள்ளனர்.

சுகார்ட்டோ ஆட்சியில் தொடர்ந்து இருப்பது பற்றிய இந்தக் குழப்பங்கள் சமீபத்தில் கைச்சாத்திட்ட சர்வதேச நாணய நிதிய கடன்களுக்கான நிபந்தனைகளை அமுல் செய்வதில் அவருக்கு உள்ள பலம் சம்பந்தமாக ஆளும் வர்க்க வட்டாரங்களில் இருந்து வரும் சந்தேகங்களில் இருந்தே தலையெடுக்கின்றன. அதிகரித்த வேலையின்மையினாலும் வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சியினாலும் தூண்டிவிடப்படும் சமூக பதட்டநிலையைக் கட்டுப்படுத்துவது எப்படி என்ற பதட்டம் ஆளும் வர்க்கத்தினரிடையே இருந்து கொண்டுள்ளது.

சுகார்ட்டோ 1965 66ல் இருபதாம் நூற்றாண்டின் இரத்தம் தோய்ந்த இராணுவச் சதியில் ஆட்சியைக் கைப்பற்றினான். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நேரடி உதவியோடு சுகார்ட்டோவும் இந்தோனேஷிய இராணுவத் தளபதிகளும் ஒரு மில்லியன் தொழிலாளர்களை சுற்றிவளைத்துப் பிடித்து சுட்டுக் கொன்றனர். விவசாயிகளும் ஸ்டாலினிஸ இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களும் இதில் இடங்குவர்.

கடந்த மூன்று தசாப்தங்களாக சுகார்ட்டோவும் அவரது குடும்பமும் அவரின் இராணுவ, வர்த்தக துறைகளைச் சேர்ந்த சகாக்களும் அரச அங்கீகாரம் பெற்ற ஏகபோகங்களின் மூலம் பொருளாதாரத்தின் சில துறைகளைத் தமது பிடிக்குள் கொணர்ந்தனர்.

இப்போது சர்வதேச நாணய நிதியம் அமெரிக்க, அவுஸ்திரேலிய, ஜேர்மன், பிரான்சிய தலைவர்களின் ஆதரவுடன் வெளிநாட்டு முதலீடுகளுக்கு இருந்து வரக்கூடிய சகல தடைகளையும் தகர்த்து எறியும் படியும் பொருளாதாரத்தில் அவருக்கும் அவரின் கையாட்களுக்கும் இருந்து வரக்கூடிய சிறப்புச் சலுகைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் படியும் கோரிவருகின்றனர். சுகார்ட்டோவின் மகனான மண்டலபுத்திராவுக்கு கையுறை உற்பத்தியில் இருந்து வந்த ஏகபோகமும் மற்றும் வரிச் சலுகைகளும் நீக்கப்பட்டுள்ளன.

இந்தோனேஷிய தொழிலாளர்களும் விவசாயிகளும் சுகார்ணோவின் மகளிடம் தமது நலன்களைக் காப்பதற்கான தலைமை கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. அவளின் தகப்பனைப் போல் அவளும் வாய்வீச்சுக்கள் மூலம் நகர்ப்புற, கிராமப்புற ஏழைகளுக்கு இந்தோனேஷிய தேசியவாதமும் வெற்று பொருளாதார வாக்குறுதிகளும் கலப்படம் செய்யப்பட்ட கலவையை முன்வைக்கிறாள்.

1965 66இராணுவ சதியின் போது சுகார்ணோ சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் ஆதரிக்கப்பட்டது. இராணுவ இரத்தக் களரியை அமுல் செய்வதிலும் அதற்கு எதிரான எதிர்ப்புப் பரவுவதைத் தடை செய்வதிலும் இவர்கள் முக்கிய பாத்திரம் வகித்தனர். சுகார்ணோவின் மகள் ஆட்சிக்கு வந்தால் அவளும் வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சிக்கும் மலையென உயர்ந்து வரும் வேலையின்மைக்கும் எதிராக வெடிக்கும் எதிர்ப்புக்களையும் வேலைநிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நசுக்குவதில் இன்றைய ஆட்சியாளர்களுக்கு எதுவிதத்திலும் சோடைபோனவளாக இருக்கமாட்டாள்.

## இந்தியத் தேர்தல்:

# ஆளும் வர்க்கத்தின் மோசமான நெருக்கடியை அம்பலமாக்குகின்றது

இந்தியப் பொதுத் தேர்தலின் முதலாம் இரண்டாம் கட்டங்கள் நடைபெற்று முடிந்துள்ளதோடு முழுத் தேர்தல் முடிபுகள் மார்ச் 7ம் திகதி வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நடந்து முடிந்த முதற்கட்ட தேர்தல்களில் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் வாக்களிப்பு 50 55வரை வீழ்ச்சி கண்டுள்ளது. 1952 1996 வரை இந்தியர்வில் நடந்து முடிந்துள்ள சகல தேர்தல்களிலும் வாக்களித்தோர் எண்ணிக்கை வீதம் நூற்றுக்கு 60வீதமாக இருந்துள்ளது. நூற்றுக்கு 45வீதத்துக்கும் அதிகமானோர் வாக்களிப்பை பகிஷ்கரிப்பது அல்லது புறக்கணிப்பது என்பது முதலாளித்துவ அரசியல் கட்சிகள் சம்பந்தமாக அல்லது முதலாளித்துவ ஆட்சி அமைப்புக்கள் சம்பந்தமாக அவர்களிடையே வளர்ச்சி கண்டுவரும் எதிர்ப்பை பிரதிபலிக்கின்றது.



சோனியா காந்தி

சிறப்பாக இந்தியக் காங்கிரஸ் கட்சியின் வாக்குக்கள் 1984ன் பின்னர் வீழ்ச்சி கணடுள்ள வீதம், இந்தியாவின் முழு முதலாளித்துவ அரசியலும் சம்பந்தமான பொதுமக்களின் நம்பிக்கை சிதறுண்டு போயுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. காங்கிரஸ் கட்சிக்கு 1984 தொடக்கம் 1996 வரையிலான தேர்தல்களில் கிடைத்த வாக்குக்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டுள்ள வீதத்தைப் பாருங்கள்:



குஜ்ரால்

| | |
|---|---|
| 1984 | 48வீதம் |
| 1989 | 39.5.வீதம் |
| 1991 | 36.5.வீதம் |
| 1996 | 29வீதம் |



வாஜ்பாய்

நடந்து கொண்டுள்ள இத்தேர்தலில் சுதந்திரத்துக்குப் பின்னைய 50 வருட கால ஆட்சியில் முக்கிய ஆளும் கட்சியாக இருந்து வந்த காங்கிரஸ் கட்சியின் வாக்குக்கள் மேலும் வீழ்ச்சியடைய இடமுண்டு. இந்த வீதாசாரம் மேலும் 25 வீதமாக இறங்கும் ஒரு நிலையிலேயே காங்கிரஸ்காரர்கள் சோனியா காந்தியை அரசியல் மேடைகளுக்கு இழுப்பதில் தலைகீழாக நின்றுவந்தனர். காங்கிரஸ் என்பது 100 ஆண்டுகளுககு மேலாக பொதுமக்களின் ஜனநாயக எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் நின்று அதில் ஈடுபட்ட ஒரு இயக்கத்தின் அடிப்படையில் முதலாளித்துவ ஆதிக்கத்தைக் கொண்டிருந்து வந்த ஒரு அரசியல் அமைப்பாகும். 1917அக்டோபர் புரட்சியின் பின்னர் இந்தியாவில் உக்கிரமான முறையில் தலையெடுத்த ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தின் தலைமையாகத் தலை எடுத்ததோடு பல கோடானுகோடி மக்களின் ஆதரவை பெற்ற ஒரு அமைப்பாகவும் வளர்ச்சி கண்டது. அந்த ஆதரவை காங்கிரஸ், முஸ்லீம் லீக் முதலாளித்துவத் தலைவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடனான பேரம் பேசல்களுக்கு பயன்படுத்தினர். அதன் மூலம் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் உட்பட்ட முழு ஏகாதிபத்தியவாதிகளதும் ஏஜன்டாக இந்தியாவில் ஆட்சிப் பொறுப்பை 1947ல் ஏற்றனர்.

இந்திய ஆளும் வர்க்கம் சுதந்திரத்தின் 50ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில் 96 கோடி மக்களில் நூற்றுக்கு 36 வீதத்தினர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டுள்ளனர். பத்தரைக் கோடி சிறுவர்களில் மூன்றரைக் கோடியினர் பாடசாலை செல்வதில்லை. பெண்களில் நூற்றுக்கு 66 வீதத்தினர் எழுத்தறிவு அற்றவர்கள். ஆண்களில் எழுத்தறிவு கொண்டவர்கள் நூற்றுக்கு 34 வீதத்தினர் மட்டுமே. இத்தகைய ஒரு நிலையிலும் அரசு கல்வி, சுகாதார செலவாக நூற்றுக்கு 11 வீதத்தையே செலவிடுகின்றது.

காங்கிரஸ் ஆளும் வர்க்கம் பொதுமக்கள் மீது கொண்டிருந்த பிடி தகர்ந்து போனமை இந்திய முதலாளி வர்க்கத்துக்கு பெரும் அரசியல் நெருக்கடியை சிருஷ்டித்துள்ளது. கடைசியாக ஆட்சியில் இருந்த குஜ்ரால் கூட்டரசாங்கத்தின் தலைவிதியை தீர்மானிப்பதில் செப்டம்பரில் இடம்பெற்ற நான்கு இலட்சம் அரசாங்க ஊழியர்களின் பொது வேலைநிறுத்தம் முக்கிய இடம் பெற்றது. இந்த வேலைநிறுத்தத்தின் எதிரில் அரசாங்கம் பெரும் பின்னடைவுகளுக்கு உள்ளாகியது. இந்த தொழிலாளர் எழுச்சியின் எதிரில் அரசாங்கம் 40வீதம் சம்பள அதிகரிப்பு வழங்க நேரிட்டது. இதில் இருந்து இரண்டு கிழமைகளின் பின்னர் இந்தியாவுக்கு கடன் வழங்கி வந்த ஸ்டான்டர்ட் அன்ட் பவர் என்ற அனைத்துலக நிதி அமைப்பு இந்திய அரசாங்கத்தின் கடன்பெறும் தகுதியை இது குறைத்துவிட்டதாகக் கூறியது இது தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் எதிரில் அரசாங்கம் பின்வாங்கியதன் திட்டவட்டமான பெறுபேறு என பிரான்சிய நியூஸ் ஏஜன்சி குறிப்பிட்டிருந்தது.

இன்று நாட்டில் உள்ள நிலைமை 1991ல் இருந்த நிலைமையைக் காட்டிலும் மோசமானது என நரசிம்மராவின் நிதி அமைச்சராக விளங்கிய மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வலதுசாரி, பாசிச கட்சிகளான சிவசேனா, ஆர்.எஸ்.எஸ். கட்சிகளுடன் இணைந்து கொண்ட பாரதீய ஜனதா கட்சியின் வாக்குக்கள் 1990 1996க்கும் இடைப்பட்ட காலத்தில் நூற்றுக்கு 20வீதத்திற்கும் மேலாக அதிகரிக்கவில்லை. இந்த நிலைமையை வெற்றி கொள்ளவே பீ.ஜே.பீ. இத்தடவை தமிழ்நாட்டில் ஜெயலலிதாவையும் வங்காளத்தில் மமினா பாணர்சியையும் திரட்டிக் கொண்டுள்ளது.


இன்றைய தேர்தல் பிரச்சாரங்களின் மத்தியில் கோயம்புததூரில் பீ.ஜே.பீ. கூட்டத்தின் மீது தொடுக்கப்பட்ட குண்டு வீச்சுக்கு எவர் பொறுப்பாக இருந்தாலும் அது பீ.ஜே.பி.யைப் பலப்படுத்துவதாகும். கடந்த தேர்தலின் பின்னர் ஆட்சியில் இருந்த பிற்போக்கு ஐக்கிய கூட்டணி அரசாங்கத்தின் பங்குதாரர்களாக விளங்கிய இந்திய ஸ்டாலினிசக் கட்சிகளான சீ.பீ.எம்., சீ.பீ.ஐ. இந்திய ஆளும் வர்க்கத்துக்கு கைகொடுப்பதில் தமது உஜார் நிலையைக் காட்டிக் கொண்டுள்ளன. புதுடில்லி அரசாங்கத்தின் பிரதமர் பொறுப்பை ஏற்கத் தாம் தயாராக இருப்பதாக சீ.பி.எம்.தலைவர் ஜோதிபாசு கூறிக் கொண்டுள்ளார். இது தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான தீர்க்கமான தாக்குதல்களுக்கான தலைமைப் பொறுப்பை ஏற்க இந்தியத் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் உட்பட்ட சீர்திருத்தவாத, ஸ்டாலினிசத் தலைவர்கள் தமது தயார் நிலையைக் காட்டிக் கொண்டுள்ளமைக்கு ஒரு உதாரணமாகும்.

## தோழர் கீர்த்தி பாலசூரிய 10வது நினைவு தினம்:

# கீர்த்தி கஷ்டமான காலப்பகுதியில் ட்ரொட்ஸ்கிசத்தின் பதாகையை உயர்த்தியவர்

## – சோ.ச.க. பொதுச் செயலாளர்





கீர்த்தி பாலசூரிய 10வது நினைவு தினக் கூட்டத்திற்கு வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினர்

கீர்த்தி அரசியலில் இறங்கியதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு அத்திவாரமிட்டதும் ஒரு சொகுசான காலப்பகுதி அல்ல எனவும் தொழிலாளர் வர்க்கம் கஷ்டங்களுக்கு ஊடாகப் பயணம் செய்த அத்தகைய காலப்பகுதியில் தோழர். கீர்த்தி பாலசூரிய முன்னெடுத்த போராட்டத்தை நினைவுகூர்கையில் அவர் மீதான கௌரவமும் மதிப்பும் எம்முன் மேலும் அதிகரிக்கின்றது எனவும் சோச்லிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயல்ாளர் விஜே டயஸ் குறிப்பிட்டார். சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஸ்தாபகராகவும் அதன் பொதுச் செயலாளராகவும் விளங்கி 1987ல் மறைந்த தோழர்.கீர்த்தி பாலசூரியவின் 10வது நினைவு தினத்தை ஒட்டி கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் 1997டிசம்பர் 21ம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"சர்திருத்தவாதிகளதும் ஸ்டாலினிஸ்டுகளதும் காட்டிக் கொடுப்பின் காரணமாக அக்காலப் பகுதியில் உலகம் பூராவும் குட்டி முதலாளித்துவ அரசியல் தலைநீட்டி இருந்தது. இலங்கையில் 1964ல் லங்கா சமசமாஜக் கட்சி மாபெரும் காட்டிக் கொடுப்பில் இறங்கி முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை கட்டி அணைத்துக் கொண்டது. இத்துடன் இலங்கையினுள்ளும் தீவிரவாதக் குட்டி முதலாளித்துவ் இயக்கங்கள் தலைநீட்டத் தொடங்கின. இந்தியாவினுள் நேருவின் முதலாளித்துவ ஆட்சிக்கு முண்டு கொடுத்த இந்திய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி பிளவுண்டு இந்திய மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் காட்சி கொடுக்க முயற்சித்தது. ஆனாலும் குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கத்தின் தோற்றத்தை அதனால் தடுத்துவிட முடியவில்லை. இந்திய குட்டி முதலாளித்துவ இயக்கம் நக்ஷல்பாரிகள் என்ற பெயரில் தோன்றியது. இலங்கையினுள் இந்தக் குட்டி முதலாளித்துவ இயக்கம் வாயை அவிக்கும் ஒரு "அச்சாறு"வாக வெளிப்பட்டது. லத்தீன் அமெரிக்காவில் காஸ்ட்ரோ, சேகுவேரா தொடக்கம் தூரகிழக்கில் மாஓசேதுங் தொடக்கம் வட கொரியாவின் கிம் இல் சுங் வரையில் சேர்த்துக் குழப்பிய இந்த அச்சாறு இலங்கையில் சிங்கள பௌத்த இனவாதத்தை சீசனாகக் கொண்டிருந்தது"

இந்தச் சவாலுக்கு எதிரான போராட்டத்தை கீர்த்தி ஆரம்பித்த விதத்தை விளக்குகையில் விஜே டயஸ் கூறியதாவது: "இந்தப் போராட்டத்தை ஆரம்பிக்கும் போது அவருக்கு வயது 19. தோழர்.வில்பிரெட் பெரெயிரா(ஸ்பைக்) வைத் தவிர கீர்த்தியுடன் இப்போராட்டத்தில் இணைந்து கொண்டவர்கள் இளைஞர்கள். குட்டி முதலாளித்துவ தேசியவாத இனவாத இயக்கங்களுக்கு எதிர்ப்பு இருந்த போதிலும் பாட்டாளி வர்க்க அனைத்துலகப் பாதையைக் கண்டுபிடிப்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. அதற்கான வெளிச்சம், 1964 சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்புக்கு எதிராக தலையீட்ட பிரித்தானிய சோசலிச லேபர் லீக்கின் தேசியச் செயலாளர் ஜெரி ஹீலியிடம் இருந்து கிடைத்தது. அவர் சொன்னார்: 1964 லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்புக்கான வேர்கள் இருப்பது கொழும்பில் அல்ல; பாரிசில். அந்த வெளிச்சத்தில் நாம் பாரிசில் இடம்பெற்று இருப்பது என்ன என ஆராய்ந்து பார்க்க தள்ளப்பட்டோம்.



### ஐக்கிய செயலகம்

"நான்காம் அகிலத்தின் ஐக்கிய செயலகம் எனப்படுவதன் தலைமையகம் இருந்தது பாரிசில்தான். காட்டிக் கொடுப்பில் இந்தத் தலைமையகம் பங்காளி என்றால் அதற்கு எதிரான இயக்கம் என்ன? இந்த விதத்திலேயே நாம் வேரைக் கண்டறிவதில் ஈடுபடத் தள்ளப்பட்டோம். 1953ல் நான்காம் அகிலத்தில் தீர்க்கமான பிளவு ஏற்பட்டது என நாம் அறிந்தோம். யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய அமைப்புடனும் ஸ்டாலினிசத்துடனும் சமரசத்துக்கு செல்ல நான்காம் அகிலத்தினுள் பப்லோவாதம் என்றொரு திரிபுவாதம் தலைநீட்டியது. அதற்கு எதிராக நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டத்தைக் காக்க நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு என்றொரு அனைத்துலகவாத நோக்கு உள்ளது என்பதை நாம் அறிந்தோம். கீர்த்தி தலைமையில் பு.க.க.தலைமையில் முன்னணியில் நின்றோர் இந்தப் போக்கினை அனைத்துலகக் குழுவை இறுக்கமாகப் பற்றிக் கொண்டனர். "

சமீபகால வரலாற்று ஆசிரியர்கள் சிலரின் திரிப்புக்களுக்கு தனது கவனத்தை செலுத்துகையில் விஜே கூறியதாவது : வரலாற்றாசிரியர்களின் ஒரு ஒப்பாரி என்ன என்றால் லெனினும் ட்ரொட்ஸ்கியும் போல்ஷிவிக் கட்சியும் காலனித்துவ நாடுகள் சம்பந்தமாக அக்கறை காட்டியதை விட ஐரோப்பியப் புரட்சி சம்பந்தமாக அதிகம் அக்கறை காட்டினர் என்பதேயாகும். ஐசாக் டியூச்சரின் மற்றொரு ஒப்பாரி, ட்ரொட்ஸ்கி சீனாவைப் பற்றி, 1924, 1926ம் ஆண்டுகளில் பகிரங்கமாக பேசவில்லை என்கின்றது. 1927ல் ஷியாங்கைஷேக் கம்யூனிஸ்டுகளுக்கு துரோகம் இழைத்து ட்ரொட்ஸ்கி ஷியாங்கைசேக்கின் குவாமிங்டானுக்கு

ஆனால் நிச வரலாறோ இதற்கு முற்றிலும் வேறுபட்டது எனக் குறிப்பிட்ட விஜே டயஸ் 1926ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழுவுக்கு உத்தியோகபூர்வமான பிரேரணையை சமர்ப்பித்த ட்ரொட்ஸ்கி , சீன கம்யூனிஸ்ட் கட்சியை குவாமின்டாங் முதலாளித்துவ கட்சிக்குக் கீழ்ப்படுத்தும் ஸ்டாலினிச வேலைத்திட்டத்தை அஞ்சாது விமர்சனம் செய்தார். அத்தகைய வேலைத்திட்டத்தின் ஆபத்தை தெளிவுபடுத்திய அவர் கம்யூனிஸ்டுகள் எந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை முன்வைத்ததாகவும் கூறினார். 22 03 1927ல் எழுதிய நீண்ட கடிதத்தில் குவாமின்டானில் இருந்து பிரியும் அவசியத்தை ட்ரொட்ஸ்கி சுட்டிக்காட்டியதாயும் இதே நாளிலேயே ஷங்காய் நகரத் தொழிலாளர் கிளர்ச்சியில் இறங்கியதாகவும் விஜே சொன்னார்.

"ஸ்டாலினிஸ்டுகள் கம்யூனிஸ்ட் கட்சி ஷங்காய் நகரில் அதிகாரத்தை குவாமிங்டானுக்குக் கையளிக்க வேண்டும் என கட்டளையிட்டனர். ஆட்சியை தமது கைக்குள் கொணர்ந்த குவாமிங்டாங்குகள் 20 நாட்களுக்குள் தொழிலாளர் சங்காரத்தில் இறங்கினர். ஆனால் ஸ்டாலின் இந்தத் தோல்விக்கான பொறுப்பை சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தோளில் சுமத்திவிட்டு, தாம் கம்யூனிஸ்ட் அகிலத்தின் விதிமுறையில் நின்று வந்ததாகக் கூறினார். காட்டிக் கொடுக்கப்பட்டது வெற்றி கொள்ளப்பட வேண்டியிருந்த ஒரு புரட்சியாகும்."

இதன் பின்னர் நாம் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மாஓசேதுங்கின் தலைமையில் கிராமங்களுக்கு குழிபறிந்து போய், குட்டி முதலாளித்துவத்தை அணிதிரட்டிக் கொண்ட முதலாளித்துவக் கட்சியாக பரிணாமம் கண்டதைக் காண்கின்றோம். இந்தியா தொடர்பாக ஸ்டாலினிச வேலைத்திட்டங்கள் இதைவிட ஒன்றும் குறைந்தது அல்ல எனக் குறிப்பிட்ட விஜே டயஸ் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மகாத்மா காந்தி, நேருவின் முதலாளித்துவ காங்கிரஸ் கட்சியுடன் முன்னணி அமைக்கத் தள்ளப்பட்டது எனவும் கூறினார்.

இந்த விதத்தில் உலகளாவிய ரீதியில் ஸ்டாலினிசம் காட்டிக் கொடுப்புக்களின் பெறுபேறாகவே பாசிசமும் இரண்டாம் உலக யுத்தமும் தோன்றின. ஏகாதிபத்தியவாதிகள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் உதவியோடு உலக அமைப்பை கட்டி எழுப்பினர். அதன் ஒரு பாகமாக இலங்கையிலும் இந்தியாவிலும் பர்மாவிலும் 'சுதந்திர' அரசுகள் அமைக்கப்பட்டன. பப்லோவாதிகள் இந்த அமைப்புக்கு அடிபணிந்து காட்டிக் கொடுப்பின் வழியில் இழுபட்டு போயினர். இலங்கையில் 1964 காட்டிக் கொடுப்பு அதன் பெறுபேறேயாகும். தோழர்.கீர்த்தி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் கிளர்ந்து எழுந்தது இப்பின்னணியிலேயே எனவும் விஜே டயஸ் மேலும் குறிப்பிட்டார்.

கம்கறு மாவத்த ஆசிரியரும் சோசலிச சமத்துவக் கட்சி மத்திய குழு உறுப்பினருமான கே.ரத்னாயக்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சோ.ச.க.மத்திய குழு உறுப்பினர்களான எம்.அரவிந்தன், விலானி பீரிஸ், பீ.மதவத்த ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.



கீர்த்தியின் அரசியல் போராட்ட வரலாற்றைக் காட்டும் கண்காட்சி

www.padippakam.com

# நாடு பூராவும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஆயுதப் படைகளின் வேட்டை

திருகோணமலை தம்பலகாமத்தைச் சேர்ந்த எட்டு இளைஞர்களும் ஏழை விவசாயிகளும் பாரதிபுரம், பொக்குறுணி பொலிஸ் நிலைய பொலிசாரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் ஜனவரி 31ல் இடம்பெற்றுள்ளது.

காலையில் இவர்களை வீடுகளில் இருந்து பிடித்துச் சென்ற பொலிசார் சித்திரவதை செய்து பாரதிபுரம் பொலிஸ் காவல் நிலையத்தில் வைத்து சுட்டுத் தள்ளியுள்ளனர்.

பொன்னம்பலம் கனகசபை(48வயது) ஆறுமுகம் சேகர்(32) சுப்பிரமணியம் திவாகரன்(20) குணரத்தினம் சிவராஜன்(24)

அமிர்தலசிங்கம் கஜேந்திரன்( 17) சுரேந்திரன்(13) முருகேசு ஜனகன்(18) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள். இவர்களில் கடைசி மூவரும் தம்பலகாமம் தமிழ் பாடசாலை மாணவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

பொதுஜன முன்னணியின் தொடர்புச் சாதனங்கள் இவர்கள் பொலிஸ் நிலையத் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் இவர்களின் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாகவும் பொய்ப் பிரச்சாரங்களில் ஈடுபட்டன. ஆரம்பத்தில் கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களைக் கூட கையளிக்க மறுத்த பொலிசார் இவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் எனக் கூறும் பத்திரங்களில் கையொப்பம் இட்டால் அவற்றைத் தருவதாகவும் மிரட்டி இருந்தனர். இந்தக் கொலைகளுக்கு முதல்நாள் இரவில் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல் இடம் பெற்றது என்ற ஒரு நாடகத்தை அரங்கேற்றும் வகையில் பொலிசார் இரவு பூராவும் துப்பாக்கி சூடுகளில் இடுபட்டு இருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இந்த மக்கள் படுகொலைகளுக்கு எதிராக கிராமவாசிகளிடையே பலத்த எதிர்ப்பும் கிளர்ச்சியும் வெடித்ததோடு பெப்பிரவரி 2ம் திகதி சுமார் 3500 மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டனர். கொலையில் ஈடுபட்ட பொலிசாரை வெளியேற்றும்படியும் அவர்களுக்கு எதிரான விசாரணைகளை நடாத்தும்படியும் அவர்கள் நெருக்கினர். பாடசாலை மாணவர்கள் பொலிஸ், இராணுவ அதிகாரிகளது தலையீட்டுக்கும் தமிழ் முதலாளித்துவ அரசியல்வாதிகளின் சமரசங்களுக்கும் மத்தியிலும் பாடசாலை பகிஷ்கரிப்புக்களை தொடர்ந்தனர்.

பொலிசாருக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி வளர்ச்சி கண்டுவந்த ஒரு நிலையில் திருகோணமலை பொலிஸ் நிலைய அதிபர் "இந்தக் கொலைகளுக்கும் பயங்கரவாதத் தாக்குல்கள், கொலைகளுக்கும் இடையே எந்தவிதமான தொடர்பும் கிடையாது" எனக் கூறத்தள்ளப்பட்டார். இந்த படுகொலைகளில் சம்பந்தப்பட்டதாக 21 ஊர்க்காவல் படையினரும் 19 பொலிசாரும் ஒரு இனவாதக் குண்டனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.மஜிஸ்திரேட் நடாத்திய 6 அடையாள அணிவகுப்புக்களில் இவர்கள் கொலையில் சம்பந்தப்பட்டவர்களாக இனங்காணப்பட்டனர். இந்தக் கொலைகளுக்கான பொறுப்பை இனவாத பொலிசாரின் தலையில் மட்டும் கட்டி அடிக்கச் செய்யப்படும் முயற்சிகளுக்கு மாறாக இனவாத யுத்தத்தை நடாத்தும் பொதுஜன முன்னணி அரசாங்கமே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

## லொட்சுகளுக்கு சீல்

கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்த மேட்டில் உள்ள மூன்று லொட்சுகளில் நள்ளிரவில் பாய்ந்து விழுந்த ஆயுதம் தாங்கிய பொலிசார் அவற்றில் தங்கி இருந்த 600க்கும் அதிகமான மக்களை நடுத்தெருவில் தள்ளிவிட்டு அவற்றுக்கு சீல் வைத்துள்ளனர். இச்சம்பவம் பெப்பிரவரி 6ம் திகதி இடம்பெற்றுள்ளது. கொம்பனித்தெரு இராணுவ முகாமுக்கு எதிரில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு பொறுப்பானவர் இந்த லொட்சுகளில் ஒன்றில் தங்கி இருந்தார் என்பதே பொலிசார் இவற்றை இழுத்து மூடியதற்கான நியாயமாகக் கூறிக்கொள்கின்றனர்.

"கொழும்பில் தங்க முடியாது யாழ்ப்பாணத்துக்கு மட்டக்களப்புக்கு போ" என்பதே சீல் வைப்பில் ஈடுபட்ட பொலிசாரின் முக்கிய வெறிப் பிரச்சாரமாக இருந்துள்ளது.வெளிநாடுகளுக்கு பயணமாக வந்தவர்கள், சிகிச்சைக்காக கொழும்பு வந்தவர்கள், யாழ்ப்பாண விமானச் சீட்டுக்காகக் காத்துக் கிடப்போர் என்ற பல தரப்பினரும் இங்கு தங்கி இருந்துள்ளனர்.

பொலிசாரின் அக்கிரமங்களால் உத்சாகமடைந்த அப்பகுதிக் குண்டர்கள் மக்களின் உடமைகளைக் கொள்ளையடிப்பதிலும் தமது உத்சாகத்தைக் காட்டிக் கொண்டதாக தெரிகின்றது. பெப்பிரவரி 7ம் திகதி இம்மக்களில் ஒரு பகுதியினர் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு லொறிகளில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.


பொக்குறணி பொலிசாரால் கொலைசெய்யப்பட்ட இளைஞர் சிலரின் சடலங்கள்


நள்ளிரவில் கொட்டாஞ்சேனை விவேகானந்த மேட்டு லொட்சுகளில் இருந்து பொலிசாரால் வீதியில் தள்ளப்பட்ட தமிழ் மக்கள்

இந்த "ஏற்பாடுகளை" பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் முக்கிய ஆதரவாளரும் அவசரகாலச் சட்ட நீடிப்புக்களுக்கு சளைக்காது கைகளை உயர்த்தும் தமிழ் முதலாளித்துவக் கட்சியான ஈ.பீ.டி.பி. தலைவர்களே செய்துள்ளனர்.தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் அனாதரவாகி நின்ற மக்களை பொலிசில் சென்று முறைப்படுமாறு 'ஆலோசனை' கூறியதாக தெரிகின்றது. 'சுதந்திர தின பொன்விழா' கொண்டாட்டங்களின் ஒரு பாகமாக பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற கண்காட்சியை காணச் சென்ற நான்கு தமிழ் இளைஞர்கள் பௌத்தலோக மாவத்தவில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டு ஒரு வாரகாலம் கறுவாக்காடு பொலிசில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் இருவர் கொழும்பு இந்துக்கல்லூரி மாணவர்கள். ஒருவர் மொரட்டுவை பல்கலைக் கழக பொறியியல் பீட மூன்றாம் வருட மாணவர் எனத் தெரிகின்றது.


## புதிய தொழிலாளர் பாதை வெளியீடு



### சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு, தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது, முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும் கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00

### சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் இராஜ்குமார் கைதியாக இருந்து விடுதலை செய்விக்கப்பட்ட போராட்டத்தின் படிப்பினை



சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர் செல்லையா இராஜ்குமார் 1996ஜூன் 14ம் திகதி பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு, 1997 ஜூலை 20ம் திகதி வரை -ஒரு ஆண்டுக்கும் அதிக காலம் சிறைவைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளானார். சோசலிச சமத்துவக் கட்சியும் அது இணைந்து கொண்டுள்ள நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் முன்னெடுத்த போராட்டத்தின் அனைத்துலக பிரச்சாரத்தின் பெறுபேறாகவே அவர் விடுதலை செய்யப்பட்டார். அந்த அனைத்துலகப் போராட்டத்தினை பிரதிபலிக்கும் ஒரு தொகை கடிதங்களதும் பேச்சுக்களதும் தொகுதி இது.

விலை ரூபா. 10.00

**தொழிலாளர் பாதை வெளியீட்டாளர்கள்**

90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10.


படிப்பகம்

# சுதந்திரக் கொண்டாட்டம்?...

5ம் பக்கத் தொடர்ச்சி

மேலும் விபரிக்கையில் கூறியதாவது : "ஆதலால் காலனித்துவ நாடுகளின் மக்ளை விடுதலை செய்விப்பது பற்றிய எதிர்பார்ப்புக்கள் முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்தில் தீர்க்கமான முறையில் முழு உலகினதும் தொழிலாளர்களின் விடுதலையுடன் பிணைந்துள்ளது. காலனிகள் அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் கலாச்சார ரீதியிலும் விடுதலை காண்பது முன்நேறிய நாடுகளின் தொழிலாளர்கள் முதலாளித்துவ ஆட்சி முறைக்கு முற்றுப் புள்ளி வைத்து, பின்தங்கிய நாடுகளின் மக்களுடன் ஒன்றிணைந்து ஏகபோக இலாபத்துக்கான அல்லாது சமூக அவசியங்களைப் பூர்த்தி செய்யும் முகமாக உலகப் பொருளாதாரத்தை புதிய மட்டத்தில் மறுசீரமைப்புச் செய்யும் போது மட்டுமேயாகும். காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளில் தமது பின்னேற்றத்தின் நானாவித மட்டங்களில் தோன்றி முன்செல்லும் உலக சோச்லிச பொதுநலவாய அரசுகளின் பாகமாக இடம்பிடித்துக் கொள்ள இப்பாதையினுள் மட்டுமே முடியும்."(காலனித்துவ உலகமும் இரண்டாம் ஏகாதிபத்திய யுத்தமும்- ட்ரொட்ஸ்கி. நான்காம் அகிலத்தின் பத்திரங்கள் பக்கம்-395)

இலங்கையின் முதலாளி வர்க்கம் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களின் எடுபிடிகளாகியதோடு பிரித்தானிய காலனித்துவத்துக்கு எதிரான சுதந்திரத்துக்கான போராட்டத்தின் தலைமையை போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியின் வழிநடாத்தலில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களே எடுத்தனர். தேசியவாத வேலைத்திட்டம் தன்னும் கிடையாது என்பதை அம்பலமாக்கிக் கொண்டு மேற்சொன்ன நிரந்தரப் புரட்சியின் அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் காலூன்றி நின்ற போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி ஏகாதிபத்தியத்தில் இருந்து விடுதலை பெறும் போராட்டத்தின் ஒரு பாகமாக இந்தியாவிலும் இலங்கையிலும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை ஒன்றிணைத்து வழிநடாத்தவும் போராடியது.

1947ல் இந்தியாவுக்கும் 1948ல் இலங்கைக்கும் சுதந்திரம் வழங்கும் பேரில் இடம்பெற்றது, ஏகாதிபத்திய நிர்வாக விதிமுறைகளில் மாற்றம் செய்ததேயன்றி, அது நிஜ சுதந்திரம் அல்ல. போலி சுதந்திரமே எனவும் போல்ஷிவிக் - லெனினிஸ்ட் கட்சி எடுத்த நிலைப்பாடு உடனடியாகவும் கழிந்து சென்ற 50 ஆண்டுகளின் உள்ளும் புகழ்பெற்ற முறையில் நிரூபிக்கப்பட்டு உள்ளது. ஏகாதிபத்தியம் காலனி ஆக்கிய நாடுகளில் எந்தவிதமான சுதந்திரத்துக்கும் ஜனநாயக உறவுகளை ஸ்தாபிதம் செய்வதற்கும் இடமளிக்காததோடு மட்டுமன்றி, "தேசிய "முதலாளி வர்க்கங்கள் ஏகாதிபத்தியவாதிகளின் விதிமுறைகளில் சுயவிருப்பின் அடிப்படையிலேயே சேர்ந்து கொண்டன.அதன் மூலம் ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகள் அடியோடு மீறப்பட்டன. இந்தியத் துணைக்கண்டத்தில் தேசிய இனங்கள், ஜனக் குழுக்கள் இணைக்கப்படாமல் இந்தியா, பாகிஸ்தான் போன்று வெட்டித் துண்டாடப்பட்டன. அது மட்டுமன்றி, நாட்டினுள் தேசிய இனங்களுக்கு இடையே மோதுதல்களுக்கு வழிவகுக்கும் ஒற்றையாட்சி அரசுகள் ஸ்தாபிதம் செய்யப்பட்டது. இவை தேசிய அரசுகள் அல்ல. ஏகாதிபத்தியவாதிகளால் பிரசவிக்கப்பட்ட "வம்பு அரசுகள்" ஆகும்.

சிங்களத் தமிழ் தொழிலாளர் வர்க்க ஐக்கியத்தையிட்டு கொண்டிருந்த பீதியினால் ஐக்கியத்தை எதிர்த்த இலங்கை முதலாளிகள் அரசியல் அதிகாரத்தை தமது கைக்கு மாற்றிக் கொண்டது தான் தாமதம் எடுத்த முதல் அரசியல் நடவடிக்கை தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்ததேயாகும். அதன் மூலம் முதலாளித்துவ ஆட்சியின் நச்சுத்தன மான வர்க்கத் தன்மை அம்பலமாகியதோடு மட்டுமன்றி; முதலாளித்துவ அரசுக்கு படுபிற்போக்கு நச்சுவலை பொருத்திய தாகவும் அமைந்தது. சிங்கள தமிழ் தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்துக்கு போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி தொடுத்திருந்த போராட்டம் பக்கம் இருந்து வந்த ஈர்ப்பு சம்பந்தமாக நிலவிய மரண பயத்தினாலேயே முதலாளிகள் தொழிலாளர் வர்க்கத்தைப் பாய்ந்து விழுந்து தாக்குவதில் இறங்கினர். இந்தத் தாக்குதலின் படுபிற்போக்கு தன்மையை அன்று குடியுரிமை மசோதாவை எதிர்த்து நிகழ்த்திய உரையில் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியின் தலைவரான கொல்வின் ஆர்.டி.சில்வா பின்வருமாறு தெளிவுபடுத்தினார்:

"இந்த மசோதாவுக்கு அடிப்படையாக ஏதேனும் ஒரு அரசியல் சிந்தனை இருப்பின் அதைப்பற்றிக் கூற இருப்பது இதுதான்: இந்த மசோதா ஏதேனும் ஒரு சிந்தனைக்கு ஊடாக முன்நோக்கிச் செல்லுமாயின் இந்த அரசாங்கம் அறியாமையினால் நடைமுறைக்கிடும் முக்கிய கோட்பாட்டு, அல்லது அரசியல் அல்லது சமூக விஞ்ஞான அடிப்படைக் கொள்கையானது அரசு தேசிய இனத்துக்கும் தேசிய இனம் இனத்துக்கும் சமமாக வேண்டும் என்பது தெளிவு. குடியுரிமைக்கான அடிப்படைக் கொள்கையாக சந்ததிகள் உருவானதில் இருந்து பெருக்கெடுத்து வரக் கூடிய வேறு கருத்தோ அல்லது வேறு சிந்தனையோ இருக்க முடியாது. இது காலவதியானதும் வெடித்துச் சிதறிப் போனதுமான சிந்தனையுமாகும். பிற்போக்கிற்குச் சேவை செய்யும் பொருட்டு இந்தக் காலவதியான கோட்பாட்டுக்கு மீண்டும் உயிரூட்டப் பட்டிருப்பது, சரியாக முதலாளித்துவ அமைப்பு சரிந்து கொட்டும் இன்றைய காலப்பகுதியிலாகும். தேசிய இனத்தை இனத்துடன் ஒப்பிடவும் அரசினுள் ஆதிக்கம் செலுத்தும் காரணியாக இனத்தை மாற்றவும் முயற்சிக்கப்பட்டது. திட்டவட்டமாக பாசிசத்தின் கீழேயேயாகும்... இலங்கையின் பிரஜைகளின் அந்தஸ்து ஆதலால் இன அந்தஸ்தில் இடம்பெறும் ஆபத்துத் தோன்றுகின்றது. அது எதிர்த்துப் போராடப்பட வேண்டிய ஒரு கொள்கையாகும்."

சிங்கள முதலாளிகளும் தமிழ் முதலாளிகளும் தோட்டந் தொழிலாளர்களின் குடியுரிமையைத் தாக்குவதில் இணைந்து கொண்டனர். ஆனால் அதைத் தொடர்ந்து வந்த காலத்தில் சிங்கள முதலாளி வர்க்கம் சிங்கள தேசிய இனத்தவர்கள் நாட்டின் பெரும்பான்மையினர் ஆகியதை சுரண்டிக் கொண்டு, முதலாளி வர்க்க ஆட்சியின் நெருக்கடி உக்கிரம் அடையும் அளவுக்கு தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராக இனவாதத் தாக்குதல்களை தூண்டிவிட்டு, இனவாத மக்கட் படுகொலை யுத்தத்தினை நோக்கிச் சென்றது. 1956ல் சிங்களம் மட்டும் சட்டமும் 1965ல் சிரிமா சாஸ்திரி உடன்படிக்கையும் 1972ல் இயற்றப்பட்ட மதவாத, இனவாத அரசியலமைப்பு சட்டமும் 1978ன் அரை சர்வாதிகார அரசியலமைப்பும் 1983ன் கறுப்பு ஜூலை மக்கட் படுகொலைகளும் இந்த முதலாளித்துவத் தாக்குதல்களின் திருப்புமுனையாகும். இந்த முதலாளித்துவ அரசு தேசிய இனங்களையும் மதங்களையும் சேர்ந்த சிறுபான்மையின்ரை ஒடுக்கித் தள்ளும் மக்கள் படுகொலை அரசாகப் பரிணாமம் கண்டுள்ளது. தமிழ் முதலாளி வர்க்கம் தமிழ் தேசிய இனத்தை ஒடுக்குமுறைக்குள் தள்ளுவதை தமது முதலாளித்துவ சலுகைகளுக்கான பேரம் பேசல்களுக்கான ஒரு இயக்கமாக்கிக் கொண்டது. இதன் மூலம் பிரிவினை வாதத்தினை தூண்டும் தமிழ் தனிச்சிறப்புரிமைவாதமாக மாற்றம் கண்டது. அது அதன் மறுபக்கமாகும்.

## சந்தர்ப்பவாதத்தின் முண்டுகோல்

முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் கீழ் அரசின் இனவாத ஈர்ப்பினை தீர்க்கதரிசனத்துடன் கண்டறிந்து, அதற்கு எதிரான போராட்டத்தில் போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி தலைவர்கள் ஈடுபட்டனர். பிற்காலத்தில் அவர்கள் அப்போராட்டத்தைக் கைநழுவவிட்டனர். அதன் மூலம் ட்ரொட்ஸ்கிஸ்டுகளாக அவர்கள் முன்வைத்த தீர்க்கதரிசனத்தின் செல்லுபடியானதன்மை ஒழிந்து போய்விடாது. இடம்பெற்றது என்ன? இவர்கள் விளக்க ஆரம்பித்த யுத்தத்தின் பின்னைய அமைப்பினுள் கட்டவிழ்த்து விடப்பட்ட வர்க்க அழுத்தங்களுக்கு பணிந்து போகத் தொடங்கிய இந்தத் தலைமைகள் அதனுள் தலைமூழ்கிப் போகத் தொடங்கினர். அவர்கள் தாமே போலி சுதந்திரம் எனப் பெயர் சூட்டிய நிஜ நிலைமைக்கும் வம்பு அரசுக்கும் அடிபணிந்து போனார்கள்.

இந்த அடிபணிவு உலகளாவிய ரீதியிலான தோற்றப்பாட்டின் ஒரு பாகமாகும். ஸ்டாலினிச இரண்டு கட்டம் புரட்சி கோட்பாட்டுக்கும் சகல வகையறாக் களைச் சேர்ந்த சந்தர்ப்பவாதங்களுக்கும் எதிராக போராடிய ட்ரொட்ஸ்கிச இயக்கத்தினுள் நான்காம் அகிலத்தினுள் இந்த திரிபுவாதம் பப்லோவாதமாகத் தலைநீட்டியது. ஸ்டாலினிச அதிகாரத்துவத் தினதும் ஏகாதிபத்தியத்தினதும் வெளித்தோற்றத்தில் காணப்பட்ட "வெற்றி"களுக்கும் "பலத்துக்கும்" அடிபணிந்து போன இந்த திரிபுவாதம் கிழக்கு ஐரோப்பிய அரசுகளை சோசலிச அரசுகளாக பண்பாக்கம் செய்தது. காலனித்துவமயமாக்கத்தினால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட அரசுகளும் அவற்றின் முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களும் முற்போக்காளர்களாக காட்டப்பட்டு, ஸ்டாலினிச, தேசிய முதலாளித்துவங்களுக்கு பந்தம் பிடிக்கும் வேலைத்திட்டத்தில் இந்தத் திரிபுவாதம் இறங்கியது. நான்காம் அகிலத்தின் ட்ரொட்ஸ்கிஸ்டுகளால் 1953ல் நிராகரிக்கப்பட்டது இந்த பப்லோவாத திரிபுவாதமேயாகும்..

இந்தியாவிலும் இலங்கையிலும் அவ்வாறே காலனித்துவமயமாக்கத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட மற்றும் அரசுகளினதும் பிற்போக்குத் தன்மையை மூடி மறைத்துக் கொண்டு, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக அவற்றைக் கட்டிக்காக்க இந்தத் திரிபுவாதிகள் பயணம் செய்தனர். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய அமைப்பை பாதுகாக்கும் வேலைத்திட்டம் மத்திய தர வர்க்கத் தட்டினரின் ஊடாக தலையெடுத்தது எப்படி என்பதைப் பற்றி பப்லோ வாதத்துக்கு எதிரான போராட்டத்தின் மூலம் ட்ரொட்ஸ்கிசத்தைக் காப்பாற்றிய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் வெளியிடப்பட்டகீழ்க்கண்ட விளக்கம் சகல நனவுபடைத்தவர்களதும் கண்களைத் திறப்பதாகும்.

"இன்றைய ஏகாதிபத்திய கட்டத்தினுள் அதன் புறநிலை அவசியங்களுக்கு இணங்கிய நடவடிக்கையும் பார்வையும் தொழிலாளர் வர்க்க போலித் தலைவர்களிடம் இருந்து கொண்டுள்ளது. சகல வகையறாக்களைச் சேர்ந்த சந்தர்ப்பவாதிகளும் தொங்கிக் கொண்டிருப்பது முன்னேறிய சில முதலாளித்துவ நாடுகளின் தொழிலாளர் சிறப்பு அதிகாரத்துவத்தின் மீது மட்டும் அல்ல. முதலாளித்துவம் அல்லாது உலகுடன் தமது விசேச உறவுகளைக் கொண்டுள்ள நவீன அரச ஏகபோக முதலாளித்தவத்தின் கீழ் இருந்து வரும் உலக ஜனத்தொகையின் புதிய தட்டினர் மீது சந்தர்ப்பவாதிகள் இன்று இருக்கிறார்கள்.கைத்தொழில், நிதி மூலதனத்தின் பாரிய இணைப்பும் பொருளாதாரத்தினதும் அரசினதும் இராணுவமயமாக்கமும் அதிகாரத்துவ மயமாக்கமும் பொருளாதாரத்தின் மீது அரசின் தலையீடு தொடர்பாக வளர்ச்சி கண்டுவரும் சார்பினின்றும் அதன் பெறுபேறாக மத்திய வங்கிகளதும் ஏகபோகங்களதும் அரசினதும் இராணுவத்தினதும் பாதுகாப்புப் படைகளதும் சமூக சேவைகளதும் பொதுஜன அபிப்பிராயத்தினை வழிநடாத்தும் தொடர்புச் சாதனங்களதும் நிறைவேற்று அதிகாரிகள், நிர்வாகிகள், அதிகாரத்துவங்களைக் கொண்ட புதிய மத்திய வர்க்கத்தை நிர்மாணிப்பதன் மூலமும் முன்னேறிய நாடுகளில் பயணம் செய்துள்ளது. மூலதனத்தின் அனைத்துலக அவசியங்கள் மத்தியதர வர்க்கத்தின் மூலம் மனம்போன போக்கில் நிர்வகிக்கப்படுகின்றது. பின்தங்கிய நாடுகளுள் அவர்கள் தமது சம சகபாடிகளை தேடிக் கொள்வது ஏகாதிபத்தியவாதிகள்ால் ஆட்சி அதிகாரம் கையளிக்கப்பட்ட தேசியவாத குட்டி முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் உள்ளாகும்.ஐக்கிய நாடுகள் சபைக்கும் அதன் ஏஜன்சிகளுக்கும் இந்த அமைப்பின் அரசியல், பொருளாதார காப்பீடின் முழுமையை கருத்தில் கொண்டு அதிகாரத்தை தயார் செய்வது ஒப்படைக்கப்பட்டுள்ளது. (லேபர் றிவியூ 1961 பக்கம் 90 91)

இலங்கை முதலாளி வர்க்கம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடம் இருந்து தப்பிப் பிழைக்க கடந்த 50 ஆண்டுகளும் எத்தகைய குட்டிக் கரணங்களில் ஈடுபட்டது ? பீ.எல்.பீ.ஐ.கட்சியின் தலைவர்கள் அந்தக் குட்டிக் கரணங்களுக்குள் அகப்பட்டு பின்வாங்கிக் கொண்டனர். அவர்கள் முதல் செய்தது, சுதந்திரம் சம்பந்தமாக இறைமைவாதி நிலைப்பாடு வகித்ததன் மூலம் இலங்கை முதலாளிகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அடிபணியத் தள்ளப்பட்ட என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்தன தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சிக்குள் 1950ல் நுழைந்து கொண்டதே. இதன்மூலம் ஏகாதிபத்திய அமைப்பின் ஒரு பாகமாக போலி சுதந்திரம் வழங்கியது சம்பந்தமாக இருந்து வந்த அடிப்படையிலான கருத்துவேறுபாடுகளை ஆழமாக்கி, தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை உறுதி செய்ய இருந்து வந்த வழி இதன் மூலம் இழுத்து மூடப்பட்டது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க யூ.என்.பி.யில் இருந்து வெளியேறி சி.ல.சு.க.வை அமைத்ததும் 1956ல் ஆட்சியைக் கைப்பற்றியதும் இலங்கையின் சுதந்திரத்தை பூர்த்தி செய்ததாகவும் கலாச்சார புரட்சி எனவும் பொதுமக்களின் வெற்றி எனவும் அன்று முதலாளிகளாலும் மத்தியதர வர்க்கத்தினாலும் கூச்சலிடப்பட்டது. இன்றும் கூட அதற்குச் சாமரம் வீசுகின்றார்கள். அதில் ஆரம்பித்த இயக்கம் பண்டாரநாயக்க சோசலிசம் ஊடாக சென்று சிரிமா பண்டாரநாயக்காவின் கீழ் உச்சக் கட்டத்தை அடைந்ததாகவும் இந்த வாயடிப்புக்காரர்கள் கூச்சலிடுகின்றார்கள். பண்டாரநாயக்க கட்டுநாயக்க விமானத் தளத்தையும் திருகோணமலையையும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடம் இருந்து சுவீகரித்துக் கொண்டமையையும் தேசியமய மாக்கியமையையும் அதற்குச் சாட்சிகளாக இந்தக் கதையடிப்பாளர்கள் முன்வைக் கின்றார்கள்.

இவை அனைத்தும் மக்களை ஏமாற்ற சோடிக்கப்பட்டவை.முதலாளி வர்க்கம் அந்த மோசடிகளை கொண்டிருக்க முடிந்ததற்குக் காரணம், அமெரிகக ஏகாதிபத்தியத்தின் பலத்தின் அடிப்படையில் திணிக்கப்பட்ட உலக அமைப்புக்கும் சிறப்பாக முதலாளித்துவ அரசுக்கும் படிப்படியாக அதற்கு அடிபணிந்து குழிபறிந்து போன போ.லெ. கட்சித் தலைமையினதும் லங்கா சமசமாஜக் கட்சியினதும் என்றும் முதலாளித்துவ எதிர்ப்புரட்சி பங்காளிகளாக விளங்கிய ஸ்டாலினிச இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினதும் துணையுடனேயேயாகும்.

1951ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியை அமைப்பதன் மூலம் சமசமாஜ கட்சியினுள் ஈர்க்கப்பட்டிருந்த பலம்வாய்ந்த தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்தும் தவறான வழியில் திசைதிருப்பவும் முதலாளி வர்க்கத்தினுள் பிசாசு அனுப்பி வைத்ததாகும். அது முதலாளி வர்க்கம் நன்கு திட்டமிட்டுச் செய்த ஒன்றாகும். அது அப்படி இப்படியான பிசாசு அல்ல. சிங்கள இனவாத விஷம் ஏற்றப்பட்ட பிசாசு ஆகும்.

இரண்டாம் உலக யுத்தம் கழிந்த இரண்டொரு வருடங்களுள் ஆரம்பமாகி அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் சோவியத்

16ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# சுதந்திரக் கொண்டாட்டம்?...

*15ம் பக்கத் தொடர்ச்சி*

யூனியனுக்கும் இடையே சுமார் நான்கு தசாப்த காலங்கள் நிலவிய குளிர் யுத்தம் உலக அரசியலின் பின்னணியாகியது. இந்தக் குளிர் யுத்தத்தின் கோஷங்கள் பல்வேறு நாடுகளில் மக்கள் போராட்டங்களின் உச்சியில் இருந்து கொண்டு அவற்றை நசுக்குவதன் மூலம் முதலாளித்துவ அமைப்பை பாதுகாக்கப் பல்வேறு தீவிரவாதப் போக்குக்கள் தோன்றின. இந்தியாவில் நேரு, இந்திரா காந்தியைப் போல் பண்டாரநாயக்கவும் சிறிமா பண்டாரநாயக்கவும் முதுகு கொடுத்தது இந்தப் பின்னணியிலேயே.

முதலாளி வர்க்கத்தினால் முன்னணிக்குத் தள்ளப்பட்ட புதிய பிசாசு ஒரு புறத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு கதைகளை அளந்து கொண்டது. மறுபுறத்தில் முதலாளிகள் முன்னெடுக்க முடியாத கைத்தொழில் இயக்கத்தை முதலாளித்துவ அரசின் கைக்குள் போட்டுக் கொண்டு சோசலிச நடவடிக்கை என லேபல் குத்தும் மோசடிகளில் ஈடுபட்டது. அந்த விதத்தில் இந்த ஆட்சி முறையின் சாராம்சமாக விளங்கியது ஏகாதிபத்தியவாதிகளின் வரையறைக்குள் அடைபட்டுக் கிடந்து பொதுமக்களை இனவாதக் கலகங்களின் மூலம் இரத்தக் களரிகளுக்குள் தலை மூழ்கச் செய்தது. அந்நிலைமைக்குள் சுரண்டுவதோடு நசுக்கியும் வந்தது. சமசமாஜக் கட்சி இலங்கை முதலாளி வர்க்கத்தின் முற்போக்கு தன்மையாக அரவணைத்துக் கொள்வது இந்தக் கடைகெட்ட சாரத்தினை மூடி மறைத்துக் கொண்டுள்ள குளிர்யுத்த கால கட்ட ஆபத்தான தேசியவாத திரையினாலேயேயாகும். 1953ல் ஹர்த்தால் கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு அவர்களிடையே செயற்பட சக்திவாய்ந்த ஒரு கட்சியாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியை சமசமாஜக் கட்சி அறிமுகம் செய்து வைத்தது. 1956ல் 24 மணித்தியாலங்களுக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தை அரசாங்க மொழியாக்கும் பேரில் முன்னெடுத்த படுகேவலமான பிரச்சாரத்தின் மத்தியில் சமசமாஜக் கட்சி சி.ல.சு.க.வுடன் தேர்தலில் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தத்தை செய்து கொண்டது.

இறுதியில் இலங்கையின் ஆட்டம் கண்ட முதலாளித்துவ வர்க்க ஆட்சி முறையையும் அதன் அரசையும் காப்பதற்கு 1964ல் லங்கா சமசமாஜக் கட்சியின் திட்டவட்டமான முண்டு இல்லாது செய்ய முடியாது போயிற்று. லங்கா சமசமாஜக் கட்சி 1964ல் சிறிமா பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டு , முதலாளி வர்க்க ஆட்சியையும் அரசினையும் காக்கும் மாபெரும் காட்டிக் கொடுப்பில் இறங்கினர். இது சோசலிசத்தை நோக்கி இலங்கை முதலாளி வர்க்கத்தைத் தள்ளச் செய்வது பற்றிய கடைகெட்ட பொய்யின் மூலம் மூடி மறைக்கப்பட்டது. வெளிநாட்டுக் கம்பனிகள் உட்பட்ட பல கைத்தொழில் அமைப்புக்கள் சமசமாஜக் கட்சியின் முண்டுகோலைப் பெற்ற சி.ல.சு.க. அரசாங்கத்தினாலும் அது திட்டவட்டமான முறையில் பங்குகொண்டதுமான 1970 77 கூட்டரசாங்கத்தின் மூலமும் தேசியமயமாக்கப்பட்டது.முதலாளிகளுக்குப் பெரும் அளவிலான நஷ்ட ஈடு வழங்கி செய்யப்பட்ட இந்த தேசியமயங்கள், பொருளாதார அபிவிருத்திகளை செய்து கொள்ள முடியாத முதலாளிகளின் சார்பில் அரச பொருளாதாரத்தில் செய்து கொண்ட ஒரு தலையீடாக விளங்கியது. அவ்வாறே அது சுபீட்சத்தை நோக்கிச் செல்வதற்கு தேசியப்பாதை உள்ளதாக பொதுமக்களை ஏமாற்றிக் கொள்ள கையாண்ட கண்ணாம்பூச்சி ஆட்டமாக விளங்கியது.

தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் வெற்றிகொண்ட ஜனநாயக உரிமைகள் என்றாலும் சரி இலவசக் கல்வி, இலவச சுகாதார சேவை போன்ற அடிப்படை வசதிகளும் சரி உதவிமானியங்களும் . நலன்புரி சேவைகளும் சரி முதலாளிகளால் தங்கத் தாம்பாளத்தில் வைத்து வழங்கப்பட்டவை அல்ல. வெகுஜனப் போராட்டங்களின் மூலம் முதலாளிகளிடம் இருந்து பறித்துக் கொண்ட உரிமைகளாகும். வெகுஜனப் போராட்டங்கள் பிரச்சாரங்களின் எதிரில் ஒரு சில நிவாரணங்களை வழங்கி உயிரைப் பிடித்துக் கொள்ள முதலாளித்துவ பணவீக்கச் செழிப்பு காலத்தில் ஓய்வெடுத்துக் கொண்ட முதலாளித்துவ ஆட்சி இன்றையஉலக நெருக்கடியின் கீழ் அந்தச் சகல நிவாரணங்களையும் பறித்துக் கொள்வதன் மூலம் உயிரைப் பிடித்துக் கொள்ள முடியாத கட்டத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையின் முதலாளி வர்க்கம் , சந்தர்ப்பவாதிகளின் சூழ்ச்சிகளினாலும் முண்டுகோல்களினாலும் பூசி மெழுகிக் கொண்ட தேசியவாத பாதை கடந்த இரண்டு தசாப்தங்களாக அடியோடு தகர்ந்து கொட்டியுள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களாக உலக பொருளாதாரத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உற்பத்தி பூகோளமயமாகி உள்ளது. தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட புதிய அபிவிருத்திகள் பூகோள ரீதியில் உற்பத்தியை ஒழுங்கு செய்வதற்கும் உலக உழைப்புச் சந்தையின் அடிப்படையில் செயற்படுவதற்குமான புதிய அபிவிருத்திகள் பூகோள ரீதியில் உற்பத்தியை ஒழுங்குபடுத்துவதற்கும் உலக உழைப்புச் சந்தையின் அடிப்படையில் செயற்படுத்து வதற்குமான புதிய வாய்ப்புக்களை திறந்து விட்டுள்ளது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய அமைப்பு அனுபவித்துவந்த செழிப்பு 1970பதுகளில் கரைந்து போனதோடு இலாபவீதம் வீழ்ச்சிகண்டது. முதலாளி வர்க்கம் கையாண்ட முயற்சிகள் இதில் இருந்து தலைதப்ப கையாண்டவையாகும். இம்மாற்றங்களின் பின்னணி அதுவே. மூலதனம் இலாப உழைப்பையும் வளங்களையும் கொள்ளையடிக்க உலகை வலம் வந்து கொண்டுள்ளது.

## காலனித்துவத்துக்கு அழைப்பு

ஏகாதிபத்திய அமைப்பினுள் ஏற்பட்டுள்ள இந்த புதிய மாற்றங்கள் அனைத்தும் தேசியவாத வேலைத்திட்டங்களைத் தவிடுபொடியாக்கி உள்ளது. அதன் உச்சக் கட்டமாக தேசியவாத பொருளாதாரங்கள் இருந்துவந்த சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஸ்டாலினிச ஆட்சிகள் வீழ்ச்சி கண்டமை விளங்கியது. உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் தேசிய எல்லைகளுக்கும் சிறை வைத்த இந்தப் பொருளாதாரங்கள் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டன. சிதறடிக்கப்பட்டன. தேசியவாதத்தினால் போஷிக்கப்பட்ட ஸ்டாலினிச பிற்போக்கு அதிகாரத்துவக் கும்பல்கள் அனைத்துலக மூலகத்துடன் இணைந்து கொண்டு முதலாளித்துவத்தை புனருத்தாரணம் செய்வதில் ஈடுபட்டுள்ளன. சீனாவிலும் வியட்னாமிலும் கியூபாவிலும் முதலாளித்துவ தேசியவாத சர்வாதிகாரங்களின் கீழ் இடம்பெற்றது இதுதான். தேசிய சுயபூர்த்தியினுள் உச்சக் கட்டமாக சந்தர்ப்பவாதிகளால் வருணிக்கப்பட்ட இந்திய முதலாளிகளின் வேலைத்திட்டங்கள் வீழ்ச்சி கண்டுள்ளன. ஏகாதிபத்திய மூலதனத்தை நாட்டினுள் அழைக்கும் குழப்பத்தில் முதலாளி வர்க்கம் தலைமூழ்கிப் போயுள்ளது. இலங்கையில் 1977ல் ஆட்சிக்கு வந்த யூ.என்.பி..அரசாங்கம் தேசிய பொருளாதாரத் திட்டம் எனப்படுவதன் கீழ் அணிதிரண்டது. தேசியவாத வேலைத்திட்டங்களுள் தாக்கிப் பிடித்த சி.ல.சு.க.வும் அதனுடன் சோசலிசத்தை நிர்மாணிக்கும் பேரில் காதல் களியாட்டுக்களில் இறங்கிய சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் பொதுஜன முன்னணியை அமைத்துக் கொண்டு கோஷ்டி சேரும் பணியை பூர்த்தி செய்ய நேரிட்டமை ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் காலனித்துவமயமாக்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட சகல அரசுகளதும் ஆளும் வர்க்கங்களும் அனைத்துலக மூலதனத்தை தமது நாடுகளினுள் தருவிப்பதற்காக இலாப உழைப்பையும் வளங்களையும் விற்றுத் தள்ளுபவர்களாக மாறி உள்ளனர். பண்டாரநாயக்க சோசலிசத்தின் அணிதிரள்வினை அதன் இரண்டாம் தலைமுறையின் பிள்ளை குட்டிகள் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர். 1948ன் பின்னர் போலி சுதந்திரத்தினதும் அதன் பின்னரும் மோசடியான முறையில் பரப்பிய நப்பாசைகள் அனைத்தும் சிதறுண்டு போனதோடு அது சுற்றிச் சுழன்று வந்து ஆரம்பித்த இடத்திலேயே குழிபறிந்து போய்க் கிடக்கின்றது. ஏனைய பின்தங்கிய நாடுகளின் முதலாளிகளைப் போலவே இலங்கையின் முதலாளி வர்க்கமும் இலாபத்தை மூட்டைகட்டும் ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்களும் உலகச் சந்தையை பகிந்து கொள்ள நடாத்திவரும் வர்த்தக யுத்தத்தினதும் இராணுவத் திட்டங்களதும் கையாட்களாக மாறி உள்ளன. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்கள் வளங்களையும் உழைப்பையும கொள்ளையடிப்பதற்கான சுதந்திர வர்த்தக வலயமாக இலங்கையை மாற்றும் அதே சமயம், அமெரிக்க யுத்தத் திட்டங்களது ஒரு பாகமாக பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அமெரிக்கன் குரலை (Voice of America) அமைக்க இடம் அளித்ததின் மூலம் இனவாத யுத்தத்தின் ஊடாக ஏகாதிபத்தியவாதிகளின் இராணுவ ஊடுருவல்களுக்கு இடமளிப்பதன் மூலம் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. இப்போது இலங்கையினுள் மீண்டும் காலனித்துவம் வளர்ச்சி கண்டு வருகின்றது.

1948 பெப்பிரவரி 4ல் கிடைத்ததாகச் சொல்லிக் கொள்ளப்பட்ட சுதந்திரம் இருந்தது எங்கே? இருப்பது எங்கே? பண்டாரநாயக்காவினால் ஸ்தாபிதம் செய்யப்பட்டதாகச் சொல்லிக் கொள்ளப்பட்ட அரசியல் சுதந்திரமும் ஆரம்பித்ததாக கூறிக் கொள்ளப்பட்ட கலாச்சார சுதந்திரமும் இருப்பது எங்கே? முற்போக்கு பெற்றுக் கொண்டதாக சொல்லப்பட் முதலாளித்துவக் கும்பல் இருப்பது எங்கே?

சகல ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவக் கும்பல்களதும் ஆட்சியின் கீழ் இந்த அரசு கடந்த 50 ஆண்டுகளாக பொதுமக்களை சித்திரவதைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் உள்ளாக்கும் சித்தரவதை கூடமாகவே இருந்து வந்துள்ளது. அது தொடர்ந்தும் காட்டுமிராண்டி சுரண்டல் இரத்தக் களரிகளின் மூலம் காட்டுமிராண்டித்தனத்தை நிர்மாணிக்குமேயன்றி வேறெதையும் இந்த முதலாளித்துவக் கும்பல்களால் சிருஷ்டிக்க முடியாது.

ஆனால் இந்த முதலாளித்துவ அரசு பாதுகாக்கப்பட்டு வந்தது, ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தின்--- அல்ல. குறைந்தபட்சம் இலங்கையின் பொதுமக்கள் கடந்த 50 ஆண்டு காலங்களுக்குள் இரண்டு தடவைகள் புரட்சிகர முன்னோடி நிலைமையின் விளிம்புக்குச் சென்றனர். அது 1953 ஹர்த்தால் கிளர்ச்சியும் 1964 சி.ல.சு.க.அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக 21 கோரிக்கைகளைச் சூழ தொழிலாளர் வர்க்கம் கிளர்ந்து எழுந்ததுமேயாகும்.தொழிலாளர் வர்க்கம் 1950பதுகளில் சிங்கள இனவாதத்துக்கு எதிராகப் போராடும் தமது உஜார் நிலையைக் காட்டிக் கொண்டிருந்தது. 1940பதுகளில் இருந்து கட்டியெழுப்பப்பட்ட புரட்சிகர சம்பிரதாயங்கள் தொழிலாளர் வர்க்கத்தினரிடையே மட்டுமன்றி கிராமப்புற ஏழைகள், ஒடுக்கப்பட்ட தமிழ் தேசிய இனத்தினர் இடையேயும் பரந்திருந்தது. கிராமப்புற ஏழைகள், இளைஞர்கள், சிறுபான்மை தேசிய இனத்தினர் தொழிலாளர் வர்க்கம் பக்கம் இந்த ஆரம்ப காலத்தில் ஈர்க்கப்பட்டு இருந்தனர்.ஆனால் போலி சுதந்திரத்தின் கீழ் இலங்கையை அனைத்து மக்களதும் சித்திரவதை கூடமாக்கவும் முதலாளித்துவ அரசைக் காக்கவும் தரித்திரம் பிடித்த முதலாளிகளால் முடிந்தது. காரணம்? போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி தேசியவாதத்தினுள் தலைமூழ்கிப் போனதும் சமசமாஜக் கட்சியின் மாபெரும் காட்டிக்கொடுப்புமேயாகும்.

இலங்கையின் இந்த முதலாளி வர்க்கம், சந்தர்ப்பவாதிகளின் தோள்களில் ஏறி தொழிலாளர் . தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் இளைஞர்களின் இரத்தத்தில் நீச்சல் அடித்த ஒரு பிற்போக்கு அலுகோசு முதலாளி வர்க்கம்.1953 ஹர்த்தாலில் முதலாளித்துவ அரசாங்கம் தொழிலாளர்களை சுட்டுக் கொன்றது. 1958ல் முதலாவது தமிழர் விரோத மக்கள் படுகொலை இயக்கத்தை கட்டவிழ்த்தது. 1971ல் இந்த முதலாளிகள் 15000 கிராமப்புற இளைஞர்களை கொலைசெய்தது. 1983 கறுப்பு ஜூலையின் மூலம் தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் துடிக்கத் துடிக்க கொன்றது. அதில் இருந்து மக்கள் படுகொலை யுத்தம் தொடங்கியது. 1988 90ல் ஜே.வீ.பி. பாசிஸ்டுகளின் உதவியோடு சுமார் ஒரு இலட்சம் கிராமப்புற இளைஞர்களை கொன்றது. இது ஒரு சில கட்டங்கள் மட்டுமே.

## தொழிலாளர் வர்க்க முன்நோக்கு

கடந்த 50வருடகால முதலாளி வர்க்க ஆட்சி வரலாறும் தொழிலாளர் வர்க்க மூலோபாய அனுபவங்களும் தெட்டத் தெளிவாகக் காட்டுவது என்ன? சுதந்திரத்தை வெற்றி கொள்வது இந்நாட்டின் மக்கள் ஏனைய சகல பின்தங்கிய நாடுகளின் மக்களைப் போலவே எதிர்காலத்தில் ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டிய ஒரு பணியாக இருந்து கொண்டுள்ளது. சுதந்திரத்தை கொண்டாடும் கண்ணாம்பூச்சி விளையாட்டுக்களில் இருந்து விடுபட்டு இந்தப் பணியை வெற்றிகொள்ள அரசியல் சுதந்திரத்தை ஸ்தாபிதம் செய்யும் தொழிலாளர் வர்க்கம் அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒடுக்கப்படும் மக்களை ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்க ஆட்சியை தூக்கி வீசும் பொருட்டு அணிதிரட்ட வேண்டும்.


இதன் அர்த்தம் இதுதான்: ஏகாதிபத்திய பிடியில் இருந்து விடுபடுவதும், ஏகாதிபத்தியச் சார்பு கொம்பிரதோர் முதலாளித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதும் சிங்களம் தமிழ் பேசும் தொழிலாளர்களிடையே சமத்துவத்தின் ஜனநாயக உறவை ஊர்ஜிதம் செய்ய தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாய உரிமைகளை ஸ்தாபிதம் செய்வதுடன் பிணைந்து கொண்டுள்ளது. கிராமப்புற விவசாயிகள் அனுபவிக்கும் துயரங்களையும் அடக்குமுறைகளையும் ஒழித்து, அவர்களின் வாழ்க்கைத் தொழிலை உத்தரவாதம் செய்தல், அவர்களை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு பலிகொடுப்பதை நிறுத்துதல்,, மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை, ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்தல், அவசியமான சகலருக்கும் இலவசக் கல்வி, சுகாதார சேவைகளைக் காத்தல், இளைஞர்களும் யுவதிகளும் தமது வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளும் பொருளாதார, சமூக, கலாச்சார நிலைமைகளை உறுதி செய்தல், சிறுவர்களை பாதுகாத்தல், மகளிரை ஒடுக்குவதையும் நசுக்குவதையும் நிறுத்துதல் முதலான சோசலிச வேலைத் திட்டங்களை நடைமுறைக்கிடும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தின் கீழ் உத்தரவாதம் செய்ய வேண்டும்.

முதலாளித்துவ காட்டுமிராண்டித் தனத்தை திணிக்கும் பொருட்டு இடம்பெற்றுவரும் இனவாத யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது இர் உரிமைகளுடன் பிரிக்க முடியாத விதத்: பிணைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சகல பணிகளும் ஈட்டிக கொள்ளத்தக்கவை. இன்று மனித இனத்தினால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள விஞ்ஞான, கைத்தொழில் முன்னேற்றங்கள் சோசலிச சமூக அமைப்புக்கு முன்னொரு போதும் இல்லாத விதத்தில் அத்திவாரத்தினை இட்டுள்ளது. இவை அனைத்தையும் மனித இனத்தின் நலனுக்காகப் பாவிப்பது முன்பு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் நனவான முறையில் அரசியல் அதிகாரத்தை தமது கைக்குள் கொணர்வதன் மூலமே சாத்தியமாகும். முதலாளித்துவ ஆட்சி அதற்கு எதிரானது. அது காட்டுமிராண்டித் தனத்தை மக்கள் மீது திணிக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



குரூஸ் ஏவுகணைகள் தாங்கிய அமெரிக்க ஜெட் விமானங்கள்

# அமெரிக்கா ஈராக்கின் மக்கள் படுகொலைக்கு ஆயத்தமாகின்றது...

1ம் பக்கத் தொடர்ச்சி

கொள்கின்றது.

பாரசீக வளைகுடா நாடுகளும் ஐரோப்பிய நாடுகளுள் பலவும் விமானத் தாக்குதல்களுக்கு செய்யும் தயாரிப்பை வன்மையாக எதிர்த்துள்ளன. ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பாத்திரம் இன்று உலகில் இராணுவ வன்முறைக்குத் தூண்டும் முக்கிய பேர்வழியாக அதை மாற்றியுள்ளது. அமெரிக்க ஆட்சியாளர்களின் யுத்த நடவடிக்கை இந்தத் தயாரிப்புக்கள் பற்றி ஆழமான கலந்துரையாடல்கள் இடம்பெறுவதைத் தடைசெய்து, வாஷிங்டனின் யுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக வளர்ச்சி கண்டுவரும் பொதுஜன அபிப்பராயத்தை கரைக்கச் செய்யும் ஒரு முயற்சியாக அமைந்துள்ளது.

1990ல் இருந்து அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்குக்கு எதிராக விதித்த பொருளாதாரத் தடைகள் காரணமாக ஈராக் பொருளாதாரத்துக்கு பலத்த அடி கொடுக்கப்பட்டதோடு இலட்சக்கணக்கான தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் பட்டினிக்குள் தள்ளப்பட்டனர். தொற்றுநோய்களின் பரம்பலால் சமூக துயரங்கள் ஈராக்கில் தலைவிரித்து ஆடுகின்றது.

இந்த 7 ஆண்டு காலத்தினுள் ஈராக்கினுள் அத்தகைய அணுஆயுத உற்பத்தியோ அல்லது பாவனையோ இருந்து வருவதாக எந்த விதமான சாட்சியையும் முன்வைக்க ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஆய்வாளர்களால் முடியவில்லை. யுத்த நிபுணர்கள் கூறிக் கொள்வது என்ன என்றால் 10ஆடி நீளம் 15 அடி அகலம் கொண்ட ஒரு அறையினுள் இத்தகைய அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய முடியும் என்பதேயாகும். அதன் அடிப்படையில் அவர்கள் கூறுவது இந்த நிலைமையினுள் அத்தகைய உற்பத்தி நிலையம் ஈராக்கினுள் இல்லை எனக் கூறுவது எப்படி?

ஈராக்குக்கு எதிரான முக்கிய குற்றச்சாட்டு ஆபத்தான எக்ஸ் வாயு உற்பத்தி வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதாகும். ஆனால் விவசாயத் துறையில் கிருமிநாசினி உற்பத்திக்காக இத்தகைய வாயுக்கள் உலகம் பூராவும் பாவிக்கப்படுவது அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல.

பெப்பிரவரி நடுப்பகுதியில் ஐ.நா. ஆயுதங்கள் பரிசோதகரான றேமன்ட் சிலிநிஸ்காஸ் சிக்காகோ ரிபியூன் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் ஈராக்கின் வரையறுக்கப்பட்ட ஆயுத உற்பத்தி இயலளவு அழிக்கப்பட்டுவிட்டதை ஊர்ஜிதம் செய்தார். "நியூக்கிளியர். இரசாயன ஆயுதங்களை தயாரிக்கக் கூடிய ஈராக்கின் வசதிகளும் சாதனங்களும் ஏற்கனவே அழிக்கப்பட்டுவிட்டதோடு அதை ஒரு சில வருடங்களுக்கு உயிர்பெறச் செய்ய முடியாது. ஆதலால் குண்டுவீச்சு இந்த விதத்தில் ஏற்கனவே பலவீனமான ஈராக்கின் இயலளவை பலவீனமடையச் செய்யும் என எதிர்பார்க்க முடியாது." என்றுள்ளார்.

வாஷிங்டன் இருந்து வராத ஒன்றை இருப்பதாக நிரூபிக்கும் படி 22 மில்லியன் மக்களைக் கொண்ட ஈராக்கை நெருக்குவதாக உள்ளது. அந்த விதத்தில் கிளின்டன் ஆட்சியாளர்கள் இராணுவ தாக்குதல்களை நியாயப்படுத்தும் பொருட்டு புதிய காலக்கெடுக்களும். பயமுறுத்தல்களும் ஆத்திரமூட்டல்களும் விடுத்துக் கொண்டுள்ளது.

1980பதுகளில் சதாம் ஹூசேன் ஈரான் ஈராக் யுத்தத்திலும் குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகவும் இரசாயன ஆயுதங்களைப் பாவித்தார் என்பது நன்கு பிரசித்தமானது. அத்தோடு சதாம் ஹூசேன் அரசாங்கம் அமெரிக்காவினதும் பிரித்தானியாவினதும் ஜேர்மனியினதும் அரசாங்கமாக விளங்கியது என்பதும் நன்கு அம்பலமானது. அத்தோடு இந்த நாடுகளே ஈராக் இந்த ஆயுதங்களைத் தயாரிக்க வேண்டிய கருவிகளையும் சாதனங்களையும் வழங்கின. அன்று இவை தொடர்பாக சதாம் ஹூசேனுக்கு எதிராக எந்த விதமான எதிர்ப்புக்களும் இருந்தது கிடையாது. எனெனில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஹூசேனை தாம் விரும்பிய விதத்தில் கையாளலாம் என நினைத்ததால் இப்பிரச்சினை ஏற்படவில்லை.

ஆதலால் அமெரிக்காவின் இன்றைய யுத்தத்தின் நிஜ இலக்கு என்ன? அமெரிக்க காங்கிரசில் சதாம் ஹூசேனை பதவியில் இருந்து அகற்றும்படியும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஒரு கைப்பொம்மை ஆட்சியை அமைக்கும்படியும் அழைப்புக்கள் விடுக்கப்பட்டு வந்தன.குடியரசுக் கட்சியின் செனட் சபை - பெரும்பான்மைக் குழுத் தலைவரான ட்ரென்ட் லொட் குண்டுவீச்சுத் தாக்குதலின் இலக்காக சதாம் ஹூசேனை மாற்றும் படி சிபார்சு செய்தார். செனட்டர் கே பெயிலி குச்சின்சன் அனைத்து ஈராக் அரசாங்க வாகனங்களும் இந்த விமானத் தாக்குதலின் இலக்காக்கப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்தார்.

இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் ஒரு செய்தி பிரித்தானிய சன்டே டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகி இருந்தது. அது "ஒரு இராணுவ பெரும்புள்ளியின் தலைமையில் ஈராக் அரசாங்கம் ஒன்று வெளிநாட்டில் அமைக்கப்பட வேண்டும்" எனக் குறிப்பிட்டது.

சோசலிச சமத்துவக் கட்சியினரான நாம் இந்நாட்டின் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இளைஞர்கள், மாணவர்கள் அனைவரையும் இந்த காட்டுமிராண்டி ஆக்கிரமிப்பை எதிர்க்கும்படியும் தொழிலாளர் வர்க்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் காட்டுமிராண்டித் தனத்தை ஒரு எசிசரிக்கையாகக் கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகின்றது. அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் இலாப அமைப்புக்கு எதிரான சுயாதீனமான போராட்டம் மட்டுமே இந்த் இராணுவயமாக்கத்துக்கும் யுத்தத்துக்கும் முடிவு கட்டும்.

---

தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் ஜனநாயக பணிகளையும் சோசலிச பணிகளையும் அமுல் செய்வது ஒன்றாக பின்னிப்பிணைந்து தலைநீட்டி உள்ளது. ஏகாதிபத்திய சகாப்தத்தில் "சுதந்திரத்தை" வெற்றி கொள்வதற்கான குறுக்கு அல்லது தேசியவாத வழி கிடையாது. பொதுமக்களுக்கு குறுக்கு வழி பற்றி போதிப்பவர்கள் மக்களுக்கு குழிபறிப்பவர்களே.

ஏகாதிபத்தியத்தை தூக்கி வீசி, உலக சோசலிசத்தை சிருஷ்டிக்கும் முன்நோக்குடன் இணைந்த வகையில் முதலாளித்துவ அரசியல் கட்சிகளில் இருந்து முழுமனே சுதந்திரமான முறையில் இந்தப் போராட்டத்தை தொடுக்க வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தின் தொழிலாளர் வர்க்கத்தின் கூட்டு முயற்சி ஏகாதிபத்தியத்தையும் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ பிற்போக்கையும் தூக்கி வீசுவதற்கு தீர்க்கமானது என்பது மீண்டும் மீண்டும் தெளிவாகி உள்ளது. இந்த வேலைத் திட்டத்துக்கு பொதுமக்களை கமிட்டிகளை வேலைத் தலங்களிலும் குடியிருப்பு பகுதிகளிலும் அமைப்பதன் மூலம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் புரட்சிகர பிணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

இந்நிலைமையினுள் இந்தியத் துணைக் கண்டத்தின் சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக சிறீலங்கா ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்துக்குப் போராடும் வேலைத்திட்டத்தை சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் முன்வைத்து போராடி வருகின்றது. இந்நாட்டில் சிங்களம் தமிழ் பேசும் பொதுமக்கள் தமது அரசாங்கத்தை தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்க சோசலிச சமத்துவக் கட்சியை கட்டியெழுப்புவதன் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுந்திரம் எனப்படுவதன் 50 ஆண்டு நிறைவை இலங்கை முதலாளி வர்க்கம் கொண்டாடுவது, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டம் நாலா திசையிலும் குமுறிக் கொண்டுள்ள ஒரு நிலையிலாகும்.

அதற்கான புறநிலை நிலைமைகளைச் சிருஷ்டித்து, ஆளும் வர்க்கத்துக்கு குழிவெட்டுவது அவர்களின் பிற்போக்கு முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியேயாகும். சிங்கப்பூரினதும் மலேசியாவினதும் முன்மாதிரி பற்றி பெரிதாக தலைமேல் வைத்துக் கொண்டாடி வந்த யூ.என்.பி. பொதுஜன முன்னணி முதலாளித்துவ ஆட்சியாளர்களின் வாய்வீச்சுககளை தவிடுபொடியாக்கும் நெருக்கடியானது தென் கொரியா, தாய்லாந்து, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் சிங்கப்பூரை நன்றாக ஆட்டிப் படைக்கும் விதத்தில் வெடித்துள்ளது. இவை இலட்சோப லட்சம் மக்களை புரட்சிகர போரட்டங்களுக்கு தள்ளும் காரணிகளாகும். உலகின் ஏனைய நாடுகளின் மக்களைப் போலவே இலங்கை இந்தியத் துணைக்கண்ட மக்களும் இந்த நெருக்கடியில் இருந்து தலையெடுக்க வேண்டும். அதற்கு உலக சோசலிச முன்நோக்கின் அடிப்படையில் போராடுவதே வழி. அதற்கு அப்பால் அதில் இருந்து தலையெடுக்க மக்களுக்கு வழி கிடையாது. சோசலிச சமத்துவக் கட்சியை வெகுஜன இயக்கத் தலைமையாக ஸ்தாபிதம் செய்யும் தீர்க்கமான அவசியம் இதில் இருந்தே தோன்றுகின்றது.

முழு நாட்டையும் துவக்குப் பிடித்த யுத்த களமாக்கி சுதந்திரத்தைக் கொண்டாடும் கடைகெட்ட ஆளும் வர்க்கத்துக்கு வரலாற்றில் என்றும் இல்லாத சேஷ்டையாக தோன்றியுள்ளது. தொழிலாளர்களே ஒடுக்கப்படும் மக்களே, இளைஞர்களே, புத்திஜீவிகளே! உங்கள் முன் தோன்றியுள்ள நிலைமையை நன்கு புரிந்து கொள்ளும் மாபெரும் சோசலிச சமத்துவத்தின் எதிர்காலத்துக்கு வழிகாட்டும் சோசலிச சமத்துவக் கட்சியிலும் அதன் முன்நோக்கிலும் சேருங்கள். உலக சோசலிசப் புரட்சியின் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதி சோசலிச சமத்துவக் கட்சி.

www.padippakam.com

# சாஸ்திரிய மார்க்சிசத்தின் மறுமலர்ச்சியில் ஒரு புதிய மைற்கல்...

1ம் பக்கத் தொடர்ச்சி

அபிவிருத்தி செய்கின்றதும் நிஜ மார்க்சிசத்தின் தொடர்ச்சிக்கானதுமான போராட்டமுமாக அது விளங்கியது. ரூஷ்யாவில் 1917 போல்ஷிவிக்குகளின் தலைமையிலான புரட்சியின் தலைசிறந்த தலைவரான ட்ரொட்ஸ்கி 1923ல் சோவியத் யூனியனில் இடதுசாரி எதிர்க்கட்சியின் ஸ்தாபகராகவும் 1938ல் நான்காம் அகிலத்தின் ஆரம்பகர்த்தவாகவும் விளங்கினார்.

இந்தப் பாடசாலையின் முற்றிலும் அனைத்துலகத் தன்மையானது அதற்கு வருகை தந்திருந்தவர்களின் மூலமும் வெளிப்பாடாகச் செய்தது. இதற்கு 200க்கும் அதிகமான தொழிலாளர்கள், மாணவர்கள், புத்திஜீவிகள் வருகை தந்தனர். அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியின் தோழமைக் கட்சிகளின் பேராளர்கள் ஜேர்மனி, பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, இலங்கை முதலான நாடுகளில் இருந்து வருகை தந்திருந்தனர். இந்திய சோசலிச தொழிலாளர் கழகத்தின் பேராளர்கள் வந்திருந்ததும் குறிப்பிடத் தக்கது.

முன்னர் ஸ்டாலினிச ஆட்சியாளர் களினால் ஆளப்பட்டு வந்த கிழக்கு ஜேர்மனி, சோவியத் யூனியன் முதலிய நாடுகளில் இருந்து ட்ரொட்ஸ்கிஸ்டுகள் பங்கு கொண்டமை ஒரு சிறப்பு அம்சமாக விளங்கியது. ஸ்டாலினிச ஆட்சிகள் வீழ்ச்சி கண்டு 10 ஆண்டுகள் கழிவதற்குள் அதிகாரபூர்வமான மார்க்சிச வேலைத்திட்டம் தொழிலாளர், புத்திஜீவிகளின் முக்கியமான தட்டினரிடையே மீண்டும் ஒரு பலம் வாய்ந்த சக்தியாகிக் கொண்டுள்ளது.

விரிவுரைக்கு வருகை தந்தவர்களுள் மாணவர்கள், இளம் தொழிலாளர்கள், முதிய தொழிலாளர்கள் என்போரும் அடங்குவர். அவுஸ்திரேலியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் இருந்தும், பிரிஸ்பேன், நியூகாசில், வொலன்கொல், மெல்பேர்ண், அடிலயிட் போன்ற பகுதிகளில் இருந்தும் அவர்கள் பயணம் செய்து வந்திருந்தனர். அவர்கள் பல்வேறு தேசிய இனங்களையும் பிரதிநிதித்துவம் செய்பவர்களாக விளங்கினர். அவர்களில் பலர் மார்க்சிசத்துக்கு புதியவர்கள். இருந்த போதிலும் அவர்கள் தினமும் ஆறு மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற விரிவுரைகளிலும் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடல்களிலும் அக்கறையுடனும் ஆர்வத்துடனும் கலந்து கொண்டனர். அத்தோடு தினமும் தலைநீட்டிய விவகாரங்கள் பற்றி கால நேரங்கடந்து சிலவேளைகளில் நள்ளிரவு வரையும் கூட இவை நீண்டு சென்றதுமுண்டு.

இந்த அனைத்துலகப் பாடசாலையை ஆரம்பித்து வைத்துப் பேசிய அவுஸ்திரேலிய சோசலிச சமத்துக் கட்சியின் தேசியச் செயலாளர் நிக் பீம்ஸ், இன்று முதலாளித்துவ அமைப்பை ஆட்டிப் படைத்துவரும் வரலாற்று நெருக்கடி பற்றியும் தொழிலாளர் இயக்கத்தில் ஒரு மாற்று முன்நோக்கின்மை பற்றியும் பாடசாலையின் கவனத்தை ஈர்த்தார்.

"ஒரு முடிவுக்கு வந்து கொண்டுள்ள இந்த நூற்றாண்டு பெரிதும் இரத்தம் தோய்ந்ததும் வரலாற்றில் குழப்பம் நிறைந்ததுமாகும். யுத்தம் , பாசிசம், பரந்த வேலையின்மை, வறுமை என்ற வடிவில் தலைதூக்கிய எந்த ஒரு பிரச்சினையும் இன்னமும் தீர்க்கப்படவில்லை. உண்மையில் அடுத்த நூற்றாண்டு அண்மித்துக் கொண்டுள்ள வேளையில் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக மூர்க்கமான முறையில் வெடித்த முதலாளித்துவ உற்பத்தி அமைப்பின் முரண்பாடுகள் மீண்டும் ஒரு தடவை முற்றிக் கொண்டுள்ளன." என்றார்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அனைத்து வேலைகளதும் பாடசாலை உட்பட மைய நோக்கம் எதிர்வரும் நூற்றாண்டில் தொழிலாளர் வர்க்கம் எதிர் கொள்ளும் மாபெரும் புரட்சிகரப் பணிகளுக்கும் சவால்களுக்கும் அதனை அரசியல் ரீதியில் மீள ஆயுதபாணி ஆக்குவதே என அவர் குறிப்பிட்டார்

"லியொன் ட்ரொட்ஸ்கியும் 20பதாம் நூற்றாண்டில் சோசலிசத்தின் தலைவிதியும் என்ற தலைப்பில் அனைத்துலகப் பாடசாலையின் தலைமை உரையை அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியின் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த் நிகழ்த்தினார். அது இந்தப் பாடசாலையின் மைய நோக்கினை தெளிவுபடுத்தியது. வரலாற்று நிர்ணயத்தில் நனவான அல்லது "அகநிலைக்" காரணி வகித்த மையப் பாத்திரத்தை அது தெளிவுபடுத்தியது.

வேறு எந்த ஒரு சகாப்தத்திலும் வெகுஜனங்கள் இவ்வளவு ஆர்வத்துடன் பிரமாண்டமான அளவிலும் உயர்ந்த மட்டத்திலான நனவுடனும் சமுதாயத்தை உருவமைப்பதில் பங்கு கொண்டது கிடையாது என டேவிட் நோர்த் சுட்டிக் காட்டினார். "முதல் தடவையாக மனித இனம் தனது நிகழ்ச்சி நிரலில் வர்க்க சமுதாயத்தை ஒழிப்பதை ஒரு நடைமுறைப் பணியாகச் சேர்த்துக் கொண்டது. வேறு வார்த்தைகளில் சொன்னால் மனிதன் வரலாற்றுக்கு முன்னைய மனித இனத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவர முயன்றான்."

இந்த நனவான போராட்டம் , 1917 ரூஷ்யப் புரட்சியில் உயர்ந்த வெளிப்பாட்டைக் கண்டது. வரலாற்றில் முதல் தடவையாக தொழிலாளர் வர்க்கத்தை ஆட்சியில் இருத்தியது.

ஒரு சமூகப்பிராணி என்ற வகையில் விதியினால் ஆளப்பட்ட மனித அபிவிருத்தியின் மிகவும் பலம் வாய்ந்த போக்குக்கள் எதிர்பார்ப்பு அளவில் மட்டும் இருந்து வந்தவை அக்டோபர் புரட்சியில் ஒரு அவசியமான வெளிப்பாட்டைப் பெற்றன. 1917ல் ஆரம்பமான அதைப் பூரணத்துவம் செய்து வைக்கும் ஒரு புதிய முயற்சியானது அந்த வார்த்தையின் மிகவும் ஆழமான அர்த்தத்தில் தவிர்க்க முடியாததாகியது.

ஆதலால் எமது காலத்தின் அதிமுக்கிய மான அரசியல், புத்திஜீவி பணியானது முதலாவது பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியான 1917 அக்டோபரையும் அதன் பின்னர் சோவியத் யூனியனுள் மட்டுமன்றி உலகம் பூராவும் ஆய்வு செய்வதாக விளங்க வேண்டும். இது அதன் மொத்தத்தில் 21ம் நூற்றாண்டில் தொழிலாளர் வர்க்கத்தை கோட்பாட்டு ரீதியிலும் நடைமுறை ரீதியிலும் நெறிப்படுத்துவதற்கான படிப்பினைகளை மார்க்சிஸ்டுகள் கற்பதற்கான மூலோபாய வரலாற்று அனுபவங்களின் தொகுதியினுள்ளான மிகவும் இன்றியமையாத மூலகத்தை பிரதிநிதித்துவம் செய்கின்றது."

"பூகோளமயமாக்கமும் அதன் வரலாற்று சிறப்பு முக்கியத்துவமும் புரட்சிகரத் தாக்கங்களும்" என்ற இரண்டாவது விரிவுரையை அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய செயலாளர் நிக் பீம்ஸ் நிகழ்த்தினார். முதலாளித்துவ அமைப்பின் அடிப்படை முரண்பாடுகளின் அடிப்படையில் ஆசியாவிலும் உலகம் பூராவும் தலைநீட்டியுள்ள பொருளாதார பெரு வீழ்ச்சிகளை நிக் பீம்ஸ் முன்வைத்தார்.

எல்லா உற்பத்திப் போக்கினதும் பூகோளமயமாக்கமானது எந்த விதத்தில் பூகோள பொருளாதாரத்துக்கும் தேசிய அரசுக்கும் இடையேயும் சமூக உற்பத்திக்கும் தனிப்பட்ட இலாபம் திரட்டலுக்கும் இடையேயுமான முரண்பாடுகளை முன்னொரு போதும் இல்லாத மட்டத்துக்கு உயர்த்தி உள்ளதை சுட்டிக் காட்டியதோடு, அது புதிய புரட்சிகரக் குமுறல்களுக்கு அத்திவாரமிடுவதாகவும் அவர் சொன்னார்.

"ஏகாதிபத்திய சகாப்தத்தில் சீர்திருத்தமும் புரட்சியும்" என்ற மூன்றாவது விரிவுரையை நிகழ்த்துகையில் டேவிட் நோர்த் கடந்த நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய சமூக ஜனநாயக இயக்கத்தில் தோன்றிய அரசியல் சந்தர்ப்பவாதத்தின் தத்துவார்த்த வேர்களை கிளறிக் காட்டினார். இவை மார்க்சிசம் மீதான எட்வார்ட் பேர்ண்ஸ்டீன் தாக்குதல் வடிவில் வெளிப்பட்டன.

"ரூஷ்யா எங்கே செல்கின்றது? ஒரு சமூகவியல் ஆய்வும் வரலாற்று முன்நோக்கும்" என்ற விரிவுரையை ரூஷ்ய மார்க்சிச வரலாற்றாசிரியர் பேராசிரியர் றொகோவின் நிகழ்த்தினார். முன்னைய சோவியத் யூனியனின் பிராந்தியங்களில் முதலாளித்துவ சொத்துடமை புனருத்தாரணம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார பேரழிவுகளை அவர் கோடிட்டுக் காட்டினார்.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் எழுச்சிக்கு எதிரான ட்ரொட்ஸ்கியினதும் இடதுசாரி எதிர்க் கட்சியினதும்( Left Opposition ) போராட்டத்தைப் பற்றி தாம் நடாத்திய பரந்த ஆராய்ச்சிகளைக் கொண்டு, முதலாளித்துவ காட்டுமிராண்டித் தனங்களுக்கு எதிரான ஒரு பரந்த சோசலிச இயக்கம் இல்லாது போனதற்கான காரணங்களை றொகோவின் ஆய்வு செய்கையில் ட்ரொடஸ்கியும் இடதுச்சாரி எதிர்க்கட்சியும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் எழுச்சிக்கு எதிராக நடாத்திய போராட்டம் சம்பந்தமாக தாம் நடாத்திய பாரிய ஆராய்ச்சிகளை மையமாக வைத்து பேசினார்.

1930பதுகளில் ஸ்டாலினிச அரசினால் அமுல் செய்யப்பட்ட ஒழித்துக்கட்டல் மார்க்சிசத்தின் தூண்களாக நின்ற மனிதர்களை துடைத்துக் கட்டுவதை இலக்காகக் கொண்டவை, சோவியத் , அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் நனவினுள் ஆழமானதும் பயங்கர மானதுமான தாக்கங்களை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டார்.

விரிவுரையின் போது றொகோவினுக்கு 1937 எனப் பெயர்கொண்ட அவரின் சமீபகால நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பின் முதலாவது அச்சுப் பிரதியும் வழங்கப்பட்டது. சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்துக்கு எதிரான போராட் வரலாற்றின் ஆறு தொகுதி படைப்பில் இது நான்காவதாகும். சோவியத் சோசலிச குடியரசு ஒன்றியத்தினுள் இருந்து வந்த பரந்த சோசலிச எதிர்ப்பின் எதிரில் கிரேம்ளின் அதிகாரத்துவத்தை பிடித்துக் கொண்டிருந்த அச்சத்தினை புரிந்து கொள்ள இந்த நூல் புதிய வெளிச்சம் பாய்ச்சுகின்றது.

அனைத்துலக குழுவின் சார்பில் பேராசிரியர் றொகோவினுக்கு இந்த நூலை வழங்கிய டேவிட் நோர்த், இருபதாம் நூற்றாண்டின் மூலோபாய அனுபவங்களைப் பறறிய மார்க்சிச ஆய்வுகளுக்கு தன்னை அர்ப்பணம் செய்து கொண்ட ஒரு அனைத்துலக மகாநாட்டில் இந்த வழங்கல் இடம்பெறுவது பெரிதும் பொருத்தமானது எனக் கூறிப்பிட்டார்.

றொகோவினின் நூல் அனைத்துலக தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் பிரமாண்டமான புத்திஜீவி தாக்கங்களை ஏற்படுத்தும் எனவும் ஸ்டாலினிஸ்டுகளும் கல்வி வட்டாரங்களைச் சார்ந்த அவர்களின் சகபாடிகளும் ஸ்டாலினிசத்தை மார்க்சிசத்துடன் இனங்காட்டி பல தசாப்தங்களாக பரப்பிவந்த பொய்களையும் திரிப்புக்களையும் சிதறடிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அடுத்த நாள் அனைத்துலகக் குழுவின் செயலாளரும் அதன் ஜேர்மன் பகுதியின் முன்னணி அங்கத்தவருமான பீட்டர் சுவார்ட்ல் இரண்டாம் உலக யுத்த சமரசங்களில் ஸ்டாலினிசம் வகித்த பாத்திரங்களை ஆய்வு செய்ததோடு கிழக்கு ஐரோப்பாவில் கிரேம்ளினால் அதிகாரத்துவ ரீதியில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட அரசுகளின் தன்மையை ஆய்வு செய்தார். அவரின் "கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசம்: ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்" என்ற விரிவுரை ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த அடிப்படை முரண்பாடுகளை ஆய்வு செய்தது.

மற்றும் இரண்டு விரிவுரைகள் இருபதாம் நூற்றாண்டின் தீர்க்கமான அனுபவங்களின் வெளிச்சத்தில் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டை ஆய்வு செய்தது. இந்தியாவினதும் சீனாவினதும் படிப்பினைகள் என்ற தலைப்பில் பேசிய இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் விஜே டயஸ் , தேசிய இனப் பிரச்சினை சம்பந்தமான ஆழமான ஆய்வுகளை முன்வைத்ததோடு ஆசியாவிலும் இந்தியத் துணைக்கண்டத்திலும் பிரமாண்டமான தோல்விகளுக்கு களம் அமைக்கும் விதத்தில் தொழிலாளர் வர்க்கத்தை தேசிய முதலாளி வர்க்கத்துக்கு கீழ்ப்படியச் செய்த ஸ்டாலினிஸ்டுகளின் கொள்கைகளை ஆய்வு செய்தார்.

அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சி ஏடான இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டீன் பத்திரிகையின் அனைத்துலக ஆசிரியரான பில் வான் "காஸ்ட்ரோவாதமும் குட்டி முதலாளித்துவ தேசிய வாதத்தின் அரசியலும்" என்ற தமது விரிவுரையில் காஸ்ட்ரோவாதத்தினதும், லத்தீன் அமெரிக்கா பூராவும் குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தின் அனைத்து வகையறாக் களதும் பேரழிவுமிக்க விளைவுகளைப் பற்றி ஒரு ஐந்தொகையை வரைந்தார்.

## கலை, கலாச்சாரம், சோசலிசம்

இந்த அனைத்துலக பாடசாலையின் உச்சக் கட்டமாக கலை, கலாச்சாரம், சோசலிசம் என்ற தலைப்பில் இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டீன் பத்திரிகையின் கலைத்துறை ஆசிரியர் டேவ் வோல்ஷ் நிகழ்த்திய விரிவுரை விழங்கியது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வரலாற்றில் இந்த விடயத்தைப் பற்றிய முதலாவது பகிரங்க விரிவுரை இதுவேயாகும். வோல்ஷ் கலைக்கும் தொழிலாளர் வர்க்கத்தினுள் ஒரு சோசலிச நனவு வளர்ப்பிற்கும் இடையேயான சிக்கலானதும் ஆழமானதுமான உறவுகளைத் திறந்து காட்டினார்.

சாஸ்த்ரீய் மார்க்சிஸ்டுகள் ஒரு அரசியல் வேலைத்திட்டத்தை வழங்குவதை விட மேலதிகமாகச் செய்துள்ளனர் என டேவ் வோல்ஷ் வலியுறுத்தினார். அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தின் பரந்த கலாச்சார, புத்திஜீவி அபிவிருத்திகளை உருவாக்கத் தள்ளப்பட்டனர். ஒரு புதியதும் நிஜமானதுமான மனித சமுதாயம் உருவாகுவதற்கு கலை வெளிப்பாடும் பரிசோதனைகளும் இன்றியமையாதவை என போல்ஷிவிக் கட்சியின் முன்னணி பேர்வழிகள் சுட்டிக்காட்டியதாக வால்ஷ் குறிப்பிட்டார்.

இந்த விரிவுரைகளையிட்டு கூட்டத்தினர் ஆர்வம் காட்டினர். ஒரு தொகை கேள்விகள் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இறுதியாக டேவிட் நோர்த் "தொழிற் சங்கங்களின் 150 வருடங்கள்: ஒரு மார்க்சிச மதிப்பீடு" என்ற விரிவுரையை நிகழ்த்தினார். தொழிற்சங்க வடிவிலான அமைப்புடன் மார்க்சிச இயக்கத்துக்கான நீண்டதும் கஷ்டமானதுமான அனுபவங் களின் மையப் படிப்பினைகளின் ஒரு வரலாற்று தொகுப்பை இது வழங்கியது.

இலாப அமைப்பு வடிவினுள் உழைப்புச் சக்தியை விற்பனை செய்வதற்கு ஒரு நல்ல விலையை பேரம்பேசுவதில் தொழிற் சங்கங்கள் எந்த விதத்தில் பிணைக்கப்பட்டுள்ளன என்பதை நோர்த் ஆய்வு செய்தார். இத்தன்மை காரணமாக இவை தொழிலாளா வர்க்கத்தின் புரட்சிகர அபிவிருத்திக்கு எதிரானவையாக விளங்கின.

இந்த விரிவுரைகள் ஒவ்வொன்றும் கேள்விகள், கலந்துரையாடல்கள், மேலாய பங்களிப்புகள் என்பவற்றை தோற்றுவித்தன. இவை எல்லாம் உயர்ந்த தரத்தினவாக விளங்கின. 4000 டாலர்களுக்கு மார்க்சிச இலக்கியங்கள் கொள்வனவு செய்யப்பட்டதைக் கொண்டு இது தொடர்பாக காட்டப்பட்ட அக்கறையை அளவிட்டுக் கொள்ள முடியும். பாடசாலையின் கடைசிக் கட்டத்தில் அவுஸ்திரேலிய் சோசலிச சமத்துவக் கட்சியின் அபிவிருத்தி நிதியாக திரட்ட தீர்மானித்த் 100000 டாலர் நிதிக்கு 20000 டாலர்கள் காசாகவும் வாக்குறுதிகளாகவும் கிடைத்தன.

சோசலிசத்துக்கான 60 ஆண்டுகள் போராட்டத்தின் பின்னர் 1997 நவம்பர் 24ம் திகதி மரணமான அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான ஜீன் பிரஸ்டிற்கு பாடசாலையில் அனைத்துலக காணிக்கை செலுத்தப்பட்டது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சகல பகுதிகளின் தோழர்களும் ஜீனின் அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியின் சக தோழர்களுடன் சேர்ந்து உலகக் கட்சியின் அபிவிருத்திக்கு ஆற்றிய அரும்பெரும் பங்களிப்புக்களை நினைவு கூர்ந்தனர். இந்த அனைத்துலகப் பாடசாலை அனைத்துலக குழுவின் முதிர்ச்சியையும் சக்தியையும் வளர்ச்சியையும் அத்தோடு தொழிலாளர் வர்க்கமும், மாணவர்களும் புத்திஜீவிகளும் நிஜ மார்க்சிசத்தின் பேரில் காட்டி வரும் அக்கறையின் அதிகரிப்பையும் எடுத்துக் காட்டியது. இது புரட்சிகர இயக்கத்தின் வரலாற்றில் ஒரு புதியதும் அதிர்ச்சியூட்டுவதுமான காலப் பகுதிக்கான அத்திவாரத்தை இட்டுள்ளது.

www.padippakam.com



# தோட்டத் தொழிலாளர் போராட்டப் படிப்பினைகளை பெற்று முன்நோக்கிச் செல்வோம்!

1ம் பக்கத் தொடர்ச்சி

தொழிலாளர்களுக்கு "ஆலோசனை" வழங்கியதாகத் தெரிவித்தனர். இவை அனைத்தும் சுட்டிக் காட்டுவது என்ன? யூ.என்.பி. தொண்டமான் தொழிற்சங்க கூட்டாக இருக்கட்டும் அல்லது ஐக்கிய தொழிற்சங்க கூட்டு முன்னணியாக இருக்கட்டும் சந்திரசேகரன், செல்லச்சாமி தொழிற் சங்கங்களாக இருக்கட்டும் இவை எல்லாமே தொழிலாளர்களுக்கு எதிரானவை. தொழிலாளர்களின் உரிமைகளை முதலாளி வர்க்கத்துக்கு பலி கொடுக்கும் அமைப்புக்கள் இவை.

தோட்டத் தொழிலாளர்கள் சம்பளமும் மற்றும் உரிமைகளும் வெற்றி கொள்ளக்கூடிய வேலைத்திட்டத்தை முன்வைத்து 13 நாட்கள் நடைபெற்ற தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தினுள் உத்சாகத்துடன் அரசியல் பிரச்சாரத்தை முன்னெடுத்தது சோசலீச சமத்துவக் கட்சியும் அதன் தொழிற்சங்கமான பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் மட்டுமே.

ரூபா.5000 மாதச் சம்பளமும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப அதிகரிக்கும் வாழ்க்கைப் படியுடன் கூடிய சம்பளமும் தொழில், வீட்டு வசதி, சுகாதார வசதிகளும் குடியுரிமையை உத்தரவாதம் செய்வதை உள்ளடக்கிய தோட்டத் தொழிலாளர்கள் நாகரீகமான வாழ்க்கையை நடாத்துவதற்கு அவசியமான கோரிக்கைகளை சோ.ச.க.வும் பெ.தோ.கை.தொ.ச.வும் மட்டுமே முன்வைத்துள்ளன. இலாபத்தைக் கறப்பதில் மட்டும் அக்கறை கொண்ட முதலாளித்துவ கம்பனிகள், இந்தக் கோரிக்கைகளை மட்டுமல்ல தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களின் சம்பளக் கோரிக்கையை வெட்டிக் கொத்தி சமர்ப்பித்த ரூபா.105 கோரிக்கையைத் தன்னும் வழங்க ஆயத்தம் இல்லை என நாம் கூறினோம்.

அனைத்துலக ஏகாதிபத்தியமும் அதற்குச் சேவகம் செய்யும் இலங்கை முதலாளி வர்க்கமும் தொழிலாளர்களை நசுக்கிக் கொண்டு உள்ள ஒரு நிலையில் தொழிலாளர்களின் உரிமைகளை பெறவேண்டுமானால் சோசலிச வேலைத் திட்டத்துக்கு போராட வேண்டும் என நாம் கூறினோம். அத்தோடு இந்தத் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் முதலாளித்துவ எஜமானர்களின் கைத்தேங்காயாகி உள்ள ஒரு நிலையில் சகல தோட்டங்களிலும் தொழிலாளர் நடவடிக்கை குழுக்களை அமைக்கும்படியும் இப்போராட்டத்தின் தலைமையாக சோசலிச சமத்துவக் கட்சியை கட்டியெழுப்பும் படியும் வேண்டினோம். இன்று இந்த சோசலிச வேலைத்திட்டத்தினை ஸ்தாபிதம் செய்வதனதும் கட்சியை கட்டியெழுப்புவதனதும் பிரமாண்டமான அவசியம் ஏற்பட்டுள்ளது. (சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் முன்னெடுத்த போராட்டத்தின் அறிக்கைகள் 10ம் 11ம் பக்கங்களில் பிரசுரமாகின்றன.)

தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் முதலாளிகளுடன் சூழ்ச்சிகளில் ஈடுபட்டு இருக்கையில் அனைத்துத் தொழிலாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்களின் ரூபா.125 சம்பளக் கோரிக்கையை சரி அரை வாசியாக வெட்டித் தள்ள, அந்த கோரிக்கையுடன் உடன்பட்டு நின்ற ஐக்கிய தோட்டத் தொழிற்சங்க முன்னணியும் ரூபா.115 கோரிக்கையை முன்வைத்த இ.தொ.கா யூ.என்.பி.கூட்டும் முதலாளிகள் சீறிப் பாய்ந்ததுதான் தாமதம் தலைகுனிந்து நின்றன. சகல தொழிற்சங்கங்களும் சேர்ந்து இந்தச் சம்பளக் கோரிக்கையை ரூபா.105 ஆக வெட்டிக் குறைத்தன. கொட்டகலை தோட்டத் தொழிலாளர்கள் 'தொழிலாளர் பாதை'க்கு கூறியதன்படி, "தொழிற்சங்கத் தலைவர்கள் இந்த சம்பளக் கோரிக்கையை முன்வைத்த போது அது தொழிலாளர்களுக்கு போதுமா என்று தன்னும் கேட்கவில்லை". இறுதியில் இந்த அதிகாரத்துவங்கள் அரசாங்கத்தினதும் தோட்ட முதலாளிகளதும் கட்டளைப்படி ரூபா.12 அதிகரிப்புடன் ரூபா.95 சம்பளத்திற்கும் ரூபா.6 போனசுக்கும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களைக் கீழ்ப்படுத்தும் உடன்படிக்கையைச் செய்து கொண்டுள்ளனர். இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைப்பது ரூபா.95 மட்டுமே. அத்தோடு தொழிற்சங்கத் தலைவர்கள் ஒன்றரை வருட காலத்துக்கு சம்பள உயர்வு கேட்கமாட்டோம் எனவும் இந்த உடன்படிக்கை மூலம் உடன்பட்டுள்ளனர். பரடைஸ் தோட்டத்தின் முத்துகுமாரன் என்ற தொழிலாளி கூறியது போல் "தலைவர்கள் சம்பளம் கேட்பது கம்பனி கொடுக்க விரும்பும் தொகையை ஏற்பதற்கே". ஆனால் இந்தக் கம்பனி முதலாளிகளும் அரசாங்கமும் கொடுக்க விரும்பும் தொகையில் தொழிலாளர்கள் ஜீவிக்க முடியாது. உண்மை நிலை அதுதான். முதலாளிகளும் தொழிற்சங்கங்களும் ஒரு பக்கமும் தொழிலாளர்கள் மறுபக்கமும் அணிதிரண்டு நின்று ஸ்தாபிதம் செய்த உண்மை இதுதான்.

## முதலாளிகள் உள்ளம் குளிர்ச்சி

தொழிற்சங்க அதிகாரத்துவங்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முடிந்ததையிட்டு முதலாளிகள் உள்ளம் குளிர்ந்துள்ளது. இந்த மகிழ்ச்சி பிரவாகம் நாலாதிசையிலும் வெளிப்பட்டு உள்ளது. முதலாளிமார் சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகம் பிராங்கிளின் அமரசிங்க கூறியதாவது: "பேச்சுவார்த்தைகளின் இலக்கு சம்பந்தமாக ஐக்கியப் படுவதில் பிரமாண்டமான பொறுப்புடன் செயற்பட்டுள்ளனர் என்பதை ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது." தொண்டமான் "வெற்றியைப் பிடுங்கிக் கொள்ளும் வித்தை அறிவார்" என சண்டே டைம்ஸ் (பெப்பிரவரி 15) பத்திரிகை அவரின் தோளில் கைபோட்டபடி கூறியுள்ளது. முதலாளித்துவ ஐலண்ட் பத்திரிகையும் தொண்டமானை அந்த விதத்திலேயே புகழ்ந்துள்ளது. தொழிலாளர்களின் கொதிப்பு எரிமலையாகிக் கொண்டு இருந்த நிலையில் துரோக "தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் புண்ணியத்தினால் தப்பினோம்" என முதலாளிகள் மனது ஆறுதல் அடைவது நிச்சயம்.

கடந்த யூ.என்.பி.அரசாங்கத்தைப் போலவே இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கமும் தொழிலாளர்களின் முதலாம் நம்பர் எதிரி என்பது மீண்டும் அம்பலமாகி உள்ளது. தோட்டத் தொழில்ாளர்களின் சம்பளத்தின் குரல்வளையை ரூபா.95ல் நெரித்து வைக்க அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதில் ஜனாதிபதி நேரடியாகத் தலையிட்டார்.

"எஸ்.தொண்டமான், பீ.சந்திரசேகரன் என்ற அமைச்சர்களின் தலைமையிலான தொழிற்சங்கங்களைப் போலவே இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமும் 14 தோட்ட தொழிற்சங்கங்களைக் கொண்ட தோட்டத் தொழிற்சங்கக் கூட்டு கமிட்டியும் தோட்டத் துறையில் போராட்டத்தில் தலையிட்டன" எனக் கூறி நவசமசமாஜக் கட்சி தோட்டத் தொழிலாளர்களை காட்டிக் கொடுத்து, உடன்படிக்கையைத் திணித்த அதிகாரத்துவத்துக்கு பந்தம் பிடித்துள்ளது.

இதற்கிடையே பாசிச ஜே.வீ.பி.புதிய கீதம் இசைத்துக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களிடையே ஊடுருவ முயற்சிக்கின்றது. "நாள் சம்பளத்தை ரூபா.22ஆல் அதிகரிக்கும்படி நீண்ட காலமாக விடுத்துவந்த கோரிக்கைக்கு தோட்ட முதலாளிகள் ஆதரவு காட்டாததால் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக ஜே.வீ.பி.யின் 'ரத்து லங்கா' என்ற பத்திரிகை முனகிக் கொண்டுள்ளது. கடந்த காலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக மக்கள் படுகொலை நச்சு இயக்கத்தில் தாம் ஈடுபட்டுவந்ததை மூடிமறைக்க இவர்கள் முயற்சிக்கின்றார்கள். 1970ல் தோட்டத் தொழிலாளர்களை "கள்ளத் தோணிகள்," "இந்திய விஸ்தரிப்புவாதிகள்" இலங்கைக்கு கொலராவைக் கொண்டு வந்தவர்கள்" என்றெல்லாம் தாக்கி வந்த இந்த அமைப்பு 1988 90ல் எத்தனை தோட்ட பக்டரிகளுக்கு தீமூட்டியது? தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டியது. இந்தச் சகல பிற்போக்காளர்களிடம் இருந்தும் தொழிலாளர் வர்க்கம் விடுபட்டு, தமது மாற்று சோசலிச முன்னோக்கைச் சூழ அணிதிரள வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்கள் உற்பத்தியின் பூகோளமயத்துடன் ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்களும் அவர்களுடன் இணைந்து கொண்ட தேசிய முதலாளி வர்க்கம் எனப்படுவதும் தொழிலாளர்களை சுரண்டுவதை உக்கிரமாக்கி இலாப மூட்டை கட்டும் தாக்குதலை உக்கிரமாக்கிக் கொண்டுள்ள ஒரு நிலையிலேயே இதற்கு முகம் கொடுத்துள்ளனர். தனியார்மயத்தின் கீழ் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகள் இலாபம் கறக்க தோட்டங்களை விற்றுத் தள்ளுவதும் விலைவாசிகளை உயர்த்துவதும் நலன்புரி சேவைகளை வெட்டுவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை தாக்குவதும் வேலையைத் துரிதப்படுத்துவதும் தொழில்களை வெட்டுவதும் இளைஞர் வேலையின்மையை அதிகரிப்பதும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் அதன் இலங்கைத் தரகர்களும் தொழிலாளர் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள பேரழிவுகளாகும்.

உலக முதலாளித்துவம் இப்போது ஆழமான நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது. பெரும் பொருளாதாரப் புலிகள் என அழைக்கப்பட்ட தென்கொரியா, மலேசியா, இந்தோனேஷியா, தாய்லாந்தின் நாணயங்களின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. இது அந்த நெருக்கடியையே பிரதிபலிக்கின்றது. தோட்டக் கைத்தொழிலின் தொழிலாளர்களை இந்த நெருக்கடி எப்படிப் பாதிக்கின்றது என்பது ஏற்கனவே வெளிப்பட்டுள்ளது. மலேசியாவினதும் இந்தோனேஷியாவினதும் இறப்பர் விலை உலக சந்தையில் வீழ்ச்சி கண்டதால் இலங்கை இறப்பர் விலை இறங்கி உள்ளது. இறப்பர் தொழிலாளர்களுக்கு அந்த சொற்ப ரூபா.6 போனசையும் வழங்க முடியாது என தோட்டக் கம்பனிகள் கையை விரித்துள்ளது இதைச் சாட்டாக வைத்தேயாகும்.

தேயிலை, தெங்கு, இறப்பர் விலைகள் உலகச் சந்தையில் ஏறி இறங்குவதால் சம்பள உயர்வு வழங்க முடியாது என்பதே தோட்டக் கம்பனிக்காரர்களின் வாதமாக உள்ளது. இப்போது "ஒரு கிலோ தேயிலையின் உற்பத்தி செலவில் நூற்றுக்கு 60 70 வீதம் உழைப்புக்காக செலவிடப் படுகின்றது." எனக் கூறி உழைப்புச் செலவை வெட்டித் தள்ள தோட்டக் கம்பனிகள் வெறி கொண்டு அலைகின்றன. அவை உற்பத்தி விளைதிறனை அதிகரிக்கவும் தொழிலாளார்களின் தொழில்களை வெட்டவும் நிச்சயம் இறங்குவர். உடன்படிக்கையினால் "நீண்டகால இலாபம் உண்டு" எனக் கூறி முதலாளித்துவ தோட்டக் கம்பனிகள் தயாராகுவது இந்த வேலைத்திட்டத்தை அமுல் செய்யவே.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் இரண்டு துட்டு சம்பள உயர்வு கிடைத்த தோட்டத் தொழிலாளர்கள் ஆகட்டும் மற்றும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களாகட்டும் எவரும் சகித்துக் கொள்ள முடியாத சுரண்டலுக்கும் வாழ்க்கைத்தர வெட்டுக்கும் இலக்காகி உள்ளனர். இந்த முழுத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களும் தமது உரிமைகளைக் காக்க பிரமாண்டமான போராட்டங்களில் இறங்குவர் என்பது தோட்டத் தொழிலாளர்கள் 1998ன் முற்பகுதியில் விடுத்துள்ள செய்தியாகும். ஆதலால் இனவாத யுத்தத்தின் மூலம் வடமாகாண மக்களை ஒழித்துக் கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அரசாங்கம் தெற்கில் இராணுவ பொலிஸ் அடக்குமுறைச் சக்திகளையும் பாசிச குண்டர் சக்திகளையும் அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை உக்கிரமாக்கும்.

விடுதலைப் புலிகள் தோட்டத்துறையினுள் நுழைந்து கொண்டுள்ளதாக முதலாளி வர்க்கம் செய்து வரும் பிரச்சாரம் இந்த அடக்குமுறை இயக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஆயுதமாக்கிக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியச் சார்பு விடுதலைப் புலிகள் தோட்டத் துறையினுள் ஊடுருவ செய்யும் முயற்சிகளையிட்டு விழிப்பாக இருக்கும்படி நாம் தொழிலாளர்களை வேண்டுகின்றோம்.

தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் எதிரில் அரசியல் பிரச்சினை இருந்து கொண்டுள்ளது. இலாபம் கறக்கும் முதலாளிகளின் அவசியங்களுக்கு ஏற்ற வகையில் அன்றி, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை காக்கும் விதத்தில் பொருளாதாரத்தை மறுசீரமைப்புச் செய்ய வேண்டும். இது எந்த அளவிற்கு உக்கிரமான முறையில் தோட்டத் துறையில் தோன்றி உள்ளது? தோட்டச் சொந்தக் காரர்கள் கோடிக் கணக்கில் இலாபம் சம்பாதிக்கின்றார்கள். ஆனால் தொழிலாளர்களுக்கு அன்றன்றாடைத் தேவைகளை ஈடுசெய்யக் கூடிய சம்பளமும் கிடையாது. ஒடுக்கப்படும் மக்களது ஒத்துழைப்புடன் நடாத்தும் போராட்டத்தின் மூலம் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்ந்து, அனைத்து உற்பத்திச் சாதனங்களையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கி பொதுமக்களின் அவசியங்களை இட்டுநிரப்பும் ஒரு சோசலிச அடிப்படையில் மறுசீரமைப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் அதனாலேயே தலைநீட்டுகின்றது. இது அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைந்து தொடுக்க வேண்டிய ஒரு போராட்டமாகும். அதற்கு சமசமாஜ, ஸ்டாலினிச, இ.தொ.கா, நவசமசமாஜ, தொழிற்சங்க துரோகிகளை வெளியேற்றி, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே சோசலிச வெகுஜன இயக்கத்தை கட்டியெழுப்புவது அவசியமாகியுள்ளது. முதலாளித்துவ அரசியலில் இருந்து விடுபட்டு, இந்த வெகுஜன இயக்கத்தை கட்டியெழுப்ப சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# நீர்கொழும்பு ஆஸ்பத்திரி ஊழியர் போராட்ட படிப்பினைகள்

சாலிய பெரேரா

நீர்கொழும்பு அடிப்படை ஆஸ்பத்திரியின் 20 சுகாதார ஊழியர்களின் வேலை நீக்கத்துக்கு எதிராக சோசலிச சமத்துவக் கட்சியும் சுகாதார ஊழியர் நடவடிக்கைக் குழுவும் நடாத்திய போராட்டத்தின் பெறுபேறாக அவர்கள் தமது காத்துக் கொள்வதில் வெற்றி கண்டனர். இந்த வெற்றி முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகள் மூலமோ அல்லது நெருக்குவாரம் கொடுப்பதன் மூலமோ அல்லது சீர்திருத்தவாத வேலைத்திட்டத்தின் மூலமோ கிடைக்கவில்லை. மாறாக முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராகவும் தொழிற்சங்கத் தலைவர்களில் இருந்தும் முதலாளித்துவ தலைவர்களில் இருந்தும் சுயாதீனமாக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் முன்னெடுத்த பிரச்சாரத்தின் மூலமே வெற்றி கிட்டியது.

தொழில் உரிமையைக் கட்டிக் காத்ததன் மூலம் எவரும் முதலாளித்துவ ஆட்சியாளர்கள தொழிலாளர்களின் அனைத்து உரிமைகளையும் வழங்கி விடுவார்கள் என்றோ அல்லது தொழிலாளர்களின் தொழில் உரிமை காக்கும் போராட்டம் இத்துடன் முற்றுப் பெற்றுவிட்டது என்றோ எண்ணிவிடக் கூடாது.

கடந்த நவம்பர் 26ம் திகதி இந்த ஆஸ்பத்திரியின் 20 ஊழியர்கள் எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் மேற்கு மாகாண சுகாதார அமைச்சர் லக்ஷ்மன் அபேகுணவர்தனவின் உத்தரவின் பேரில் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். முன் அறிவித்தல் இல்லாமல் சேவைக்கு வருகை தராமையே இத்தொழிலாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டாக இருந்தது. ஆனால் இது முழுப் பொய். இந்தத் தொழிலாளர்களில் சிலர் இரவு வேலைக்கு வர இருந்தவர்கள். சிலர் அன்றைய தினம் கிழமை விடுமுறை எடுத்துக் கொண்டவர்கள். வேறு சிலர் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறையில் நின்றவர்கள். சாதாரண சேவை விதிமுறைகளை கணக்கிச் எடுக்காமல் இந்த வேட்டை இடம்பெற்றுள்ளது. உண்மையில் இந்த வேட்டை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தனியார்மயமாக்கத்தினதும் தொழில் வெட்டினதும் ஒரு பாகமாகவே இடம் பெற்றுள்ளது. இது இலவச சுகாதார சேவைக்குத் தொடுக்கும் தாக்குதலின் மற்றொரு பாகமாகும்.

நாட்டின் பல ஆஸ்பத்திரிகளில் பாதுகாப்பு பகுதியும் கொழும்பு றாகமை தேசிய ஆஸ்பத்திரிகளில் சுத்திகரிப்பு வேலையும் தனியார் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இன்னும் பல இடங்களில் தொழிலாளர் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்கு மாகாண சபைக்குட்பட்ட ஆஸ்பத்திரிகளில் ஊழியர்கள் பல இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு பழிவாங்கலுக்கு உள்ளாகி வருகின்றனர். நீர்கொழும்பு ஆஸ்பத்திரி ஊழியர்கள் வேலைநீக்கம் இலவச சுகாதார சேவையை ஒழித்துக் கட்டும் வேலையின் ஒரு பாகமாகவே இடம் பெற்றுள்ளது.

தமது தொழில்களைக் காக்கும் போராட்டத்தில் அக்கரை காட்டிய தொழிலாளர்களுக்கு எதிராக பொதுஜன முன்னணி ஆதரவு சிறீலங்கா சுதந்திரக் கட்சி சுகாதார ஊழியர் சங்கத் தலைவர்கள் ஆஸ்பத்திரி அதிகாரிகளுடன் சேர்ந்து கொண்டனர். ஊழியர்கள் போராட்டம் வளர்ச்சி காண்பதைத் தடுக்க விரும்பிய நவசமசமாஜக் கட்சி, இலங்கை குடியரசு சுகாதார ஊழியர் சங்கம் பேச்சுவார்த்தைகள் மூலம் தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நப்பாசையை விதைத்தது. இதன் மூலம தொழிலாளர்களை அமைச்சு அலுவலகங்களைச் சுற்றி அலைய வைத்தது. அமைச்சு அதிகாரிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளில் தொழில் வழங்க அவர்கள் மறுத்ததோடு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் பேச்சுவார்த்தைகளை தட்டிக்கழித்துவிட்டு தலைமறைவானார்.



ஆஸ்பத்திரி ஊழியர்களின் தொழில் உரிமையைக் காக்க சோ.ச.க.நடாத்திய மறியல் போராட்டம்

ஜே.வீ.பி.யின் பாசிஸ்டுகள் ஆஸ்பத்திரி எதிரில் நடாத்திய பிரச்சாரத்தில் □மறியல் நடாத்தி அவர்கள் சொல்வது போல் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இந்த வேலை இடை நிறுத்தத்தை செய்த நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும் □ எனக் கூறி வந்தனர். இந்த நச்சுப் பிரச்சாரங்களுக்கு மத்தியிலும் சோசலிச சமத்துவக் கட்சி வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுடனும் பல்வேறு துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுடனும் சேர்ந்து மறியல் போராட்டத்தை வெற்றிகரமாக நடாத்தியது.

அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக ஆஸ்பத்திரி ஊழியர் நடவடிக்கை குழு, இலவச ஆஸ்பத்திரி சேவையைக் காக்க நடாத்திவரும் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். அபபிவிருத்தி செய்ய வேண்டும்.


## மார்க்சிசமும் இருபதாம் நூற்றாண்டின் பிரச்சினைகளும்

### ஒன்பது விரிவுரைகள்

1. லியொன் ட்ரொட்ஸ்கியும் இருபதாம் நூற்றாண்டின் சோசலிசத்தின் தலைவிதியும்
2. பூகோளமயமாக்கமும் வரலாற்று அர்த்தமும் புரட்சிகரத் தன்மையும்
3. சீர்திருத்தவாதமும் புரட்சியும்-பேர்ண்ஸ்டீனிற்கு எதிரான போராட்டமும் வரலாற்று முன்நோக்கும்
4. கிழக்கு ஐரோப்பாவில் ஸ்டாலினிசம்: ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்.
5. நிரந்தரப் புரட்சி--இந்தியாவிலும் சீனாவிலும் அதன் படிப்பினைகள்.
6. நிரந்தரப் புரட்சி-காஸ்ட்ரோவாதமும் குட்டி முதலாளித்துவ தேசியவாதமும்
7. தொழிற்சங்கங்களின் 150 ஆண்டுகள்- ஒரு மார்க்சிச மதிப்பீடு
8. கலை, கலாச்சாரம், சோசலிசம்
9. சோசலிச சமத்துவமும் புரட்சிக் கட்சியின் வேலைத்திட்டமும்

| சிலாபம் மெல்புர சனசமுக நிலையம் | கம்பஹா சபத மாவத்த | கொழும்பு பொது நூல் நிலையம் |
|---|---|---|
| மார்ச் 15 | மார்ச் 22 | மே 10 |
| மார்ச் 29 | ஏப்பிரல் 05 | மே 24 |
| ஏப்பிரல் 5 | ஏப்பிரல் 26 | ஜூன்07 |
| ஏப்பிரல் 12 | மே 10 | |
| ஏப்பிரல் 26 | மே 24 | |
| மே 17 | ஜூன் 7 | |
| மே 31 | ஜூன் 21 | |
| ஜூன் 21 | ஜூலை 5 | |
| ஜூலை 5 | ஜூலை 19 | |

சோசலிச சமத்துவக் கட்சி
மாத இதழ்




சந்தாதாரர் ஆகுங்கள்

சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு 10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . திகதி

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220


90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்